# சஞ்சீவி

விலை ரூபா 8-00

மலை: 6 வள்ளுவர் ஆண்டு 2028 ஆடி 10 சனிக்கிழமை (26-07-1997) SANJEAVY - Regenerative Tamil Weekly சிகரம்: 8


# புலிகள் - கடற்படையினர் முல்லைக் கடலில் சமர்!

கொழும்பு, ஜூலை 26

**முல்லைத்தீவுக்கும் திருகோணமலை புல்மோட்டைக்கும் இடையேயுள்ள கடற்பகுதியில் நேற்றுக் காலை கடற்புலிகளுக்கும் கடற் படையினருக்கும் இடையில் சுமார் 7 மணி நேரம் கடும் சமர் இடம்பெற்றது.**

கடற்புலிகளின் 25 படகுகளைக் கண்ட படையினர் அவற்றின் மீது தாக்குதல் நடத்தியதாகவும் —

புலிகளின் மூன்று படகுகள் மூழ்கடிக்கப்பட்டதாகவும் —

15 புலிகள் வரை கொல்லப்பட்டதாகவும் —

இராணுவத் தரப்புச் செய்திகள் தெரிவித்தன.

இத்தாக்குதலில் இரு கடற்படைப் படகுகள் சேதமுற்றதாகவும் —

இரு கடற்படையினர் காயமுற்றதாகவும் —

அரசுத் தரப்புச் செய்திகள் தெரிவித்தன.

தாம் நடத்திய தாக்குதலில் கடற்படைப் படகு ஒன்று சேதமுற்றது என்று மட்டும் புலிகளின் குரல் நேற்றிரவு அறிவித்தது.

பெரும் கடற்சமர் நடைபெற்றதை ஊர்ஜிதப்படுத்த முடிந்த போதிலும் இழப்புகள் குறித்து சரியான தகவல்களைப் பெற முடியவில்லை. (உ-3-5-10-164)

## வல்லை பாலியல் வல்லுறவு விவகாரம் நீதிமன்றில்!

யாழ்ப்பாணம், ஜூலை 26

வல்லையில் கடந்த 12ஆம் திகதி இடம்பெற்ற பாலியல் வல்லுறவு முறைப்பாடு தொடர்பான வழக்கு நேற்று நெல்லியடிப் பொலீஸாரால் யாழ். நீதிமன்றத்திற்குக் கொண்டு வரப்பட்டது.

இவ்வழக்கின் எதிரிகளான இரு இராணுவச் சிப்பாய்கள் ரட்ணாயக்கா, வி. வி. சமன் குமார ஆகியோர் சக இராணுவத்தினரால் பலமாகத் தாக்கப்பட்டு பலாலி இராணுவ ஆஸ்பத்திரியில் சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டிருப்பதாக பொலீஸாரால் தெரிவிக்கப்பட்டது.

எதிரிகளை எதிர்வரும் முதலாம் திகதி நீதிமன்றத்தில் ஆஜர் செய்யும்படியும் —

அன்றையதினம் சட்டத்தரணியும், உத்தியோகப்பற்றற்ற நீதிவானுமான கே. கேசவன் அடையாள அணிவகுப்பை நடத்த வேண்டும்

(6ஆம் பக்கம் பார்க்க)

## 5 கட்சி கூட்டமைப்பிலிருந்து விலக ரெலோ முடிவு?

கொழும்பு, ஜூலை 26

ஐந்து தமிழ்க் கட்சிகளின் கூட்டமைப்பிலிருந்து 'ரெலோ' வெளியேறும் எனத் தெரியவருகின்றது.

ஈ. பி. டி. பி., ஈ. பி. ஆர். எல். எவ்., ஈரோஸ், புளொட், ரெலோ ஆகிய ஐந்து கட்சிகளும் சேர்ந்து கூட்டமைப்பு ஒன்றை ஏற்படுத்தியிருப்பது தெரிந்ததே.

அக்கூட்டமைப்பில் இருந்தே ரெலோ விலகவிருக்கின்றது.

"வடக்கு—கிழக்கு இணைப்பிலிருந்து விலகி, கிழக்கின் கணிசமான பகுதியை தனியாக விட்டுக் கொடுக்க ஏனைய நான்கு கட்சிகளும்

(6 ஆம் பக்கம் பார்க்க)

### பிரபல இராணுவ விமர்சகர்

## இக்பால் அத்தாஸுக்கு கொலைப் பயமுறுத்தல்!

கொழும்பு, ஜூலை 26

பிரபல இராணுவ விமர்சகர் இக்பால் அத்தாஸுக்கு கொலை அச்சுறுத்தல் விடுக்கப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

யுத்த ஆயுதக் கொள்வனவு ஊழல்கள் மற்றும் இராணுவ நடவடிக்கைகள் குறித்து பல விமர்சனக் கட்டுரைகளை 'சண்டே ரைம்ஸ்' வார இதழில் வரைந்து வருபவர் அத்தாஸ்.

அரசுப் படைகளுக்கு மோட்டார் ஷெல்களைஏற்றி வந்த கப்பல் அண்மையில் இடைவழியில் காணாமல் போனது பற்றிய தகவலை முதலில் அம்பலப்படுத்தியவரும் இவரே.

தமது நடவடிக்கைகள், தம்மிடம் வருவோர் போவோர்—தம்முடன் தொடர்பு கொள்வோர் அனைவரும் கண்காணிக்கப்படுவதாக அத்தாஸ் தெரிவித்திருந்தார்.

ஆயுதக் கொள்வனவு ஊழல்களை அம்பலப்படுத்தியது தொடர்பாக விமானப் படையைச் சேர்ந்த சிலர் அத்தாஸின் வீட்டுக்குச்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## லாலு இராஜினாமா! மனைவி முதல்வரானார்!!



பட்னா, ஜூலை 26

பலகோடி ரூபா கால்நடைத் தீவன ஊழல் வழக்கில் சிக்கியுள்ள பீஹார் மாநில முதலமைச்சர் லாலு பிரசாத் யாதவ் இறுதியாக நேற்றுத் தமது பதவியை ராஜினாமாச் செய்தார்.

லாலுவின் ராஜினாமாவை அடுத்து அவரது இடத்துக்கு அவரது துணைவியாரான திருமதி ராப்ரிதேவி புதிய முதலமைச்சராகப் பதவியேற்றார்.

அதன் பின்னர் அவரது தலைமையில் 16 பேர் கொண்ட அமைச்சரவை பதவியேற்றது.

இதற்கிடையில் —

கால்நடைத் தீவன ஊழல் வழக்கில் லாலு பிரசாத்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## மீனவர் மீது தாக்குதல்: தமிழகத்தில் அதிருப்தி அலை

கொழும்பு, ஜூலை 26

இலங்கைப் படையினரால் இந்திய மீனவர்கள் படுகொலை செய்யப்படுவதைக் கண்டித்து அ. தி. மு. க., சுப்பிரமணிய சுவாமியின் ஜனதாக்கட்சி ஆகியவை நாளை மறுதினம் சென்னையில் உள்ள இலங்கைத் துணைத் தூதர் அலுவலகத்தின் முன்னால் ஆர்ப்பாட்டம் செய்யவிருக்கின்றன.

இந்திய மீனவர்கள் தாக்கப்படுவது குறித்து நேற்று இந்திய இராஜ்ய சபையில் காரசாரமாகக் குரல் எழுப்பப்பட்டது.

ஏழு மாதங்களில் 54 இந்திய மீனவர்கள் இவ்வாறு கொல்லப்பட்டதாக அங்கு சுட்டிக்காட்டப்பட்டது.

(உ-3-21)

## 24 பேர் கைது

வவுனியா, ஜூலை 26

வவுனியா ஓமந்தைப் பகுதியில் நொச்சிக்குளம், சேமமடு ஆகிய இடங்களைச் சேர்ந்த 24 பேர் கடந்த சில தினங்களுக்கு முன் தமது வீடுகளை பார்க்கச் சென்ற சமயம் இராணுவத்தினால் கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்களில் அதிகமானோர் இளைஞர்கள்.

இவர்களைக் கைது செய்த படையினர் பின்னர் வவுனியா ரயில் நிலைய இடைத் தங்கல்முகாமில் அவர்களைக் கொண்டு சென்று ஒப்படைத்துள்ளனர். (உ-ஐ)

## பொலீஸுக்கு ஆள்சேர்ப்பு

கொழும்பு, ஜூலை 26

பொலீஸ் சப் இன்ஸ்பெக்டர்கள், கான்ஸ்டபிள்கள் மற்றும் அதிரடிப் படைப் பிரிவுகளுக்கு புதியவர்களைச் சேர்த்துக் கொள்வதற்கான விண்ணப்பங்களை பொலீஸ் தலைமைக் காரியாலயம் கோரியுள்ளது. (உ-3-150)

### தமிழகம் என்று கூறி

## தலைமன்னாரில் அகதிகளை இறக்கிய படகோட்டிகள்!

வவுனியா, ஜூலை 26

வன்னியில் இலுப்பைக் கடவை என்ற இடத்தில் இருந்து தமிழ் நாட்டிற்கு அழைத்துச் செல்வதாகத் தெரிவித்து 47 அகதிகளை ஏற்றிச்சென்ற சில படகோட்டிகள், அவர்களைத் தலைமன்னாரில் தரையிறக்கி விட்டுத் தலைமறைவாகியுள்ளனர்.

இவ்வாறு இறக்கிவிடப்பட்ட அகதிகளில் பெண்கள், குழந்தைகள், கர்ப்பிணிகள், வயோதிபர்கள் பலரும் அடங்குவர்.

இந்தியக் கரையை அடைந்து விட்டதாகக் கூறி இவர்களை தலைமன்னாரில் இறக்கிவிட்ட படகோட்டிகள் பின்னர் தலைமறைவாகி விட்டனர்

நிர்க்கதியாக விடப்பட்டிருந்த இவர்கள் பின்னர் தலைமன்னார் பொலீஸாரால் கைது செய்யப்பட்டு மன்னார் மாவட்ட நீதிவான் மு. திருநாவுக்கரசு முன்னிலையில் நேற்று ஆஜர் செய்யப்பட்டனர். அவர்களை எச்சரிக்கை செய்த நீதிவான் மன்னார் அரச அதிகாரிகளிடம் அவர்களை ஒப்படைக்குமாறு உத்தரவிட்டார்.

## பேச்சு மூலம் தீர்வுக்கு பெனாஸிர் வற்புறுத்து

கொழும்பு ஜூலை 25

"இலங்கை இனப்பிரச்சினைக்கு பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காண்பதே பொருத்தமானது" —கொழும்பு வந்திருக்கும் பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் பெனாஸிர் பூட்டோ இவ்வாறு தெரிவித்தார்.

ஐ. தே. க. நாடாளுமன்ற உறுப்பினர் அநுரா பண்டாரநாயக்காவின் அரசியல் வாழ்வின் 20 ஆவது ஆண்டு நிறைவு நிகழ்ச்சியில் கலந்து கொள்ள இலங்கை வந்துள்ள அவர் தனியார் வானொலிக்கு அளித்த பேட்டியில் மேற்சண்டவாறு தெரிவித்தார்.

"ஒரே குடும்பத்தின் உறுப்பினர்களிடையே அரசியல் கருத்து வேறுபாடு இருக்கக் கூடாது-" என்றும் அவர் தெரிவித்தார்.

"பயங்கரவாத ஒழிப்புக்கு யுத்த உதவிகோரும் எந்த நாட்டு அரசுக்கும் பாகிஸ்தான் உதவி வழங்கும் -" என்றும்அவர் குறிப்பிட்டார்.

(உ-21-3)

# பயணிகள் சேவைக்கு புதிய கப்பல் ஏற்பாடு!

திருகோணமலைக்கும் காங்கேசன்துறைக்கும் இடையில் பயணிகள் சேவையில் ஈடுபடுத்த "குட்வில் கைட்" என்ற கப்பல் வாடகைக்கு அமர்த்தப்பட்டுள்ளதாகவும் —

அக்கப்பலைத் திருகோணமலைக்கு அனுப்ப ஏற்பாடுகள் நடப்பதாகவும்—

கொழும்பில் இருந்து தகவல் கிடைத்துள்ளது என்று திருகோணமலை பட்டணமும், சூழலும் பிரிவு பிரதேச செயலர் வேலும்மயிலும் நேற்றிரவு உதயனுக்குத் தெரிவித்தார்.

இந்தப் புதிய கப்பல் நேற்றுக் காலை திருகோணமலைக்குப் புறப்படவிருந்ததாகத் தகவல் கிடைத்தது என்றும் —

எப்போது இக்கப்பல் திருமலை வந்து சேரும் என்று கூறமுடியாதுள்ளது என்றும்- மேலும் தெரிவிக்கப்பட்டது.

பயணிகள் கப்பல் சேவையைக் கரையில் இருந்து 40 மைல்களுக்கு அப்பால் நடத்த வேண்டும் என்று பாதுகாப்பு அமைச்சு விடுத்துள்ள உத்தரவையடுத்து —

அது குறித்து கப்பல் நிறுவனத்துக்கும் கப்பல் சிப்பந்திகளுக்கும் இடையில் பேச்சுக்கள் கொழும்பில் இடம் பெறுவதாக மற்றொரு செய்தி தெரிவித்தது.

புதுமையும் எழிலும் [illegible] பல்சுவை வார இதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரங்கள்

## இறைச்சிக்கோழி

இறைச்சிக்கோழி புறோயிலர் (Broiler) விற்பனைக்கு உண்டு. தொடர்பு சு. சிவானந்தன், இல. 409, கோயில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். (48556)

இறைச்சிக் கோழி விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 153, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (மனோகரா தியேட்டர் அருகாமையில்). (48588)

புறோயிலர் இறைச்சிக் கோழி விற்பனைக்குண்டு தொடர்பு: இல; 101, பலாலி வீதி. (இலுப்பையடிச் சந்தி அருகாமை) யாழ்ப்பாணம். (48543)

இறைச்சிக்கோழி (Broiler) விற்பனைக்கு உண்டு. தொடர்பு: இல. 15, மேமோறியல் லேன், மானிப்பாய். (48582)

இறைச்சிக் கோழி (Broiler) விற்பனைக்குண்டு. சுத்தம் செய்து கொடுக்கப்படும். தொடர்பு; No. 68, Old Park Road, Jaffna, [48590]

இறைச்சிக்கோழி (Brolier) கிலோ ரூபா 160 க்கு விற்பனைக்கு உண்டு. தொடர்பு இல—86 கோயில் வீதி, யாழ்ப்பாணம். [C/1193]

## விற்பனைக்கு

ஒருமாத நல்லின பேட்டு கோழிக்குஞ்சுகள் விற்பனைக்குண்டு. உடன் தொடர்பு கொள்ளவும். வட்டுக்கோட்டை கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கம், (வ.உ) வட்டு கிழக்கு, சித்தங்கேணி. (48589)

நல்ல நிலையில் உள்ள T. V. 2032 (கலர்) டெக் (F)பான், Stand பான், விற்பனைக்குண்டு தொடர்பு; சோ. நடராஜா பழைய தபாற் கந்தோர், நீர்வேலி வடக்கு. (48567)

நல்ல நிலையில் உள்ள சோலர் விற்பனைக்குண்டு. தொடர்பு: தியாகு கடை, சங்கத்தானை, சாவகச்சேரி. (சி/1195)

சிறு பிள்ளைகளின் முடித் தொப்பி, கம்பஸ்பாக், கதிரை, பாக் பின்னும் வயர்கள் மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம். தொடர்பு: நாகவிகாரை முன்பாக, ராஜன் பின்னலகம், ஆரியகுளம் சந்தி யாழ்ப்பாணம். [48562]

## உடன் விற்பனைக்கு

யாழ் நகரில் 3ஆம், 4ஆம் குறுக்குத்தெரு சந்தியில இரண்டு வீடுகள் ஒன்று 5 அறைகளுடன் மற்றையது 4 அறைகளுடன் கார் விடும் கராஜ் வசதியுடன் கூடிய சகல வசதியுடன் விற்பனைக்கு உண்டு. 201/1,3 ஆம் குறுக்குத்தெரு, அரசடி ஒழுங்கை, யாழ்ப்பாணம். [48538]

## திருமண சேவை

எம்மிடம் சகல உத்தியோகத்திலும் சகல மதத்திலும் ஆண், பெண் இருபாலரும் உண்டு. தொடர்பு: துர்க்கா திருமண சேவை, 178, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். [48537]

## மணமகன் தேவை

கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த இந்து 27 வயது நிறைவு செய்த யாழ். பல்கலைக்கழக பொருளியல் பட்டதாரிப் பெண்ணுக்கு பொருத்தமான மணமகன் தேவை. குடும்ப விவரங்களுடன் தொடர்பு கொள்ளவும். இல: 640 மே/பா உதயன், யாழ்ப்பாணம். (48533)

## O/L கணிதம் 97

கணித பாடத்தின பெரும பிரிவுகளான அட்சர கணிதம், கேத்திர கணிதம், எண் கணிதம், புதிய கணிதம் ஆகியவற்றின் சகல அலகுகளையும் 40 மணித்தியாலங்களில் Distinction பெறு பேறடையக் கற்பிக்கப்படும். ஆறுமுகநாதன், 10, கச்சேரி கிழக்கு ஒழுங்கை சுண்டுக்குளி. (48565)

## வாடகைக்கு

K K.S Road தாவடிச் சந்தி தெற்கு பக்கமாக உள்ள இரு கடைகள் வாடகைக்கு விடப்படும். தொடர்பு: சில்லறைக் கடை 340, மனோகராச் சந்தி K. K. S Road, யாழ்ப்பாணம். (48514)

## FOR SALE

Ency Clopaedia Britani-ca Fourteenth Edition For Sale Contact Only Sunday 47, Senguntha Veethy, Thirlluelvely East, Jaffna. (48568)

## கைந்நூல்

கணக்காய்வுப் பரீட்சகர் பரீட்சைக்குரிய வழிகாட்டும் கைந்நூல் நேரில் பெற சனி, ஞாயிறு மட்டும் பிற்பகல் 2-4 வரை 186/22 குருநகர் ஒழுங்கை, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம். [48575]

## திருத்துதல்

சகல விதமான தட்டச்சு இயத்திரங்கள், றோணியோ இயந்திரங்கள் சிறந்த முறையில் திருத்திக் கொடுக்கப்படும். தொடர்பு: R.மருதம், 66, மணிக்கூட்டு வீதி, (ஆஸ்பத்திரி முன்பாக) யாழ்ப்பாணம். [48263]

## தவறிவிட்டது

சபாரத்தினம் விமலா நாதன் என்பவருடைய தேசிய அடையாள அட்டை இல: 491340410V ஏழாலைக்கும் கோண்டாவிலுக்கு மிடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயாளன் ஸ்ரோஸ், கோண்டாவில் சந்தி எனும் முகவரியில் ஒப்படைக்கவும். [47346]

மீனாட்சி நவநீதகிருஷ்ணன் என்பவரது தேசிய அடையாள அட்டை தொழில் அடையாள அட்டை (விவாக பிறப்பு, இறப்பு பதிவாளர்) என்பன நயினாதீவில் தவறி விட்டன. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து பின்வரும் முகவரியில் ஒப்படைக்கவும். நயினாதீவு—5 [48585]

## மரம்

சாகரை வேம்பு, வேமபு, பலா, பொன்னாவரசு, அகத்தி, கரிசலாங்கண்ணி, யோகாசனப்படம், மில்க் வைற் சோப் சலவைத்தூள் மேலுறைகள் 10க்கு அல்லது 10/- தென்னம்பிள்ளை, நுளம்புக்கு வேப்பம் பிண்ணாக்கு. ஸ்ரீராமகிருஷ்ண விஜயம். மில்க்வைற். (சி/1186)

## தேவை

புதிய, பழைய பாவனைக்கு உதவாத தட்டச்சு இயந்திரங்கள் றோணியோ இயந்திரங்கள் தேவை. தொடர்பு; R. மருதம் 66, மணிக்கூட்டு வீதி, (ஆஸ்பத்திரி முன்பாக) யாழ்ப்பாணம். [48264]

## 6-11

ஆங்கிலம், கணிதம, விஞ்ஞானம் விசேட பெறுபேறடைய எல்லாப் பாடங்களும வாரம் 5 மணித்தியாலங்கள் கற்பிக்கப்படும். அனுபவமுள்ள ஆசிரியர் 85, சிவன் கோயிலடி, சிவன் கோயில் மேற்கு வீதி, திருநெல்வேலி. [48501]


## பெட்டா எசன்ஸ் சப்பிளையேர்ஸ் பேப்பர் மேர்ச்சன்ட்

★ எசன்ஸ் வகைகள்
★ எமல்சன் வகைகள்
★ கலர் பவுடர் வகைகள்
★ கேக் சரமான்கள்
★ கேக் அலங்கார பொருள்கள்
★ பேக்கரி தயாரிப்புக்குத் தேவையான பொருள்கள்

மற்றும்

அச்சகத்திற்குத் தேவையான

★ பேப்பர் வகைகள்
★ மை வகைகள்

மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம்.

109, ஸ்ரான்லி றோட்,
யாழ்ப்பாணம். (48509)


## லயன்ஸ் கழகம் நல்லூர்

WESERVE

## 10 ஆவது ஆண்டு நிறைவில்

ஊனமுற்றோர் வாழ்வில்
இருளை நீக்கி ஒளி தனை ஊட்டி
சோகக் கண்ணீரைத்துடைக்கும்

யாழ்ப்பாணம் ஜெய்ப்பூர் செயற்கை கால் திட்ட அமைப்பையும்

சேவையாற்றும் முகாமைத்துவ குழுவையும்
பணியாளர்களையும்

அவர்கள் சேவை சிறப்புடன் தொடர
நல்லூர் லயன்ஸ் கழகம்
வாழ்த்துகின்றது.

செயலாளர்,
நல்லூர் லயன்ஸ் கழகம்.
(சி/1190)

## வாழ்த்துகின்றோம்

எமது கல்லூரியின் புதிய அதிபராகப் பதவியேற்றுள்ள

**திரு. அருணாசலம் சிறிக்குமாரன்**
(B. A. Cey, Dip in Ed, S. L, P. S. I)
அவர்களை

தம் பணியில் சிறப்பெய்த
வாழ்த்தி வரவேற்கின்றோம்.

பாடசாலை அபிவிருத்திச் சங்கம்
யாழ். இந்துக்கல்லூரி,
யாழ்ப்பாணம்.

(சி/1197)

## 6-ம் மாத நினைவஞ்சலியும் கீதாஞ்சலியும்



மலர்வு: 25 - 10 - 1942
உதிர்வு: 26 - 01 - 1997

**கே. ஸி. வினாயகேந்திரன்**
(அப்பி)

இன்னிசை வானில் இரட்டையராய்
உலவி நின்றீர்!
தேனிசை மழையால் ஈழத்தின்
இதயம் பல கவர்ந்து நின்றீர்,
மெல்லிசைப் பாடல்களைப் மெய்மறந்திடத் தந்தீர்
பல்லிசைப் பாடல்களைப்
பண்ணுடன் இசைத்து நின்று
கல்மனமும் கனிந்திடவே
இதயராகம் பொழிந்து நின்றீர்
அகமகிழ்ந்து அறச்செயல்கள்
அனுதினமும் புரிந்திட்டீர்
பகலிரவாய் பரமன் பாதக் கமலம் பணிந்திட்டீர்
செகமதனில் சிறப்பான சேவை பல
ஆற்றி நின்றே
பகவான் சாயி பத மலர்கள்
சரணமென விரைந்திட்டீர்
மண்ணகத்தில் நல்ல வண்ணம்
வாழ்ந்திருந்த வினாயகேந்திரனே
விண்ணகத்தில் ஒளிரும் வண்ணம்
விமலனடி தொழுகின்றோம்.

கே. ஸி. யோகேந்திரன்
(பபி)
மானிப்பாய்.
(சி/1185)

## 8 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு: 13 — 10 — 1969
அழிப்பு: 26 — 07 — 1989

**செல்வன் பரமகுரு ஸ்கந்தகுமார்**
(பழைய மாணவன், நெல்லியடி மத்திய மகாவித்தியாலயம், ஹாட்லிக்கல்லூரி)

எங்கள் அன்புச் செல்வமே! தம்பி!
தங்கள் ஆத்ம சாந்திக்கு இறைவனை
என்றும் பிரார்த்திக்கும்:

ஐயா, அம்மா,
அக்கா, அத்தான்.

பத்திரகாளி கோயில் வீதி,
பருத்தித்துறை. (48506)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொது சன நூலகம் யாழ்ப்பாணம்

# அரசில் தொண்டமான் 'செல்லாக்காசு'!

'என்றும் அமைச்சர்பதவி' என்றதம் தத்துவத்தில் ருசி கண்டவர் இ. தொ. கா. தலைவர் தொண்டமான். கடந்த இருபது ஆண்டு காலமாக ஏதோ ஓர் அமைச்சர் பதவியைத் தக்க வைத்துக் கொண்டவர்.

அரசுகள் மாறினாலும், ஜனாதிபதிகள் மாறினாலும் தமது கொள்கையைப் புரட்டிப் போட்டு அமைச்சர் பதவியைப் பற்றிப் பிடித்துக் கொள்வது அவரது அரசியல் சரித்திரம்.



சந்திரிகா

ஆனால் ஜே.ஆர்., பிரேமா, விஜேதுங்கா ஆகியோரின் தலைமைகளின் கீழ் அமைந்த ஐ.தே. கட்சி அரசுகளில் அவருக்கு இருந்த 'செல்வாக்கு' தற்போது ஜனாதிபதி சந்திரிகா தலைமையிலான அரசில் இல்லை; செல்லாக் காசாகவே உள்ளார்.

## உள்ளும் புறமும்

குறுமுனி

எதிரணியில் உள்ள ஐ.தே. கவின் எம்.பிக்கள் பட்டியலில் இருந்து சிலரை பிரித்து வைத்திருப்பதற்கு ஒரு வாய்ப்பாக தொண்டாவுக்கு ஓர் அமைச்சர் பதவியை சந்திரிகா வழங்கினாரே தவிர, அரசாங்கத்தில் உள்ள ஏனைய அமைச்சர்களுக்கு அரசில் வழங்கிய அதிகாரங்களை — செல்வாக்குகளை — முக்கியத்துவத்தை — வழங்கவில்லை.

'எங்காத்துக்காரரும் ஆபீஸுக்குப் போகிறார்' என்ற மாதிரி தொண்டாவும் அமைச்சராக இருக்கின்றார்; அமைச்சரவைக் கூட்டத்துக்குப் போகின்றார். அவ்வளவே!

தமக்கும், தமது சமூகத்துக்கும் நன்மை தேடிக் கொடுக்கும் முயற்சியாக தொண்டா ஏதேனும் நடவடிக்கைகளை, திட்டங்களை அமைச்சரவைக்குச் சமர்ப்பித்தால் அதை அடியோடு வெட்டுவதில் — முளையில் கிள்ளி எறிவதில் — ஓர் அரசுத் தரப்பு அமைச்சர்கள் பிரிவு கண்ணும் கருத்துமாக இருந்து வருகின்றது.

அதாவது தமது அமைச்சர் பதவி மூலம் தமது மலையகப் பிரதேசத்தில் செல்வாக்கைக் கட்டி எழுப்ப தொண்டா முயற்சித்தால் அதற்கு வேட்டு வைப்பதே இந்தக் கூட்டத்தின் முக்கிய பணி.

இதனால் அமைச்சர் பதவியை வைத்துக் கொண்டு மெல்லவும் முடியாமல் விழுங்கவும் முடியாமல் தவிக்கின்றார் தொண்டா.

தோட்டத் தொழிலாளர்களின் வீடமைப்புக்கும் அவர்களுக்கான சமூக சேவைத் திட்டங்களை நிறைவேற்றுவதற்கும் தேவையான நிதியைப் பெறுவதற்காக தேயிலைக்கு விதிக்கப்படும் வரியை கிலோவுக்கு ஐம்பது சதம் என்ற அடிப்படையில் உயர்த்த வேண்டும் என்ற யோசனையை அமைச்சர் தொண்டா அண்மையில் அமைச்சரவைக்கு முன்வைத்தார்.

அதே சமயம், தேயிலை தொடர்பாக ஆராய்ச்சி நடவடிக்கைகளை விருத்தி செய்வதற்கான நிதியைத் திரட்டுவதற்காக ஏற்றுமதியாகும் தேயிலைக்கு கிலோவுக்கு ஐம்பது சதம் என்ற அடிப்படையில் வரியை உயர்த்த வேண்டும் என்ற யோசனையை பெருந்தோட்டத் தொழில்துறை அமைச்சர் ரட்ணசிறி விக்கிரமநாயக்கா முன்வைத்தார்.

முதலில் இரண்டுயோசனைகளையும் ஏற்றுக்கொண்ட அமைச்சரவை தேயிலைக்கு மொத்தமாக கிலோவுக்கு ஒரு ரூபா என்ற அடிப்படையில் வரியை உயர்த்துவதற்கு அண்மையில் அங்கீகாரம் வழங்கியது.

ஆனால் தொண்டாவுக்கு எதிரான அணி அடங்கவில்லை.

இந்த வரி உயர்வால் வரப்போகின்ற வருமானம் என்ன? அதனால் மலையக மக்களை மீண்டும் தம் பின்னால் அணி திரள வைக்க தொண்டமான் முயற்சிக்கின்றாரா? தோட்ட முதலாளிமாரின் நிதியை வைத்து தொண்டா அரசியல் லாபம் தேட அனுமதிக்கலாமா? — போன்றவை குறித்து அக்கு வேறு ஆணி வேறாக ஆராய்ந்து தகவல்களை ஜனாதிபதிக்கு கொண்டு சென்றது.

விளைவு —

அடுத்த மூன்று வாரங்களின் பின்னர் நடந்த அமைச்சரவைக் கூட்டத்தில் முன்னைய முடிவு மாற்றியமைக்கப்பட்டது. அமைச்சர் தொண்டமானின் கோரிக்கைப்படி தேயிலைக்கு விதிக்கப்படும் ஐம்பது சதம் வரியை விலக்குவது என்றும், அமைச்சர் ரட்ணசிறி விக்கிரமநாயக்காவின் யோசனைப்படி விதிக்கப்பட்ட ஐம்பது சதம் வரியைத் தொடருவது எனவும் அமைச்சரவை தீர்மானித்தது.

இம்முடிவை தொண்டமான் கடுமையாக ஆட்சேபித்தார். தமது யோசனையை மீளாய்வு செய்யும்படி அவர் விடுத்த கோரிக்கை 'செவிடன் காதில் ஊதிய சங்கு' ஆயிற்று.

இந்நிலையில் இவ்விடயம் ஜனாதிபதியின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டது. ஜனாதிபதி தொண்டாவுக்கு விஸ்தாரமான கடிதம் ஒன்றை அனுப்பி வைத்தார்.

''இரண்டு விவகாரங்களுக்காக சிறிய தோட்ட முதலாளிமார்கள் உட்பட தேயிலை உற்பத்தியாளர்கள் அனைவரையும் ஒரே சமயத்தில் தொல்லைப்படுத்துவது நியாயமானதல்ல; தோட்டத் தொழிலாளர் நலனுக்குத் தேவையான நிதியைப் பெறுவதற்கு வேறு வெளிநாட்டு உதவிகளை நாடலாம்'' என்றும்—

''இத்தகைய தொண்டா எதிர்ப்புப் போக்கையும் அரசுக்கு அபகீர்த்தியையும் ஏற்படுத்தும்'' என்றும் —

அக்கடிதத்தில் குறிப்பிட்டு தொண்டாவின் யோசனைக்கு முற்றுப்புள்ளி வைத்திருக்கின்றார் ஜனாதிபதி.

இக்கடிதத்துக்கு தாம் அனுப்பிய பதிலில் ''விமரிசனங்கள், எதிர்ப்பலைகள் போன்றவை எனக்குப் புதிதல்ல.'' — என்றுதொண்டா தெரிவித்திருக்கின்றார்.

அண்மையில் நடந்த உள்ளூராட்சித் தேர்தல்களில்



தொண்டமான்

தமது இ. தொ. காவுக்கு மலையகப் பகுதிகளில் கிடைத்த பலத்த அடி —

மலையக மக்கள் முன்னணி மற்றும் செல்லச்சாமி அணி, ஐ.தே.க. போன்றவற்றுக்கு மலையகத்தில் வளர்ந்து வரும் செல்வாக்கு —

அமைச்சரவையில் தமக்கு வழங்கப்பட்ட செல்வாக்கற்ற அந்தஸ்து —

இவற்றால் வெறுத்துப் போயிருக்கின்றார் தொண்டா.

### சந்திரிகாவின் வெளிநாட்டு 'விசிட்'

கறுப்பு ஜூலை மாதங்களில் மூன்றாம் வாரத்தில் நாட்டில் இருப்பதைத் தவிர்த்து, வெளிநாடு செல்வதைத் தாம் ஜனாதிபதியான பின்னர் ஒரு வழக்கமாக சந்திரிகா குமாரதுங்க மாற்றிக் கொண்டிருக்கின்றார்.

இம்முறையும் மூன்றாம் வாரத்தில் திடீரென லண்டனுக்குத் தமது பிள்ளைகளுடன் அவர் புறப்பட்டுச் சென்றார். அவரின் வெளிநாட்டு 'விசிட்டுக்கு' பல காரணங்கள், ஊகங்கள் தெரிவிக்கப்பட்டன.

1. விடுமுறையைக் கழிப்பதற்காக அவர் லண்டன் சென்றார் என்று உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டது. (ஜூலை 3 ஆம் வாரத்தையே எப்போதும் விடுமுறைக்காக அவர் தேர்ந்தெடுப்பது ஏன் என்பது தெரியவில்லை.)

2. தமது பிள்ளைகளின் மேற்படிப்புக்குரிய ஒழுங்குகளைச் செய்வதற்காக அவர் லண்டன் சென்றார்.

(இலங்கையின் ஜனாதிபதி பதவியிலிருக்கும் ஒருவர் — அதுவும் புலிகளின் 'ஹிட் லிஸ்ட்டில்' முக்கியமானவராகக் கருதப்படும் நாட்டின் நிறைவேற்று ஜனாதிபதி — பலத்த பாதுகாப்புகளுக்கு மத்தியில் நேரடியாக லண்டன் சென்று தான் தமது பிள்ளைகளின் மேற்படிப்புக்கான ஏற்பாடுகளைச் செய்யவேண்டும் என்பது கேலிக்குரியது. ஜனாதிபதிக்குக் கீழ் இருக்கும் ஆள், அணி, அம்புகளுடன் ஒப்பிடும் போது இது தூசுக்குச் சமனான வேலை.

3. 1983 ஜூலை 23 ஆம் திகதியன்றுதான் உண்மையில் கறுப்பு ஜூலை பிறந்தது. அன்றுதான் ஈழத் தமிழர்களின் விடுதலைப் போராட்டம் பெரும் போராக வெடித்து மூண்டது. அந்த நினைவு நாளில் [illegible] காப்புக்கு உகந்ததல்ல. புலிகளின் இரகசியத் திட்டங்கள் எட்டாத ஓர் இடத்துக்கு நழுவி விடுவது நல்லது என்று பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்த ஆலோசனை காரணம்.

புலிகளின் தாக்குதல் உத்திகளைக் கவனிக்கும்போது இத்தகைய ஆலோசனை ஏற்று செயற்படுத்தப்பட வேண்டியது போன்றே தோன்றுகின்றது.

4 ஜனாதிபதியின் சகோதரர் அனுரா பண்டாரநாயக்கா அரசியலில் குதித்து இருபது ஆண்டுகள் பூர்த்தியானதை ஒட்டிய பகிரங்க நிகழ்வு நேற்று கொழும்பில் நடைபெற ஏற்பாடாகியிருந்தது.

பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் பெனாஸிர் பூட்டோ உட்படப் பல பிரமுகர்கள் இந்த நிகழ்ச்சியில் கலந்துகொள்ளவிருந்தனர்.

அனுரா, சந்திரிகா இருவருமே அரசியலில் இரு வேறு துருவங்களில் இருப்பவர்கள். ஆனால் அரசியலில் சந்திரிகா பக்கம் இருக்கும் தாயார் சிறிமாவோ பண்டாரநாயக்கா, மகனின் இருபது வருட அரசியல் வாழ்வை ஒட்டிய நிகழ்வில் மட்டும் மகன் பக்கம் முழுமூச்சாக நிற்கின்றார். அந்த நிகழ்ச்சியில் பங்குபற்றும்

(5 ஆம் பக்கம் பார்க்க)

## அதிரடி அரங்கு

இராணுவச் சிப்பாய் ஒருவரால் அராலியில் மாணவி ஒருவர் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்ட சம்பவம் இராணுவத்தின் அபகீர்த்தி நடவடிக்கைகளுக்கு மற்றோர் உதாரணம்.

ஆனால் அந்த சம்பவத்தை இராணுவ சாதனையாக்கி இராணுவத்துக்குக் கீர்த்தி தேடித்தரும் திரிபு வேலைகளை கொழும்புப் பத்திரிகைகள் செய்திருக்கின்றன.

மாணவி பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்ட சம்பவத்துக்கு முன்னுரிமை கொடுக்காமல், அச்சம்பவத்தில் ஈடுபட்டதாகக் கூறப்படும் சிப்பாய், ஏனைய படையினரால் தாக்கப்பட்டதையும், அச்சிப்பாய்க்கு மருத்துவ சிகிச்சை வழங்க இராணுவ மருத்துவப் பிரிவு மறுத்துவிட்டதாகக் கூறப்படுவதையும் விஸ்தாரமாக எழுதி, பாதிக்கப்பட்ட மாணவிக்கு அந்த இடத்திலேயே நீதி (Instant Justice) வழங்கப்பட்டு விட்டதாக பீற்றியிருக்கின்றன சில கொழும்புப் பத்திரிகைகள்.

குடாநாட்டுத் தமிழ் மக்களின் கலாசாரத்தில் காலம் காலமாகப் பேணிப் போற்றப்படும் பண்புகளில் முக்கியமானது கற்பு. அது சில வேளைகளில் கொழும்புக் கலாசாரத்தில் வாழும் தெற்குப் பத்திரிகையாளர்களுக்குப் புரியாமல் இருக்கலாம்.

'கற்பு' ஏதோ கடைச்சரக்கு மாதிரியும், அதைப் பறித்துவிட்ட சிப்பாயை அந்த இடத்திலேயே தண்டித்து, கடைச்சரக்கைத் திருப்பி வாங்கிக் கொடுத்து விட்டது போலவும் இச்சம்பவத்தைக் கருதுகின்றன போலும் கொழும்புப் பத்திரிகைகள்.

★ ★ ★

நமது சமூகத்தில் ஆங்கிலப் புலமை, ஆங்கிலத் தரம் மிகக் கீழே விழுந்து கொண்டிருக்கின்றது. அது குறித்து கல்விமான்கள் பலரும் கவலை தெரிவித்து வருகின்றார்கள். அதை நிரூபிக்கும் சம்பவம் இது. இச் சம்பவத்தை ஒரு நகைச்சுவையாகச் சிலர் ரசிக்கக் கூடும். ஆனால் அச்சம்பவத்தின் பின்னணியில் நமது சமூகத்தின் ஆங்கில அறிவின் வீழ்ச்சி எந்த நிலை வரை சென்றுள்ளது என்பதையும் புரிந்து கொள்ள முடியும்.

நமது கல்வித் திணைக்களத்தின் மூத்த அதிகாரிகள் இருவர் கொழும்பில் ஒரு வாகனத்தில் சென்று கொண்டிருந்தனர்; மற்றொரு கல்வித் திணைக்கள ஊழியரும் உடனிருந்தார்.

அந்தச் சமயத்தில் இரு முக்கிய சம்பவங்கள் நாட்டில் நிகழ்ந்திருந்தன.

ஒன்று — திருகோணமலை மாவட்ட கூட்டணி எம். பியான தங்கத்துரையும் மற்றும் சிலரும் திருகோணமலை நகரில் நடந்த குண்டுத் தாக்குதலில் உயிரிழந்திருந்தனர்.

மற்றையது — கைது செய்யப்பட்ட முன்னாள் அமைச்சர் சிறிசேன கூரே தொடர்பாக நீதிமன்றத்தில் அரசுத் தரப்பினால் தாக்கல் செய்யப்பட்டிருந்த மனு ஒன்றில், ஜனாதிபதியைக் கொல்ல கூரே சதித் திட்டம் தீட்டினார் என்று தெரிவிக்கப்பட்டிருந்தது.

வார மத்தியில் வெளியாகும் ஆங்கிலப் பத்திரிகை ஒன்று கூரே சம்பந்தமான செய்திக்கு முக்கியத்துவம் கொடுத்து ஜனாதிபதியைக் கொல்லச் சதி என்ற அர்த்தத்தில் 'சதி' (PLOT) என்பதை கறுப்பு 'போர்டரில்' வெள்ளை எழுத்தில் கொட்டையாக — தலைப்புச் செய்தியாக — இடம் கொடுத்து பிரசுரித்திருந்தது.

வாகனத்தில் வந்த கல்வி அதிகாரி ஒருவரின் கையில் இந்தப் பத்திரிகை சிக்கிவிட்டது. தலைப்பில் 'புளொட்' (PLOT) என்று எழுதியிருந்ததை தமக்குத் தெரிந்த ஆங்கிலத்தில் புரிந்தும் (?) கொண்டு விட்டார் அந்த அதிகாரி.

அப்போது வாகனத்தில் இருந்தவர்களின் பேச்சு திருகோணமலைச் சம்பவம் பக்கம் திரும்பியது. ஒருவர் மற்றையவரைப் பார்த்து ''தங்கத்துரையை கொலை செய்தது யார்?'' — என்ற சாரப்பட கேள்வி எழுப்பினார்.

ஆங்கிலப் பத்திரிகையைக் கையில் வைத்திருந்த கல்வி அதிகாரி தமக்கு ஏதோ அதிகம் விளங்கியது போன்று ''புளொட்தான் போலை கிடக்கு. இங்கை இவங்களும் போட்டிருக்கின்றான்கள்'' என்றாரே பார்க்கலாம் பத்திரிகையைக்காட்டி.

கல்வி அதிகாரிகளின் நிலையே இது வென்றால், நமது சமூகத்தின் நிலை என்ன?

ஆங்கில அறிவை வளர்க்க அவசர — மிக அவசர — முயற்சி, திட்டம், நடவடிக்கை தேவை.

— மின்னல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆயுதக் கப்பல் ஏற்படுத்திய பரபரப்பு!

இலங்கைப் படைகளுக்கு ஆயுதங்களை ஏற்றி வந்த கப்பல் இடையில் மர்மமாக மறைந்து போனது என்ற செய்தியே இவ்வாரத்தில் பாதுகாப்பு வட்டாரங்களில் பெரும் பரபரப்பை ஏற்படுத்திய தகவலாகும்.

இந்த விடயம் சம்பந்தமான முதலாவது தகவல் மேற்கத்திய தூதரகம் ஒன்றுக்கு கிடைத்த 'பக்ஸ்' செய்தியுடன் ஆரம்பமானது.

ஆங்கிலத்தில் அமைந்திருந்த அந்த 'பக்ஸ்' செய்தியின் விவரம் இது தான்:-

எச்சரிக்கை — எச்சரிக்கை — எச்சரிக்கை

**எச்சரிக்கையும் முன்னறிவிப்பும்**

லைபீரியன் கொடியுடன் ஆயுதங்களை ஏற்றிச் சென்ற கப்பல் ஒன்றை 1997 ஜூலை 11 ஆம் திகதி தமிழ்ப் புலிகளாகிய நாங்கள் கைப்பற்றியிருக்கின்றோம் என்பதை அறிவிக்கின்றோம்.

கப்பலின் பெயர் 'ஸ்டில்லஸ் விக்ரோறியா' ('Stillus Victoria') இக் கப்பலில், ஸ்ரீலங்கா, கொழும்பு பாதுகாப்பு அமைச்சுக்கு அனுப்பப்படுவதற்காக 12 கொள்கலன்களில் 32 ஆயிரத்து 400 எண்ணிக்கை 81 எம். எம். மோட்டரர் ஷெல்கள் இருந்தன.

ஸிம்பாப்வே, ஹராரேயில் உள்ள ஸிம்பாப்வே பாதுகாப்புத்துறை தொழிற்சாலையே இவற்றின் தயாரிப்பாளர்களும் விநியோகஸ்தர்களும் என்பதை நாம் அறிவோம்.

ஸிம்பாப்வே பாதுகாப்பு தொழில் பிரிவைச் சேர்ந்த கேணல் டப் என்பவரால் இந்த வர்த்தகம் ஏற்பாடு செய்யப்பட்டது என்பதும் எமக்குத் தெரியும்.

இந்தப் பொருள்கள் எம்மால் பறிமுதல் செய்யப்பட்டு கப்பல் சிப்பந்திகள் தீங்கு ஏதுவுமின்றி விடுவிக்கப்பட்டுள்ளார்கள்.

தமிழ் மக்களின் சட்ட பூர்வ உரிமைகளுக்கு எதிராக இராணுவ ஆயுத தளபாடங்களை விநியோகிப்பதில் ஈடுபடும் அனைவருக்கும் எதிராக நாங்கள் நடவடிக்கை எடுப்போம் என்பதையும் —

சம்பந்தப்பட்டோருக்குக் கடும் தண்டனை விதிப்போம் என்பதையும் —

நாம் பகிரங்கப்படுத்தி எச்சரிக்கை செய்கின்றோம்.

— எல். ரீ. ரீ. ஈ. —

எச்சரிக்கை — எச்சரிக்கை — எச்சரிக்கை

— இவ்வாறு அந்த 'பக்ஸ்' செய்தியில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இந்தத் தகவல் தொடர்பாக கொழும்பு செய்தி வட்டாரங்கள் பின்வரும் தகவல்களை ஆராய்ந்து ஊர்ஜிதப் படுத்தியிருக்கின்றன.

★ ஸிம்பாப்வே, ஹராரேயில் இருந்து 32 ஆயிரத்து 400 எண்ணிக்கையில் 81 எம். எம். மோட்டார் ஷெல்களைப் பெறுவதற்கு ஸ்ரீ லங்கா அரசு 'ஓடர்' கொடுத்திருந்தது.

★ இந்த ஷெல்களை ஏற்றிக்கொண்டு புறப்பட்ட கப்பல் இம் மாத முற்பகுதியில் கொழும்பு வந்து சேர இருந்தது.

★ 12 கொள்கலன் நிறைய ஷெல்களை ஏற்றிக் கொண்டு புறப்பட்ட கப்பல் கடைசியாக மடகஸ்கார் நாட்டுத் துறைமுகத்தை விட்டு ஜூலை 2 ஆம் திகதி புறப்பட்டது. ஆறு முதல் எட்டு நாள்களுக்குள் அது கொழும்பையடைந்திருக்க வேண்டும். ஆனால் இன்னும் வந்து சேரவில்லை.

★ இந்த ஆயுதக் கப்பல் தொடர்பாக மேற்குலகத் தூதரகத்துக்கு அனுப்பப்பட்ட 'பக்ஸ்' செய்தி இரண்டு தவறுகளைத் தவிர மற்றைய விடயங்களில் சரியான தகவல்களையே தெரிவித்துள்ளது.

முதலாவது தவறு — கப்பலின் பெயர் 'ஸ்டில்லஸ் விக்ரோறியா' ('Stillus Victoris') என்பது அல்லது. 'ஸ்டில்லஸ் லிமுசல்' ('Stillus Limmusul').

இரண்டாவது தவறு— அக்கப்பல் லைபீரிய நாட்டில் பதிவு செய்யப்பட்ட கப்பல் அல்ல. கிறீஸில் பதிவு செய்யப்பட்ட கப்பல்.

இந்த இரண்டு தவறுகளையும் தவிர, கப்பல் குறித்து அனுப்பப்பட்ட 'பக்ஸ்' செய்தி கனகச்சிதமான தகவல்களைக் கொண்டிருந்தது.

வந்து சேர வேண்டிய ஆயுதக் கப்பல் வந்து சேராததால் ஏற்பட்ட பதற்றத்தை அடுத்து கடற்படைத் தளபதியர் அட்மிரல் சிசில் திஸேரா அனைத்து கடற்படைத் தளங்களுக்கும், அங்கிருந்து இயங்கும் ரோந்துப் படகுகளுக்கும் அக்கப்பல் குறித்து அவதானமாக இருக்கும்படி அவசர எச்சரிக்கைத் தகவல்களை அனுப்பி வைத்தார்.




இத் தகவல் கிடைத்ததும் அரசின் புலனாய்வுப் பிரிவு பதறியடித்துக் கொண்டு வெவ்வேறு நடுகளில் உள்ள புலனாய்வுப் பிரிவுகளினதும் மட்டுமல்லாமல் சர்வதேச பொலீஸின் (இன்டர் போலின்) உதவியையும் அது நாடியுள்ளது.

இந்த 'பக்ஸ்' செய்தியில் தமிழீழ விடுதலைப் புலிகளின் பெயர் குறிப்பிடப் பட்டிருந்தாலும் கூட, புலிகளின் லண்டன் வெகுஜனத் தொடர்பு நிலையம் இந்த விடயத்தில் மௌனம் சாதிக்கிறது.

ஆனால் லண்டனில் புலிகளுடன் தொடர்புடைய சில வட்டாரங்கள் தங்களுக்கு இந்த விடயம் குறித்துத் தெரியும் எனக் குறிப்பிட்டுள்ளன.

மேற்படி 81 எம். எம். மோட்டார் ஷெல் கொள்வனவு குறித்து கேணல் டப் இலங்கை வந்து மூத்த பாதுகாப்பு அதிகாரிகளுடன் நேரடியாகப் பேச்சு நடத்தியதை அடுத்து முடிவுகள் எடுக்கப்பட்டன.

இந்தப் பேரம் குறித்த தகவல்கள் இலங்கையின் மூத்த பாதுகாப்பு அதிகாரிகளுக்கும், ஸிம்பாப்வே பாதுகாப்பு அமைச்சின் பாதுகாப்பு அதிகாரிகளுக்கும் மட்டுமே தெரிந்திருந்தது.

கப்பலில் ஏற்றப்பட்டு, கப்பல் புறப்பட்ட பின்னர் வேண்டுமானால் கப்பல் சிப்பந்திகளுக்கு அது தெரிய வந்திருக்கலாம்.

அப்படியிருக்க இந்த இரகசியத் தகவல்கள் விடுதலைப்புலிகளுக்கோ, அல்லது அது போன்ற வேறு நபர்களுக்கோ கிடைத்தது எப்படி?

அவ்வளவு தூரம் புலிகளின் புலனாய்வுப் பிரிவு மிகச் சிறப்பாக ஊடுருவிச் செயற்படுகின்றதா?

கடந்த இரண்டு வாரங்களாகக் காணாமல் போயிருக்கும் 'ஸ்டில்லஸ் லுமுசல்' கப்பல் இப்போது எங்குள்ளது? அதன் சிப்பந்திகள் என்ன வானார்கள்? கப்பலில் இருந்த ஷெல்கள் எங்கே?

இலங்கைப் படைகளுக்கு எதிர்காலத்தில் அனுப்பப்படக்கூடிய ஆயுத தளபாடங்களும் இவ்வாறு நடுவழியில் புலிகளின் கைகளில் சிக்க வாய்ப்புக்கள் உள்ளனவா?

—இவ்வாறு விடை காண முடியாத பல கேள்விகள் படை வட்டாரங்களை ஆட்டிப்படைக்கின்றன.

ஆனாலும் இந்தக் கப்பல் மர்மம் குறித்து இலங்கை அரசுத் தரப்புத் தொடர்ந்து தெளிவான பதில் தராமல் மழுப்பி வருவதால் முழு உண்மைகளும் அம்பலத்துக்கு வராத நிலையே காணப்படுகின்றது.

இந்தக் கப்பலும் அதில் இருந்த வெடிப் பொருள்களும் காப்புறுதி செய்யப்பட்டனவா? அவற்றை இழந்தால் ஏற்படும் பல நூறு கோடி ரூபா நஷ்டம் அரசைச் சேருமா? அல்லது விநியோகஸ்தர்களே பொறுப்பு ஏற்க வேண்டுமா? அல்லது காப்புறுதிப் பணம் கிடைக்குமா?

— இன்னும் விடை தெரிய வராத கேள்விகள் இவை.

சரி. ஷெல்லுகளுடன் தொலைந்து போனால் போகட்டும் என்று விடலாம்.

ஆனால் 81 எம். எம். அளவுடைய 32 ஆயிரத்து 400 ஷெல்களும் அப்படியே புலிகளின் கைகளில் வீழ்ந்து அவற்றை அவர்கள் பத்திரமாக வன்னியில் உள்ள தமது ஆயுதக் களஞ்சியங்களுக்குக் கொண்டு வந்து சேர்த்தால் .....

இலங்கை யுத்தத்தின் போக்கே தலைகீழாக மாறிவிடும் சாத்தியம் ஏற்படும்; உயிரிழப்புகள் உயரும்; இராணுவம் கைப்பற்றிய பிரதேசங்களைத் தக்க வைத்திருப்பது இயலாததாகக் கூடும்; தரைவழிப் பாதையைத் திறக்கும் திட்டம் கனவாகிப் போகும்.

கப்பலைக்கோட்டை விட்டதால் 'கதை கந்தலானாலும்' ஆச்சரியப்படுவதற்கில்லை.

★ ★ ★

ஆயுதக் கப்பல் கைப்பற்றப்பட்ட தகவல் 'பக்ஸ்' மூலம் மேற்குலகத் தூதரகத்துக்குக் கிடைத்ததற்கு அடுத்த நாள் —

லண்டனில் உள்ள புலிகளின் தகவல் மையம் பத்திரிகைக் குறிப்பு ஒன்றை வெளியிட்டது.

ஆயுதக் கப்பல் கைப்பற்றப்பட்டது குறித்து அதில் ஏதும் பிரஸ்தாபிக்கப்படவில்லை.

ஆயுதக் கப்பல் பற்றிய 'பக்ஸ்' செய்தி கடிதத் தலைப்பு எதிலும் அமைந்திருக்க வில்லை. ஆனால் இந்தச் செய்திக்குறிப்பு தமிழீழவிடுதலைப்புலிகளின் கடிதத்தலைப்பில் அமைந்திருந்தது.

கடல் வழிப்பாதையைத் தடை செய்வது தொடர்பாக புலிகளின் கொள்கை நிலைப்பாடு, புலிகளின் உத்தியோகபூர்வ பத்திரிகையான ''விடுதலைப் புலிகள்'' இதழில் வெளியாகியிருந்தது. அந்தக் கொள்கை விளக்கத்தையே இந்த செய்திக் குறிப்பு [illegible]

வன்னிப் பிரதேசத்துக்கு அத்தியாவசியப் பொருள்கள், மருந்து வகைகள் போன்றவற்றை அனுப்பாமல் அங்குள்ள மக்களை பட்டினிச் சாவில் தள்ளி விட்டு விட்டு —

யாழ். குடாநாட்டில் உள்ள தமிழ் மக்களுக்கு முழுதையும் வாரி வழங்குகின்றோம் என்று சர்வதேச ரீதியில் இலங்கை அரசு பிரசாரம் செய்வதற்கு —

அனுமதிப்பது இல்லை என்பதே கடல் வழிப் பாதையைப் புலிகள் தடுக்கும் நோக்கத்தின் பின்னணி என்கின்றது சம்பந்தபட்ட வட்டாரம் ஒன்று.

வன்னிக்குரிய பொருள்களை காலம் தவறாது — அளவு குறையாது — அனுப்புவதற்கு அரசுத் தரப்பு இணங்குமானால் —

பொதுமக்களுக்கான பொருள்களையும், பயணிகளையும் ஏற்றிச் செல்லும் கப்பல்களை இலக்கு வைக்காமல் தவிர்க்க புலிகளும் இணங்குவார்கள் — என்று கூறுகின்றது அந்த வட்டாரம்.

வன்னி, குடாநாடு இரண்டிலும் இருப்பவர்கள் தமிழர்களே.

எனவே அரசு 'ஒரு கண்ணுக்கு நெய்யும், மறுகண்ணுக்கு சுண்ணாம்பும் இடுவது' போன்ற போக்கைக் கைவிட்டு நேர்மையாகச் செயற்பட முன் வந்தால் கடல் போக்குவரத்துத் தொடர்பான பூட்டை விரைவில் திறந்து விடலாம் என்றும் அவ்வட்டாரம் கூறுகின்றது.

## ஜே. வி. பியை அடக்கிய உத்தி இங்கு பலன்தராது

ஜே வி. பி. கிளர்ச்சிவாதிகளை அடக்குவதற்கு தென்

**பாசுபதன்**

னிலங்கையில் கையாண்ட உத்திகளை வடக்கு—கிழக்கில் புலிகளை அடக்குவதற்கு கையாள வேண்டாம் என்றும்—

அத்தகைய உத்திகள் நிலைமையைத் தலைகீழாக்கி விடும் என்றும்—

இராணுவத் தலைமைப் பீடம் கீழ் மட்டத்துக்கு தெளிவுபடுத்தியிருப்பதாக அறியவருகின்றது.

ஜே. வி. பி. அடக்கப்பட்ட காலத்தில் ஜே. வி. பி. தரப்பும் சரி—

அதனை எதிர்த்துக் களத்தில் செயற்பட்ட பச்சைப் புலிகள் போன்ற ஐ. தே. க. அரசு ஆதரவான சட்ட விரோதக் கும்பல்களும் சரி—

ஜே. வி. பி. கிளர்ச்சிக்கு எதிரான பொலீஸ் மற்றும் முப்படையினரும் சரி—

சில உத்திகளைக் கையாண்டனர்.

★ தமக்கு எதிரானவர்கள் என்று சந்தேகிக்கப்பட்டவர்கள் அனைவரையும்—சிறிய சந்தேகம் இருந்தாலும்வகைதொகையின்றி — சரியாக விசாரித்துக்கூடப் பார்க்காமல்—படுகொலை செய்தமை.

★ அவர்களின் சடலங்களை அரைகுறையாக எரிந்த நிலையில் வீதிகளில் போடுவதன் மூலம் எதிர்த்தரப்புக்கு பயப் பிராந்தியை ஏற்படுத்த முயன்றமை.

★ எதிர் தரப்பினரின் குடும்பங்களைக் கூட்டாகக் கூண்டோடு கைலாயம் அனுப்பியமை.

—போன்றவை அந்த உத்திகளில் சில.

ஒரு சில ஆயிரத்துக்கும் உட்பட்ட ஜே. வி. பி.யினரை அடக்குவதற்கு அறுபதாயிரத்துக்கும் அதிகமான மனித உயிர்களைப் பலி கொள்ள வேண்டிய தேவை இதனால் தான் ஏற்பட்டது.

இந்த உத்திகள் ஜே. வி. பியை அடக்க பயன்பட்டன. ஏனெனில் அது ஆட்சியைப் பிடிப்பதற்காக ஓர் இனத்துக்குள் ஏற்பட்ட வர்க்கப் போராட்டம்.

ஆனால் வடக்கு—கிழக்கில் நடப்பது இனவிடுதலைப் போராட்டம்.

இந்தப்போராட்டத்தை அடக்குவதற்காக—

புலிகள் என்று சந்தேகப் படுபவர்கள் அனைவரையும் கொன்று குவிப்பதைத் தொடர்ந்தால்—

அல்லது அவர்களின் உறவினர்களை கேள்வி எதுவுமின்றி சாய்க்கத் தொடங்கினால்—

அல்லது அவ்வாறுகொன்று குவிப்போரின் சடலங்களைப் பொது இடத்தில் போட்டு தமிழ் மக்கள் மத்தியில் பயப் பிராந்தியத்தை ஏற்படுத்த முயன்றால்—

விளைவுகள் தலைகீழாகும். சர்வதேச உலகமும், அடிப்படை மனித உரிமைகளுக்கான சர்வதேச அமைப்புகளும் ஸ்ரீலங்கா அரசுப்படைகள் இனப்படுகொலையை மேலும் தீவிரமாக்கியிருப்பதாக பிரகடனம்செய்யும்; ஈழத் தமிழர்கள் மேலும் கிளர்ந்தெழுவர்.

ஜே. வி. பி. பிரச்சினையைப் பொறுத்தவரை சிங்களவர்களை சிங்களவர் கொன்று குவித்ததால் இன எழுச்சி அங்குஏற்பட வில்லை.

ஆனால் வடக்கு—கிழக்கில் தமிழருக்கு எதிரான கடும் போக்கை படைகள் மேலும் தீவிரமாக்கினால் தமிழர்களைக் கொன்று பார்வைக்கு வைத்தால்—அது பெரும்இன எழுச்சியாகவெடிக்கும். ஐந்து புலிகளும், ஐம்பது அப்பாவிகளும் படுகொலை செய்யப்பட புதிதாக ஐந்நூறு அப்பாவிகள் புலிகளாக மாறுவர்.

அனுபவம் மூலம்இப்பாடத்தைக் கற்று வரும் இராணுவத் தலைமைப் பீடம் இது குறித்து முன்னெச்சரிக்கையான ஆலோசனைகளை தமது படைத்தளபதிகளுக்கு வழங்கி வருகின்றது.

இதுவரை காலமும் யாழ்ப்பாணத்தில் கொல்லப்படும் புலிகளின் அல்லது புலிச்சந்தேக நபர்களின் சடலங்களை வீதிகளில் பார்வைக்கு வைத்திருப்பது படையினரின் வழக்கமாக இருந்தது.

ஆனால் அடையாளம் காண்பதற்குத் தவிர, வேறு காரணங்களுக்கு அவ்வாறு செய்யவேண்டாம் என்று யாழ் பகுதியில் நிலை கொண்டுள்ள படைகளின் அதிகாரிகளுக்கு படையணித் தளபதி உத்தரவிட்டிருப்பதாக அறிய வந்தது.

சம்பவம் இடம் பெறும் பகுதிகளில் தேவையானால்—

புலிகளுக்கு எதிரான நடவடிக்கை திருப்தி தரும் விதத்தில் மேற்கொள்ளப் படுகின்றன என்பதை அப்பகுதி மக்களுக்கு உறுதிப் படுத்துவதற்காக, கொல்லப்படும் ஒரு சில புலிச் சந்தேக நபர்களின் சடலங்களையும், கைப்பற்றிய ஆயுதங்களையும் சற்று நேரம் மக்கள் பார்வைக்கு வைத்தால் போதும் என்றும் —

ஒரு சிலர் பார்த்தாலே அது பற்றிய தகவல் குறுகிய விரைவில் மக்கள் மத்தியில் பரவும் என்றும் ஆலோசனை கூறப்பட்டுள்ளதாம்.

பல சடலங்களை பெரும் மக்கள் கூட்டத்தின் முன்னால் வைப்பது மக்கள் உணர்ச்சியை படையினருக்கு எதிராகத் திருப்பவே உதவும் என்று படை உயர் வட்டாரங்கள் கருதுகின்றன.

★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசில் தொண்டமான்...

(மூன்றாம் பக்கத் தொடர்)
அனைத்துப் பிரமுகர்களுக்கும் தாயார் சிறிமா மதிய போசன விருந்து அளித்துக் கௌரவிக்கின்றார். அதை ஒட்டிய அழைப்பு ஜனாதிபதிக்கும், ஏனைய அமைச்சரவைச் சகாக்களுக்கும் அரச தரப்பு எம். பிக்களுக்கும் அனுப்பப்பட்டுள்ளன.

அரசியலிலும் தனிப்பட்ட வாழ்விலும் கீரியும் பாம்பும் போல இருப்பவர்கள் சந்திரிகாவும் அனுராவும். இத்தகைய நிலையில் இருக்கும் சந்திரிகா, அனுராவின் அரசியல் வாழ்வைப் பாராட்டும் நிகழ்ச்சியில் பங்குபற்றத் தயாரில்லை. அதே சமயம் தாயாரின் அழைப்பை நிராகரிக்கவும் சந்திரிகா தயாரில்லை.

இந்நிலையில், நிகழ்ச்சி நடைபெறும் காலத்தில் நாட்டுக்கு வெளியே இருந்து விட்டால் சிக்கல் தீர்ந்துவிடும் என ஜனாதிபதி கருதியிருக்கக்கூடும் என சில வட்டாரங்கள் நம்புகின்றன.

இது உண்மையோ, பொய்யோ தெரியவில்லை. ஆனால் ஜனாதிபதியின் மர்மமான இந்த நடவடிக்கை அரசுத் தரப்பு அமைச்சர்கள் மற்றும் எம். பிக்களை சிக்கலில் மாட்டியுள்ளது; அவர்கள் இருதலைக் கொள்ளி எறும்பாக அவலப்படுகின்றார்கள்.

ஒரு புறத்தில் பிரதமர் சிறிமாவின் அழைப்பு; மறுபுறத்தில் அனுராவின் விழாவில் பங்குபற்றுவதை விரும்பாத ஜனாதிபதி. இவற்றுக்கு இடையில் என்ன செய்வது? நிகழ்ச்சிக்குப் போய், ஜனாதிபதியின் அதிருப்தியைச் சம்பாதிப்பதா? அல்லது நிகழ்ச்சியைப் பகிஷ்கரித்து, பிரதமரின் விசனத்துக்கு ஆளாவதா? — தெரியாமல் தவிக்கின்றார்கள் அவர்கள்.

அமைச்சர் பேராசிரியர் ஜி. எல். பீரிஸ் மட்டும் ஜனாதிபதி நாட்டை விட்டுப் புறப்பட முன்னர் அவரைத் தனியாகச் சந்தித்து இந்த நிகழ்ச்சியில் தாம் பங்குபற்றுவதற்கு ஜனாதிபதியின் அனுமதியைப் பெற்றுவிட்டதாகத் தெரிகின்றது.

இனப்பிரச்சினையில் எவ்வாறு செயற்படுவது என்பது குறித்து ஜனாதிபதியுடன் நேரில் பேசி அவரின் கருத்தை அறிய அரசுத் தரப்பு எம். பிக்கள், அமைச்சர்கள் விரும்புகின்றார்கள். ஆனால் அதற்கு முன்னர் திடீரென ஜனாதிபதி நாட்டை விட்டு மாயமாகி விட்டார்.

இந்த இக்கட்டில், ஜனாதிபதியின் அதிருப்தியைச் சம்பாதிப்பதை விட, பிரதமரின் விசனத்தை எதிர்கொள்வதே மேலானது என்று பல அரச தரப்பினர் கருதுகின்றார்களாம். எனவே பெரும்பாலான அரச தரப்பினர் அனுராவின் நிகழ்ச்சியையும் அதை ஒட்டிய விருந்தையும் தவிர்த்து விடுவார்கள் என எதிர்பார்க்கப்பட்டது.

## எம்.பிக்கள் சுதந்திரம் என்னாயிற்று?

"ஐ. தே. கட்சி அரசைப் போல அக்கட்சி எம். பிக்களின் சுதந்திரத்தை நாம் பறிக்கமாட்டோம். எமது அரசாங்கத்தில் எம். பிக்கள் தமது மனச்சாட்சிப்படி கருத்து வெளியிட அனுமதிக்கப்படுவார்கள்; அவர்களின் பேச்சுச் சுதந்திரத்தில் தலையிட மாட்டோம். தமக்கு சரி எனப்பட்டதைக் கூறும் பூரண அடிப்படைச் சுதந்திரம் அவர்களுக்கு வழங்கப்படும். கட்சியின் கொள்கை என்று கூறி எம். பிக்களின்—மக்கள் பிரதிநிதிகளின்—வாய்க்குப் பூட்டுப் போடும் ஐ. தே. கட்சி அரசின் வேலையை எமது அரசு செய்யாது."

—1994 பொதுத் தேர்தல் காலத்தில் மேடைக்கு மேடை தோன்றி சந்திரிகா திருவாய் மலர்ந்தருளிய தேர்தல் வாக்குறுதியே இது.

ஆனால் இன்று தாம் கூறியதை மறந்து, எம். பிக்களின் வாய்க்குப் பூட்டுப் போடும் ஜே. ஆரின் கழட்டு நரித் தந்திரத்தைத் தாமும் முழு அளவில் பின்பற்றத் தொடங்கிவிட்டார்.

இனப்பிரச்சினைத் தீர்வு தொடர்பாக தமது அரசின் யோசனைகளை எதிர்க்கும் எம். பிக்கள் கட்சியை விட்டும், அரசை விட்டும் வெளியே போகலாம் என எச்சரிக்கின்றார் சந்திரிகா.

சிங்களவர்களின் உரிமைகள் பறிபோய் விட்டதாகத் தெரிவித்து, அவை குறித்து விசாரிப்பதற்காக சிங்கள அமைப்புக்கள் சில சேர்ந்து நியமித்த சிங்கள ஆணைக்குழு முன் தோன்றி சாட்சியமளித்ததற்காக அரசுத் தரப்பு எம்.பியான சட்டத்தரணி ஜெயசேன ராஜகருணநாயக்காவுக்கு எதிராக ஒழுங்கு நடவடிக்கை விசாரணை ஒன்றுக்கும் சந்திரிகா உத்தரவிட்டிருக்கின்றார்.

இந்த விசாரணை ஓகஸ்ட் 2 ஆம் திகதி நடைபெறவிருக்கின்றது.

இத்தகைய நடவடிக்கைகள் எம். பிக்களின் பேச்சு மற்றும் எண்ணங்களை வெளியிடுவதற்கான சுதந்திரம் ஆகியவற்றைக் கட்டுப்படுத்தும் செயல்கள் என்று சுட்டிக்காட்டப்படுகின்றன.

சந்திரிகா தமது தேர்தல் வாக்குறுதிகளைக்கைவிட்டு— [illegible] மாற எத்தனிக்கின்றாரா? ★

---

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



### செல்லத்துரை சிவபாதசுந்தரம்
(முன்னாள் நடத்துநர், பருத்தித்துறை இ. போ. ச.)

பொலிகண்டியைப் பிறப்பிடமாகவும் பளவத்தை வியாபாரிமூலையை வசிப்பிடமாகவும் கொண்ட எமது குடும்பவிளக்கு, தென் இந்தியா திருச்சியில் 26-6-97 இல் காலமானார். அன்னாரின் அந்தியேட்டிக் கிரியைகள் வியாபாரிமூலை இல்லத்தில் 26-7-97 இல் நடைபெறுகின்றன. இந்தத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**குடும்பத்தினர்கள்.**

வியாபாரி மூலை,
பருத்தித்துறை. (48587)

---

## பிரார்த்திக்கின்றோம்

இன்று ஆரம்பமாகும்
ஊரெழு பர்வதபத்தினி அம்பாள்
**மகோற்சவம் சிறப்புற**
பிரார்த்திக்கின்றோம்.

**ஸ்ரீவிக்னேஸ்வரா அச்சகம்**
**150, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.**
[7 ஆம் திருவிழா உபயகாரர்]

(48592)

---

வலி - கிழக்கு தென்பகுதி
**பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்,**
நீர்வேலி.

## வெதுப்பி சுடுநர் உதவியாட்களுக்கான விண்ணப்பம்

ஷெ சங்கத்தினால் நடத்தப்படும் வெதுப்பகத்துக்கு வெதுப்பி சுடுநர்/ உதவியாளர்களுக்கான விண்ணப்பங்கள் ஷெ சங்கத்தினால் கோரப்படுகின்றன. விண்ணப்ப முடிவு திகதி 05-08-97 ஆகும். வெதுப்பி, கேக் வகை, பிஸ்கற் வகைகள் செய்வதில் அனுபவமும் முன்னர் வெதுப்பகத்தில் தொழில்புரிந்த அனுபவமுமுடையவர்கள் விண்ணப்பிக்கலாம். விண்ணப்பிக்க விரும்புவோர் தமது விண்ணப்பத்தை எழுத்து மூலம் 05-08-97 ஆம் திகதிக்கு முன்னர் 'பொதுமுகாமையாளர்' வலி-கிழக்கு தென்பகுதி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம், நீர்வேலி என்ற முகவரிக்கு அனுப்பிவைத்தல் வேண்டும்.

**பொது முகாமையாளர்**

நீர்வேலி.
1997 - 07 - 23 (சி-1196)

---

## ஜெய்ப்பூர் 10 ஆவது ஆண்டுவிழா

யாழ்: ஜெய்ப்பூர் செயற்கை கால் திட்டத்தின் 10 ஆவது ஆண்டு நிறைவு விழா இன்று சனிக்கிழமை காலை 9.00 மணிக்கு யாழ் நாவலர் மண்டபத்தில் நடைபெறும்.

பிரதம விருந்தினராக யாழ். மாநகர ஆணையாளர் வே.பொ. பாலசிங்கம் கலந்து கொள்வார். (ஐ-4)

---

## வகுப்பு - 1 ஆசிரியர் வாண்மை விருத்திக் கருத்தரங்கு - 3

இடம்- யாழ். இந்து மகளிர் கல்லூரி.
காலம்- 27- 07- 97 ஞாயிறு காலை 9. 00 மணி
உரிய ஆசிரியர்களைப் பங்குபற்றுமாறு அழைக்கின்றோம்.

Graduate Teacher Professional Development Organization

திரு. பா. தனபாலன் — தலைவர்
திரு. ஏ. சி. ஜோர்ஜ் — செயலாளர்

(48595)

---

## உதைபந்தாட்ட இறுதிப் போட்டி

**காலம்:** 27-07-97 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.30 மணி
**இடம்:** ஸ்கந்தா மைதானம்
**பங்குபற்றும் கழகங்கள்:**

1. இளவாலை யங்கென்றீஸ் எதிர் மயிலங்காடு ஞானமுருகன்
2. யாழ். பல்கலைக்கழகம் எதிர் ஊரெழு றோயல் விளையாட்டுக் கழகம்

பழைய மாணவர் சங்கம்,
ஸ்கந்தவரோதயக் கல்லூரி.

கந்தரோடை,
சுன்னாகம். (சி/1199)

---

## மரண அறிவித்தல்கள்

### விநாசித்தம்பி முருகேசு

நயினாதீவு 5 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த விநாசித்தம்பி முருகேசு அவர்கள் 24 - 7 - 97 இல் நயினாதீவில் காலமானார்.

இவர் காலஞ்சென்ற விநாசித்தம்பி தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்ற இராமநாதர் தம்பதிகளின் அன்பு மருமகனும், சிவக்கொழுந்துவின் அன்புக் கணவரும், நற்குணசிங்கம் [வர்த்தகர்), கந்தசாமி (வர்த்தகர்), இலட்சுமணன் (வர்த்தகர், குமாரவேல் அன்ட் கம்பனி, கொழும்பு), தங்கராசா (மேற்கு ஜேர்மனி), நவரெத்தினம் (விரிவுரையாளர் - நுண்கலைப்பீடம் – யாழ். வளாகம்) ஆகியோரின் அன்புத் தந்தையும், நீலாம்பிகை, சரசுவதி, தனலெட்சுமி, ரஞ்சினி (மே. ஜேர்மனி), புவனேஸ்வரி (ஓய்வுபெற்ற ஆசிரியை) ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்றவர்களான நாகம்மா, நாகலிங்கம், நாகமுத்து, நல்லையா, பரமலிங்கம், ஆகியோரின் அன்புச் சகோதரரும், தையலம்மை (பிரான்ஸ்), காலஞ்சென்ற பரமலிங்கம், காலஞ்சென்ற சின்னத்துரை மற்றும் கனகசபை, முத்தையா, விசாலாட்சி, கோபால பிள்ளை ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 26-7-97 சனிக்கிழமை காலை 10.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் நயினாதீவு சல்விபரவை மயாணத்தில் தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

தகவல்:
**சோ. குகனேசன்** (பேரன்)
(அதிபர் – நயினாதீவு)

5ஆம் வட்டாரம்,
நயினாதீவு. (48591)

### திருமதி மகேஸ்வரி துரைராசா

கொக்குவில் மேற்கைப் பிறப்பிடமாகவும், கே. கே. எஸ். வீதி, இணுவில் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மகேஸ்வரி துரைராசா அவர்கள் 23 - 7 - 1997 இல் திருகோணமலையில் காலமானார்.

அன்னார் சி. துரைராசா அவர்களின் அன்பு மனைவியும், சரோஜினிதேவி, சாந்தகுமாரி (சுவிஸ்), சிவசக்தி (அச்சகத் திணைக்களம், திருகோணமலை), சிவகுமார் (ஜேர்மனி), சாரதா (யூனியன் கல்லூரி, தெல்லிப்பளை) ஆகியோரின் அன்புத் தாயாரும், திரு. கணபதிப்பிள்ளை சண்முகநாதன் (சுவிஸ்) அவர்களின் மாமியாரும், செல்வி நிகர்ஷினியின் பேர்த்தியும், நல்லம்மா, வேலாயுதபிள்ளை, தங்கரத்தினம், பூமணி, சண்முகசுந்தரம், பரமலிங்கம், தவமணி ஆகியோரின் அன்புச் சகோதரியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 24 - 7 – 1997 இல் திருகோணமலையில் நடைபெற்றன என்பதை உற்றார், உறவினர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

தகவல்:
**குடும்பத்தினர்**

கே. கே. எஸ். வீதி,
இணுவில் மேற்கு,
இணுவில். (47348)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இன்று நடப்பவை

கொக்குவில் இந்துக் கல்லூரி ஆசிரியர் கழகம் ஏற்பாடு செய்துள்ள கல்விக் கருத்தரங்கு இன்றும் நாளையும் பிற்பகல் 2 மணி முதல் 4 மணி வரை கல்லூரி மண்டபத்தில் நடைபெறும். எஸ். குமாரவேல் விரிவுரைவழங்குவார்.

★ ★ ★

பருத்தித்துறை, கரவெட்டி, மருதங்கேணி ஆகிய கல்விக் கோட்டங்களிலுள்ள ஆசிரியர்களுக்கான சமாதான நட்புறவுக் கருத்தரங்கு நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில் இன்றும் நாளையும் காலை 8.30 மணி தொடக்கம் மாலை 4.30 மணி வரை நடைபெறவுள்ளதென கரவெட்டிக் கல்விக்கோட்டப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் வ. செல்வராசா அறிவித்துள்ளார். (உ-118)

★ ★ ★

உரும்பராய் தெற்கு (ஜே.265) உரும்பராய்மேற்கு (ஜே.263) ஆகியகிராமசேவை உத்தியோகத்தர் பிரிவுகளுக்கான விசேட அடையாள அட்டைகள் இன்று காலை 9 மணி முதல் கோண்டாவில் பஸ்டிப்போ அருகிலுள்ள இராணுவமுகாம் மக்கள் தொடர்பு காரியாலயத்தில் வைத்து வழங்கப்படும் என்றும் —

இதுவே கடைசிச் சந்தர்ப்பம் என்றும் —

மீதியாக உள்ளவை பிரதேசச் செயலகத்தில் ஒப்படைக்கப்படும் என்றும் —

கோப்பாய் பிரதேச செயலர் அறிவித்துள்ளார். (உ-154)

★ ★ ★

பண்ணாகம் ஸ்ரீ முருகன் இந்து சமய விருத்திச் சங்கத்தின் வெள்ளிவிழா இன்று பிற்பகல் 1.00 மணிக்கு ஸ்ரீ முருகன் அன்னதான சபை மண்டபத்தில் நடைபெறும்.


# Centre for Performing Arts

# திருமறைக் கலாமன்றம்

**Launching of a Monograph**

நூல் வெளியீடு

## JAFFNA THE LAND OF THE LUTE

by Prof. N.M. Saveri

## யாழ்ப்பாணம் - யாழ். நிலம்

Chair Person: Mr. K. Shanmuganathapillai
(Deputy Co-Coordinator UNESCO programme)

Critique (In English): Prof. A. Sanmugadas
(Dean, Faculty of Arts, University of Jaffna)

Critique (In Tamil): Dr. K. Kugapalan
(Head, Dept. of Geography, University of Jaffna)

சிறப்பு நிகழ்வாக

திருமறைக் கலாமன்றம் வழங்கும்

"சாகாத மனிதம்"

(நாடகம் - 40 நிமிடங்கள்)

இடம்; நாவலர் கலாசார மண்டபம்.

காலம்; 27-07-1997 ஞாயிற்றுக்கிழமை

நேரம்1 காலை 10-00 மணி (புதிய நேரம்)

ஆர்வலர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

V. J. Constantine
General Secretary

238, Main Street,
Jaffna. (C/1200)


## மரண அறிவித்தல்

### விநாசித்தம்பி முருகேசு

நயினாதீவைப் பிறப்பிடமாகக் கொண்ட வினாசித்தம்பி முருகேசு அவர்கள் 24 - 07 - 97 இல் சிவபதமடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற விநாசித்தம்பி தம்பதிகளின் அருமை மகனும், சிவக்கொழுந்துவின் அன்புக் கணவரும், நற்குணசிங்கம் (வர்த்தகர், கொழும்பு), கந்தசாமி (வர்த்தகர், கொழும்பு), இலட்சுமணன் (வர்த்தகர், குமாரவேலு அன்கோ-கொழும்பு), தங்கராசா (தொழில் நுட்பவியலாளர், ஜேர்மனி), நவரெத்தினம் (விரிவுரையாளர், இசைத்துறை, யாழ். பல்கலைக்கழகம்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், நீலாம்பிகை, சரஸ்வதி, தனலெட்சுமி, திருமதி தங்கராசா, புவனேஸ்வரி ஆகியோரின் அன்புமாமனாரும், காலஞ்சென்றவர்களான நாகலிங்கம், சின்னப்பு, நல்லையா, பரமலிங்கம், திருமதி தம்பையா ஆகியோரின் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 26- 7- 97 சனிக்கிழமை பகல் 11.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் நயினாதீவு இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
நா. வி. மு. நவரெத்தினம்
(மகன்)

நயினாதீவு-5. (48600)

மேலும் மரண அறிவித்தல்கள் 5 ஆம் பக்கத்தில்

## சமய சந்நிதிகளில்

நாயன் மார்கட்டு அருள்மிகு இராச இராசேஸ்வரி பேய்ச்சி அம்மன் கோயில் வருடாந்த மஹோற்சவம் நாளை ஞாயிறு முற்பகல் 10.45 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது. 10 ஆம் நாள் தேர்த் திருவிழாவும், 11 ஆம் நாள் தீர்த்தத் திருவிழாவும் இடம் பெறும். (ஐ)

★ ★ ★

சில்லாலை தெற்கு புனித யாகப்பர் ஆலயத் திருவிழா நேற்று முன் தினம் கொடியேற்றத்துடன் ஆரம்பமானது. நாளை ஞாயிற்றுக்கிழமை காலை திருநாள் திருப்பலி பூசையுடன் திருவிழா நிறைவுறும். (ஐ-4)

## செல்வா நினைவுத்தூபிக்கு மலரஞ்சலி

பண்டா—செல்வா ஒப்பந்தம் உருவாக்கப்பட்டு 40 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு இன்று சனிக்கிழமை காலை யாழ். முற்றவெளியில் அமைந்துள்ள தந்தைசெல்வாவின் நினைவுத் தூபியில் தந்தை செல்வா நினைவுகுழுவினராலும், அபிமானிகளாலும் மலரஞ்சலி செலுத்தப்படவுள்ளது

வடக்கு—கிழக்கு மாகாணங்கள் தமிழர்களின் மரபுவழித் தாயகம் என்பதை ஏற்றுக் கொண்டுள்ள எழுத்து மூலமான ஒப்பந்தம் இது என்றும் அதை நினைவு கூருமுகமாக இந்த அஞ்சலி நிகழ்ச்சி நடைபெறவிருப்பதாகவும் தந்தை செல்வா நினைவுக் குழு இணைச் செயலாளர்களில் ஒருவரான சாஅ.தர்மரத்தினம் தெரிவித்தார். (ஐ-135)

## நாளை

வட இலங்கைப் பத்திரிகையாளர் சங்கத்தின் மாதாந்த செயலமர்வு நாளை காலை 10 30 மணிக்கு (பழைய நேரம்) யாழ்ப்பாணம் நாவலர் மகா வித்தியாலயத்தில் நடைபெறும் என சங்கம் அறிவித்துள்ளது.

இம்முறை யாழ்ப்பாணம் யுனெஸ்கோ கருத்திட்ட அதிகாரி கோ. சி. வேலாயுதம் ''பத்திரிகையாளனின் சமூகப் பொறுப்பு'' என்ற பொருளில் விரியுரையாற்றுவார்.

★ ★ ★

யாழ். பாலர் கல்விக் கழக நிர்வாகத்திலுள்ள இராமநாதன் வீதி ஞானக்குழந்தை இல்ல விளையாட்டு விழா நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு பெரியபுலம் மகா வித்தியாலயத்தில் நடைபெறும். யாழ். கல்வி வலயம் I கல்விப்பணிப்பாளர் சு. இரத்தினராசா இவ்விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார்.

## அறிவித்தல்

### யாழ். பல்கலைக்கழகம், விஞ்ஞானபீடம்.

விஞ்ஞான பீடத்தைச் சேர்ந்த முதலாம் வருட மாணவர்கள் (இரண்டாம் அரையாண்டு), இரண்டாம் வருட மாணவர்கள் (முதலாம் அரையாண்டு), மூன்றாம் வருட மாணவர்கள் (முதலாம், இரண்டாம் அரையாண்டுகள்), நான்காம் வருட மாணவர்களுக்கான விரிவுரைகள் 1997 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 4 [illegible]

பதிவாளர்

(சி/1198)

# காணாமற்போனோர் விடயம் போராட்டம் நடத்த முடிவு!

யாழ்ப்பாணம், ஜூலை 26

குடாநாட்டில் பல்வேறு சம்பவங்களில் கைது செய்யப்பட்டு காணாமல் போனவர்கள் தொடர்பாக உரிய நடவடிக்கை எடுக்கப்படாததைக் கண்டித்து, வெகுஜனப் போராட்டம் நடத்துவது தொடர்பான முடிவுகளை மேற்கொள்வதற்காகக் கைதானோர், காணாமல் போனோர் பாதுகாவலர் சங்கம் நாளைகாலை 11மணிக்கு வேம்படி மகளிர் கல்லூரியில் கூடவிருக்கிறது.

அரசியல்கட்சிப் பிரதிநிதிகள், வெகுஜன அமைப்புக்களின் பிரதிநிதிகள் இக்கூட்டத்தில் பங்குபற்றுவர்.

சங்கத்தின் அங்கத்தவர்கள் இக்கூட்டத்துக்கு அழைக்கப்பட்டுள்ளனர். (உ-3)

## ஆசிரியர் பரீட்சைக்கு தோற்றுவோருக்கு!

யாழ்ப்பாணம், ஜூலை 26

ஆசிரியர் சேவை வகுப்பு 1 பதவி உயர்வுப் பரீட்சைக்கு 1996 ஆம் ஆண்டு வர்த்தமானி அறிவித்தலுக்கு அமைய விண்ணப்பித்தவர்கள் இதுவரை தமக்குரிய அனுமதி அட்டைகள் கிடைக்காவிடின் தமது விவரங்களை எதிர் வரும் திங்கட்கிழமைக்கு முன்பாக கல்வித் திணைக்களம் வலயம் I இல் சமர்ப்பிக்கும் வண்ணம் வலயம் I இன் கல்விப் பணிப்பாளர் கேட்டுக் கொண்டுள்ளார். (உ-5)

## ராஜகோபால் காலமானார்

கொழும்பு, ஜூலை 26

சிரேஷ்ட தமிழ்ப் பத்திரிகையாளரான பொன் ராஜகோபால் நேற்று முன்தினம் காலமானார்.

முப்பது வருடங்களுக்கு மேலாக 'வீரகேசரி' வார வெளியீட்டின் ஆசிரியராகக் கடமையாற்றிய இறுதிநாள்களில் 'தினக்குரல்' செய்தித் தாளின் ஆசிரியபீடப் பணிப்பாளராகப் பணியாற்றி வந்தார். இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்திலும்நீண்ட காலமாக நிகழ்ச்சிகளை நடத்தி வந்தார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று நடைபெற்று, பூதவுடல் கொழும்பு மருத்துவக் கல்லூரிக்குக் கையளிக்கப்படும். (உ-5)


நாளை

ஆடி 11

ஞாயிற்றுக்கிழமை

திதி: அட்டமி
பிற்பகல் 4.04 வரை.

நட்சத்திரம்: அச்சுவினி
முற்பகல் 10.53 வரை.

சுபநேரம், 9.02 - 10.32

ராகுகாலம்: 4.32 - 6.02

(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)


## மித்திராவுக்கு மீண்டும்வேலை

கொழும்பு, ஜூலை 26

சிக்காக்கோவில் இருந்து இலங்கை வந்த தமிழ் பெண் டாக்டர் ஒருவருக்கு தமது சீருடையைவழங்கினாரென்ற குற்றச்சாட்டில் கட்டாய லீவில் அனுப்பப்பட்ட பிரதி பொலீஸ் மா அதிபர் மித்ரா ராஜசிங்கவுக்கு மீண்டும் வேலை வழங்கப்பட்டுள்ளது.

இவர் மீதான குற்றச்சாட்டுக் குறித்து சிக்காக்கோ சென்ற பொலீஸ் கோஷ்டி ஒன்று விசாரணை நடத்தியதையடுத்து இவருக்கு மீண்டும் வேலை வழங்கப்பட்டுள்ளது.

பொலீஸ்மா அதிபருக்கு அடுத்த தரத்தில் உள்ள இவர் இம்மாதத்துடன்ஓய்வு பெறுகிறார். (150-3)

## ஆசியக் கிண்ண இறுதி இன்று

கொழும்பு, ஜூலை 26

ஆசியக் கிண்ண கிரிக்கெட் இறுதிப் போட்டி இன்று கொழும்பு பிரேமதாசா விளையாட்டரங்கில் இலங்கை, இந்திய அணிகளுக்கிடையே நடைபெறவுள்ளது.

கலந்து கொண்ட லீக் போட்டிகள் மூன்றிலும் வெற்றிபெற்று இலங்கை அணி 6 புள்ளிகளுடன் இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றுள்ளது,

இந்தியா, பாகிஸ்தான் அணிகள் தலா 3 புள்ளிகளைப் பெற்றுள்ள போதிலும் ஓட்ட வேகவீதத்தில் இந்தியா முன்னிற்பதால் இந்திய அணி இறுதிப் போட்டியில் விளையாடும் தகுதியைப் பெற்றுள்ளது. (உ-10)

### வல்லை...

(முதலாம் பக்கத் தொடர்)

என்றும்—

நீதிபதி ஏ. என். இராமச்சந்திரன் உத்தரவிட்டு, வழக்கை ஒத்திவைத்தார். (உ-15)

### இக்பால்...

(முதலாம் பக்கத் தொடர்)

சென்று அவருக்கு கொலை மிரட்டல் விடுத்ததாகக்கூறப்படுகின்றது.

இத்தகவலை கேள்வியுற்ற ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா, லண்டனில் இருந்தவாறே, அத்தாஸின் பாதுகாப்புக்கு உரிய ஏற்பாடுகளைச் செய்யுமாறு உத்தரவிட்டார் என்றும்—

அந்த உத்தரவுப்படி அத்தாஸுக்கு உரிய பாதுகாப்பு வழங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டிருப்பதாகவும்—

வெகுஜனத் தொடர்பு சாதன, தபால்—தொலைத் தொடர்பு அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்தார்,

ஜே. வி. பி. வன்முறைக் காலத்திலும் அத்தாஸுக்கு இவ்வாறு கொலைப் பயமுறுத்தல் விடுக்கப்பட்டதும்—

இதன் காரணமாக சுமார் இரண்டு ஆண்டுகாலம் கொழும்பிலிருந்து விலகி சிங்கப்பூர் போன்ற இடங்களில் அவர் தங்கியிருந்தார் என்பதும்—

குறிப்பிடத்தக்கது. (உ-3-21)

### 5 கட்சி...

(முதலாம் பக்கத் தொடர்)

முயற்சிப்பதால் கூட்டமைப்பிலிருந்து விலக ரெலோ—முஸ்தீபு செய்து வருகின்றது. இது தொடர்பான இறுதித் தீர்மானம் நாளை மறுதினம் நடைபெறும் கட்சியின் மத்திய குழுக் கூட்டத்தில் எடுக்கப்படும்''— இவ்வாறு ரெலோத் தலைவர் சிவாஜி லிங்கம் தெரிவித்தார். (உ-3-21)

### லாலு...

(முதலாம் பக்கத் தொடர்)

யாதவ்வை பிணையில் விட முடியாத கைது உத்தரவை மத்திய புலனாய்வுப் பிரிவின் சிறப்பு நீதிமன்றம் நேற்று விடுத்தது.

இதேவேளை —

எதிர்வரும் செவ்வாய்க் கிழமை வரை லாலு பிரசாத் யாதவ்வைக் கைது செய்யக் கூடாது என்று இந்திய உச்ச நீதிமன்றம் நேற்றுத் தடைவிதித்தது.

முன்பிணை அனுமதி கோரி முதல்வர் லாலு பட்னா உயர் நீதிமன்றத்தில் நேற்று முன்தினம் தாக்கல் செய்திருந்த மனு நிராகரிக்கப்பட்டதை அடுத்தே அவர் மீண்டும் உச்ச நீதிமன்றத்தில் அது தொடர்பாக மனுத்தாக்கல் செய்தார். அந்த மனுவை ஏற்றுக் கொண்டே உச்ச நீதிமன்றம் இந்த இடைக்கால உத்தரவை வழங்கியது. (ஐ-3)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேட்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம், கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 26-07-1997 இல் அச்சிட்டு வெளியிடப் பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சஞ்சீவி சஞ்சிகை

வைத்திய ஆலோசனைக்கு ஏற்ப மூக்குக் கண்ணாடிகள் பெறுவதற்கும், சிறந்த முறையில் பற்களைக் கட்டிக் கொள்வதற்கும் நாட வேண்டிய இடம்

**பி. ஜெ. பர்னாண்டோ**

542, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

(சி/1189)

26 - 07 - 1997 சனிக்கிழமை

## கருத்துக் கலசம்

### உதவுங்கள்!

யாழ்ப்பாணம் ஜெய்ப்பூர் செயற்கைக் கால் திட்டத்தின் பத்தாவது ஆண்டு நிறைவு இன்றாகும். ஜெய்ப்பூர் திட்டம் ஆரம்பிக்கப்பட்ட போது இருந்த தேவையை விட, இப்போது அதன் சேவை பத்து மடங்குக்கும் அதிகமாகத் தேவைப்படுகிறது.

தமிழர்களின் உரிமைப் போர் 1983 ஜூலை 23 ஆம் திகதீயன்று இனப்போராகத் தீவிர மடைந்தது. அன்றிலிருந்து ஷெல் வீச்சு, விமானக் குண்டு வீச்சு ஆகிய இரண்டினாலும் குடாநாட்டு மக்களில் பெரும் எண்ணிக்கையினர் அங்கவீனராகினர். கைகள், கால்களை இழந்து ஊனமுறுவோரின் எண்ணிக்கை நாளாந்தம் அதிகரித்துக் கொண்டே வந்தது. இயற்கை அங்கவீனர் — ஊனமுற்றோர் — மிகவும் சொற்ப எண்ணிக்கையாக இருந்த குடாநாட்டு சமூகத்தில், ஊனமுற்றோர் கூட்டம் பெருகியது.

அவர்களுக்குப் புனர்வாழ்வளித்து, அவர்கள் சமூகத்தின் ஏனைய மக்கள் போன்று வாழ்வதற்கு உதவும் உயரிய நோக்குடனேயே மேற்படி திட்டம் அமைக்கப்பட்டது.

இந்த வகையில் ஜெய்ப்பூர் சங்கம் செயற்கைப்பாதங்களை உற்பத்தி செய்யும் தொழிற்சாலை ஒன்றை அமைத்து தனது பிரதான பணியை ஆற்றி வந்தது; வருகிறது. பல இடர்கள், இடைஞ்சல்கள், இடம்பெயர்வுகள், இயலாமைகள், இல்லாமைகளின் மத்தியிலும் ஜெய்ப்பூர் திட்டம் தனது பணிகளைத் தொடர்கிறது.

போரின் ஆரம்ப காலத்தில் பல நூற்றுக்கணக்கானோரை ஊனமுற வைத்த ஷெல் வீச்சு, விமானத் தாக்குதல், இராணுவத் தாக்குதல் ஆகியவற்றுக்கும் மேலதிகமாக நிலக்கண்ணி மிகப் பெரும் எண்ணிக்கையானோரை மிகக் குறுகிய காலத்தில், சமீபத்தில் ஊனமுற்றோராக்கி விட்டது.

அதனால் ஜெயப்பூர் திட்டம் போன்ற தொண்டர் நிறுவனங்களின் பணி முன்னரை விட இப்போது பெரிதும் வேண்டப்படுவதாகும்; விஸ்தரிக்கப்பட வேண்டியுமுள்ளது.

ஊனமுற்றவர்கள் தாம் சமூகத்தில் இருந்து புறக்கணிக்கப்பட்டவர்கள், ஒதுக்கப்பட்டவர்கள் என்ற உணர்வு இன்றி நிறைந்த வாழ்வு நடத்தக் கூடியதாக அவர்களுக்குரிய புனர்வாழ்வு மற்றும் நிவாரணப் பணிகள் வகுக்கப்பட வேண்டும்.

அவர்களின் புது வாழ்வுக்குரிய வளங்கள், வசதிகளைப் பெருக்குவதற்கு மக்கள் ஆதரவு வழங்க வேண்டும். சமூக நலனின் அக்கறையுள்ள நிறுவனங்களும் ஆலயங்களும் பெரிதும் உதவலாம்; உதவ வேண்டும். ஆலய நிர்வாகிகள், பரிபாலகர்கள் கோயிற் செலவுகளைச்சுருக்கி ஆதரவற்றோருக்கு — ஊனமுற்றோருக்கு — உதவ வேண்டும்.

அடுத்தவன் சிரிப்பில் ஆண்டவனைக் காணுங்கள்.

# விண்ணில் சிக்கிய மூவர் மீண்டு வருவார்களா?

வீதி விபத்துக்களும் அதற்கு மேல் வானில் விமானங்கள் நேருக்கு நேர் மோதிச் சிதறும் விமான விபத்துக்களும் சாதாரண நிகழ்வாக மாறிவரும் இக்கால கட்டத்தில் விண்வெளியில் இரு விண்கலங்கள் மோதிக்கொண்ட ஒரு விபத்துப் பற்றிய செய்தி பெரும் பரபரப்பை ஏற்படுத்தியிருக்கின்றது.

இந்த மோதல் பல சிக்கல்களையும் தோற்றுவிக்கத் தவறவில்லை.

பல்லாயிரக்கணக்கான கோடி டொலர் விண்வெளித் திட்டம் ஒன்று நாசமாகும் நிலை; விண்ணில் மூன்று விண்வெளி வீரர்களின் உயிர் ஊசலாட்டம்; அமெரிக்க — ரஷ்ய விண்வெளி உறவு நிலையில் பெரும் குழப்பம் — இப்படி பல்வேறு பிரச்சினைகளைத் தோற்றுவித்திருக்கின்றது 'மிர்' விண் நிலையத்தில் ஏற்பட்டுள்ள விபத்து.

### 'மிர்' விண்வெளி ஆய்வு நிலையம்

'மிர்' (MIR) என்ற இந்த விண்வெளி ஆய்வு நிலையம் 1986 இல் விண்வெளிக்கு ஏவப்பட்டது. 5 வருட திட்டம் ஒன்றின் அடிப்படையில் ஏவப்பட்ட இது 11 வருடங்களாக — இதுவரை 65 ஆயிரம் தடவைகள் — பூமியை வலம் வந்திருக்கிறது.

இதில் மூன்று வெண்வெளி வீரர்களுக்கான இருக்கைகள், படுக்கை, பயிற்சி, சாப்பாட்டு அறை போன்ற இதர வசதிகள் எல்லாம் செவ்வனே அமைந்திருந்தன. காலத்துக்கு காலம் இக்கலங்களுக்கு பன்னாட்டு விண்வெளி வீரர்கள் அனுப்பப்பட்டும் மாற்றப்பட்டும் வந்திருக்கிறார்கள். தவிர இவர்களுக்கு வேண்டிய உணவு வகைகள் மற்றும் பல பொருள்களும் சாதனங்களும் கூட பூமியில் இருந்து அவ்வப்போது அனுப்பப்பட்டே வந்திருக்கின்றன.

### கடந்த பெப்ரவரியில் தீப்பிடித்தது

இந்தப் 11 ஆண்டு காலப் பகுதியில் பூமியை வலம் வரும் இந்த விண்கலம் இக்காலத்தில் சுமார் 1500 சிக்கலான பிரச்சினைகளை எதிர்கொண்டு இருக்கிறது.

1997 பெப்ரவரியில் இதில் தீப்பிடித்துக் கொண்ட வேளை அதில் இருந்த வீரர்கள் திக்குமுக்காடிப்போனார்கள். ஓர் ஒட்சிசன் சிலிண்டரில் இருந்து பற்றிய தீ இரண்டு அடி வரை சுவாலை விட்டு எரிந்ததாகவும், ஆய்வுகூட உட்புறம் புகைமூட்டம் பரவிவிட்டதாகவும், 90 செக்கன்களில் தீ கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டதாகவும் செய்திகள் வெளிவந்தன. அப்போது அக்கலத்தில் இருந்தவர்களில் ஒருவரான லினெஙகர் (Linenger) தற்போது பூமிக்குத் திரும்பி இருக்கிறார்.

### விநியோகக் கலம்

கடந்த ஏப்ரல் மாதம் 'மிர்' உடன் இணைந்து கொண்ட விநியோகக்கலம் 'Progress M' பல தொன் எடைகொண்ட உணவு மற்றும் அவசிய பொருள்களை அங்கே இறக்கிவிட்டு, அங்கு அதுவரை சேர்ந்திருந்த மனிதக கழிவுகள் மற்றும் அவசியமற்ற பொருள்களுடன் திரும்பி இருந்தது.

'மிர்', ஏழு கலத்தொகுதிகளை ஒருங்கு சேர்த்த ஓர் அமைப்பு ஆகும். இதில் அடிக்கடி விநியோக நோக்கங்களுக்காக இணைந்தும் மீண்டும் வரும் 'Progress M' ஓர் அங்கம் ஆகின்றது.

### மோதியது

கடைசியாக கடந்த 2 ஆம் திகதி 'மிர்' உடன் இணைவதற்காக — அத்தியாவசிய விநியோகப் பொருள்களுடன் — 'Progress M' விரைந்து கொண்டிருந்தபோதே இந்த விபத்து இடம் பெற்றது.

அன்றைய தினம் அதிகாலை 5. 30 மணி; வாஷிங்டனுக்கு மேல் 'மிர்' சென்று கொண்டிருந்த சமயம் அது; 'மிர்' உடன் progress M மீண்டும் இணைய வேண்டிய நேரம்......

'மிர்' இனது அலுமினிய உடலினுள் அமுக்கம் சீராக இருக்கிறது. உள்ளே செயற்பட்டுக் கொண்டிருக்கும் வீரர்கள் மூவரில் மைக்கேல் போல் (Michael foale) என்ற அமெரிக்கரும் வசிலி சிபிலியெவ் (Vasily Tisbliyev,) அலெக்சாண்டர் லாசுற்கின் (Alexander Lazutkjn) ஆகிய இரு ரஷ்யர்களும் அடங்குகிறார்கள்.

காற்று அடைக்கப்பட்ட அறைகளுள் உலாவித் திரிந்து தமது கருமங்களை சற்றுச் சுதந்திரமாகவே மேற்கொள்ளும் வசதிகள் இவர்களுக்கு உண்டு. ஆறு கலங்களுள்ள பிரதான கலத்துடன் இணைய 'Progress M' நெருங்கிக் கொண்டிருந்த அந்த வேளை மைக்கேல் போல் ஒரு லேசர்கதிர் தொழிற்பாட்டில் மும்முரமாக இருந்தார்.

பிரதான கலத்தின் நடுவிலே பொறியியலாளரான அலெக்சாண்டர் லாசுற்கினும் வசிலியும் விநியோகக் கலத்தை 'மிர்' உடன் இணைக்கும் செயற்பாடுகளை முன்னெடுத்து நின்றனர். இவர்கள் இருவரும் மைக்கேல் போலை எச்சரிக்க நினைக்கும் கணமே அவ்விபத்து இடம்பெற்று விட்டது.

இணையவந்த 'Progress M' தகுந்த நேரத்தில் ஒரு ரொக்கட் வெடிக்கத் தவறிய காரணத்தால் சற்றுத் திசை மாறி பிரதான கலத்தை தாண்டி 'Spektr' என்ற இரண்டாவது கலத்தின் சோலார் சிறகுகளில் மோதித் திரும்பி, 'Spektr' சுவரில் இடித்துமோதி அப்பாற் கடந்து விலகிச் சென்றது. எட்டிப் பிடிக்கவா முடியும்?

### 'மிர்' செயலிழக்க தொடங்கியது

ஏழரைத்தொன் எடை கொண்டு இடித்த தாக்கம் சும்மாவா விடும்? 'மிர்' நிலையம் செயல் இழக்கத் தொடங்கியது. இருள் உள்ளே அப்பிக் கொண்டது. நிலையத்தின் செயற்பாடுகள் ஸ்தம்பிதம் அடைந்தன.

உயிருக்காக போராடவேண்டிய நிலையில் கலத்தைக் காக்க வேண்டிய கட்டம். அமெரிக்காவின் நாஸாவும் சோவியத் ஆய்வு நிலையங்களும் செய்வதறியாது திகைத்தன.

ஆம். அடிபட்ட இடத்தில் 3 சதுர சென்ரி மீற்றர் அளவில் ஒரு துவாரம் ஏற்பட்டு விட்டது. இத்தனை காலம் உள்ளே அடைபட்டு இருந்த காற்று குசியாக அண்ட வெளிக்குள் சுதந்திரம் தேடிப் பிரவேசிக்கத் தொடங்கிவிட்டது. கலத்தின் உள்ளே அமுக்கம் வேகமாக இறங்க ஆரம்பித்தது.

**-அம்பிகா-**


43 அடி நீளமான அடிபட்ட 'Spcktr' கலம் வெளியே நான்கு பாரிய சோலர் — சூரியசக்தி படலங்களையும் உள்ளே மைக்கேல் போலின் படுக்கை வசதிகளையும், அமெரிக்க ஆய்வு கூடப் பகுதியையும் கொண்டிருந்தது. இதனுள் மின்னல் போலப் புகுந்த அவன், ஏற்பட்ட துவாரத்தை முதலில் அடைத்து நிலைமையைக் கட்டுக்குள் கொண்டுவர 8 நிமிடங்கள் பிடித்தன.

### வெப்பநிலை உயரத் தொடங்கியது

எனினும் அமுக்கம் குறைந்த நிலையிலும், பல வயர்கள் அறுபட்ட நிலையிலும், இருளிலும் மேலும் பல அவசர நிலமைகளை சமாளிக்க வேண்டி ஏற்பட்டது. நிலையம் திசை திரும்பி விட்டதால் அதன் சோலார்

(XII ஆம் பக்கம் பார்க்க)

| | | |
|---|---|---|
| A | — | மிர் நிலையம் |
| B | — | Progress M |
| X | — | இணைய வேண்டிய பாதை |
| $Y_1Y_2$ | — | தவறான பாதை |
| $Y_3$ | — | மோதுகை |
| $Y_4$ | — | தப்பிச் சென்றது |
| C | — | மைய நிலையத்தின் குறுக்குத் தோற்றம் |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வட அயர்லாந்து நெருக்கடிக்குத் தீர்வுகாண

# ஐ. ஆர். ஏயின் போர்நிறுத்தம் இறுதிவாய்ப்பு

## சமரச முயற்சி மீண்டும் தோற்றால் அங்கு நிலைமை மோசம் அடையலாம்

கடந்த ஞாயிற்றுக்கிழமை முதல் வட அயர்லாந்தில் மீண்டும் யுத்த நிறுத்தம் அமுலுக்கு வந்துள்ளது.

வட அயர்லாந்தில் பிரிட்டனின் ஆட்சியை முடிவுக்குக் கொண்டு வருவதற்காக கடந்த 28 வருடங்களாகப் போராட்டம் நடத்தி வரும் ஐ. ஆர். ஏ. என அழைக்கப்படும் ஐரிஷ் குடியரசு இராணுவம் யுத்த நிறுத்தம் செய்யவும் சமாதானப் பேச்சுக்களை மீண்டும் ஆரம்பிக்கவும் இணக்கம் தெரிவித்துள்ளது.

வட அயர்லாந்துப் பிரச்சினைக்கு சமாதானத் தீர்வு காணும் நோக்குடன் 1994 ஓகஸ்ட் மாதம் செய்து கொள்ளப்பட்ட யுத்த நிறுத்தம் 18 மாத காலமே நீடித்தது.

இழு பறிகளின் பின்னர் 1996 பெப்ரவரியில் அந்த யுத்த நிறுத்தம் முடிவடைந்தது.

லண்டனில் பெரும் குண்டுத் தாக்குதல் ஒன்றை நடத்தியது மூலம் ஐ.ஆர்.ஏ. இந்த யுத்த நிறுத்தத்தை முடிவுக் குக் கொண்டுவந்தது.

அப்போதைய ஐரிஷ் குடியரசுப் பிரதமர் அல்பேர்ட் ரெனோல்ட்ஸ் ( ALBERT Reynolds ) பிரிட்டனின் கொன்சர் வேட்டிவ் பிரதமர் ஜோன்மேஜர் ஆகியோர் அமெரிக்க அதிபர் பில் கிளின்ரனின் உதவியுடன் அப்பொழுது யுத்த நிறுத்தம் ஒன்றுக்கு ஐ. ஆர். ஏயை இணங்க வைத்திருந்தனர்.

கத்தோலிக்கர்களுக்கும் புரட்டஸ்தாந்து மதப் பிரிவினருக்கும் இடையிலான அடிப்படை நம்பிக்கையீனமே அப்பொழுது பேச்சுக்கள் முறிவடையக் காரணமாக இருந்தன.

### அயர்லாந்து வரலாறு

தற்போது ஐரிஷ் குடியரசு என அழைக்கப்படும் அயர்லாந்து முன்னர் பிரிட்டனின் கீழ் இருந்தது.

முழு அயர்லாந்திலும் கத்தோலிக்கர்களே பெரும்பான்மையினர்.

எனினும் அயர்லாந்தின் வட பகுதியில் கத்தோலிக்கர்களை விட புரட்டஸ் தாந்து மதத்தினர் பெரும் பான்மையினராக செறிந்து வாழ்ந்தனர்.

அயர்லாந்துக்கு பிரிட்டன் சுதந்திரம் வழங்கிய போது அயர்லாந்தின் வட பகுதியில் உள்ள புரட்டஸ் தாந்து மதத்தினர் அதற்கு எதிர்ப்புத் தெரிவித்தனர். அயர்லாந்தின் வட பகுதி பிரிட்டனுடன் இருக்க வேண்டும் என்று புரட்டஸ்தாந்து மதத்தினர் கோரினர்.

பிரிட்டன் அயர்லாந்துக்கு சுதந்திரம் வழங்கிய போது தற்பொழுது வட அயர்லாந்து என அழைக்கப்படும் அயர்லாந்தின் வட பகுதியை தன்னுடன் இணைத்துக் கொண்டது.

பிரிட்டனுடன் இணைக்கப்பட்ட வட அயர்லாந்தில்



ரொனிபிளயர்

புரட்டஸ் தாந்து மதப் பிரிவினர் 60 சத வீதம். கத்தோலிக்கர்கள் 40 சத வீதம்.

வட அயர்லாந்தில் சிறு பான்மையினராக இருந்து வரும் கத்தோலிக்கர்கள், பிரிட்டிஷ் ஆட்சியில் இருந்து வட அயர்லாந்து விடுபட வேண்டும் என்று கோரி வருகிறார்கள்.

புரட்டஸ் தாந்து மதப் பிரிவினர் வட அயர்லாந்து தொடர்ந்து பிரிட்டனின் கீழ்

உலக உலா
என்.பி.சீலன்

இருந்து வர வேண்டும் என்று கோருகின்றனர்.

### சின் பீன்னும் ஐ. ஆர். ஏயும்

கத்தோலிக்கர்களின் அரசியல் கட்சி சின் பீன் (Sinn feln). அதன் தலைவர் ஜெரி அடம்ஸ் ( Gerry Adams ). சின்பீன் கட்சியின் ராணுவப் பிரிவே ஐரிஷ் விடுதலை இராணுவம். (ஐ. ஆர். ஏ)

### குண்டுக் தாக்குதல்கள்

சமீபகால வரலாற்றில் இல்லாதவாறு தொடர்ச்சியான குண்டுத் தாக்குதல்களை நடத்தியது மூலம் பிரிட்டிஷ் அரசை படி இறங்க வைப்பதில் ஐ. ஆர். ஏ. வெற்றி கண்டுள்ளது. இதன் குண்டுத்தாக்குதல்கள் வட அயர்லாந்தில் மட்டும் அல்லாது பிரதான பூமியான லண்டனிலும் நடத்தப்பட்டன.

வட அயர்லாந்தில் கத்தோலிக்கர்களுக்காக ஐ. ஆ. ஏ. போராடுவது போன்று புரட்டஸ்தாந்து மதப் பிரிவினருக்காக உல்ஸ்ரர் யூனியனிட்ஸ் எனப்படும் வலது சாரி புரட்டஸ்தாந்து இயக்கம் செயற்பட்டு வருகிறது.

### வாய்ப்பாக அமைந்த அரசியல் மாற்றங்கள்

பிரிட்டனில் மே மாதம் நடைபெற்ற தேர்தலில் தொழிற்கட்சித் தலைவர் ரொனிபிளயர் அமோக வெற்றி ஈட்டி இருந்தார்.

அதே போன்று ஐரிஷ் குடியரசில் நடைபெற்ற தேர்தலில் முன்னேற்ற ஜனநாயகக் கூட்டணி மிகவும் சிறிய பெரும் பான்மையுடன் ஆட்சியைக் கைப்பற்றி உள்ளது பேர்ட்டி அஹென் (Bertie-Ahen) புதிய பிரதமராகி உள்ளார்.

தேர்தலில் தோற்றுப். போன முன்னாள் பிரதமர் அல்பேர்ட்ரெனோர்ட்ஸ் வட அயர்லாந்தின் சிறப்புத் தூதுவராக தற்பொழுது புதிய பிரதமரினால் நியமிக்கப்பட்டுள்ளார்.

தற்போதைய யுத்த நிறுத்தம், நடைபெறப் போகும் சமாதானப்பேச்சுக்களில் அல்பேர்ட் ரெனோல்ட்ஸின் பங்களிப்பும் பெரும் அளவில் எதிர்பார்க்கப்படுகிறது.

வட அயர்லாந்தில் உள்ள ஐரிஷ் குடியரசு ஆதரவு கத்தோலிக்க தீவிரவாதிகளும் பிரிட்டிஷ் ஆதரவு புரட்டஸ் தாந்து யூனியனிஸ்ட்டுகளும் பேச்சுவார்த்தை ஒன்றுக்கு இணங்கிவருவதற்கு பிரிட்டனிலும், ஐரிஷ்குடியரசிலும் கடந்த மே, ஜூன் மாதங்களில் இடம் பெற்ற அரசியல் மாற்றங்கள் தூண்டுகோலாக அமைந்து விட்டன.

ஐ. ஆர். ஏ. யுத்த நிறுத்தத்தைக் கைவிட்ட பின்னர் அமெரிக்கா, பிரிட்டன், ஐரிஷ் குடியரசு ஆகிய மூன்று நாடுகளுக்கும் இடையில் துண்டிக்கப்பட்ட உயர் மட்டத் தொடர்புகள் தற்போதைய யுத்த நிறுத்த அறிவிப்பை அடுத்து மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

### ஆயுதங்களே முக்கிய பிரச்சினை

ஐ, ஆர். ஏ. யிடம் இருந்து வரும் பெரும் தொகையான ஆயுதங்கள் சமாதானப் பேச்சுக்களின் போது நெருக்கடியை ஏற்படுத்தலாம் என்று அஞ்சப்படுகிறது.

சமாதானப் பேச்சுக்கள் ஆரம்பிக்கும்போதே ஐ. ஆர். ஏ. ஆயுதங்களைக் களைய ஆரம்பிக்க வேண்டும் என்று புரட்டஸ்தாந்து உல்ஸ்ரர் யூனியனிஸ்ட்டுகள் கோருகின்றனர்.

ஆனால் ஐ. ஆர். ஏ. இதற்கு மறுப்புத் தெரிவித்து வருகிறது. முந்தைய ... இன்றியே போர் நிறுத்தம் கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது.

ஐ. ஆர். ஏ. யின் ஆயுதங்களில் பெரும் பகுதி எல்லையில் உள்ள கத்தோலிக்க நாடான ஐரிஷ் குடியரசிலேயே மறைத்து வைக்கப் பட்டுள்ளன என்று நம்பப் படுகிறது.

வட அயர்லாந்தில் நிலை கொண்டுள்ள பிரிட்டிஷ் படைகள் கடந்த காலங்களில் நடத்திய தேடுதல்களில் ஐ. ஆர். ஏ. யின் பெரும் அளவிலான ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டிருந்தன.

இப்படி இருந்தும் ஐ. ஆர். ஏ. யிடம் 2 தொன் Semtex வெடி மருந்து, 650 ஏ. கே-47 துப்பாக்கிகள், ஓரளவு தானியங்கி ரைபிள்கள், கவச வாகனங்களில் பொருத்தக் கூடிய 20 ரஷ்ய கனரக கலிபர் இயந்திரத்துப்பாக்கிகள். டசின் சாதாரண இயந்திரத் துப்பாக்கிகள், 100 றிவோல்வர்கள், 40 றொக்கட் லோஞ்சர்கள் இருப்பதாக புலனாய்வுத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

லிபிய ஜனாதிபதி முவாம்மர் கடாபியினால் 1980 ஆம் ஆண்டு ஐ. ஆர். ஏக்கு ரகசியமாகக் கொடுக்கப்பட்ட ஆயுதங்களும் இவற்றுள் அடங்கும்.

இவற்றைவிட ஐ.. ஆர். ஏ. யிடம் குறைந்தது ஒரு 'சாம் — 7 ஏவுகணையாவது இருக்கலாம் என்றும் சந்தேகிக்கப்படுகிறது.

இந்த ஆயுதங்களில் 75 சதவீதமானவை ஐரிஷ் குடியரசிலேயே மறைத்து வைக்கப்பட்டுள்ளன.

ஐரிஷ் குடியரசுக்குள் மறைத்து வைக்கப்பட்ட ஆயுதங்களில் 1985 க்கும் 93க்கும் இடையில் 800 துப்பாக்கிகளும் 3 லட்சம் சுற்று சுடக் கூடிய ரவைகளும் குண்டு தயாரிக்கும் கருவிகளும் ஐரிஷ் கார்டா (Irish Garda) என அழைக்கப்படும் ஐரிஷ் குடியரசுப் பொலீஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

ஐ. ஆ. ஏயின் முக்கிய இலக்கு வட அயர்லாந்தை பிரிட்டிஷ் ஆட்சியில் இருந்து விடுவிப்பதுதான். கத்தோலிக்க நாடான ஐரிஷ் குடியரசுடன் மீண்டும் இணைக்கும் நோக்கம் அதற்கு இருப்பதாகத் தெரிய வில்லை. இதனால் தான் ஐரிஷ் குடியரசின் முழு ஆதரவை ஐ.ஆர்.ஏ. பெற முடியாது இருக்கிறது



ஜெரி அடம்ஸ்

### அனைத்து கட்சிகள் கூட்டம்

தற்போது அறிவிக்கப்பட்ட யுத்த நிறுத்தப் பிரகடனத்துக்கு அடுத்த கட்டமாக செப்ரெம்பர் 15 ஆம் திகதி வட அயர்லாந்துப் பிரச்சினை தொடர்பான அனைத்துக் கட்சிகள் கூட்டம் நடைபெற உள்ளது. சின்பீன் கட்சியின் தலைவர் ஜெரி அடம்ஸும் இதில் கலந்து கொள்கிறார்.

கடந்த ஞாயிறன்று அமுலுக்கு வந்த யுத்த நிறுத்தம் பற்றிய அறிவிப்பை ஐரிஷ் குடியரசின் தலைநகரான டப்ளினில்விடுத்தபோது வட அயர்லாந்தில் பிரிட்டிஷ் ஆதிக்கம் முடிவுக்கு வரும் என்று சின்பீன் அறிவித்திருந்தது.

சின்பீன் கட்சியின் ஒரே நோக்கம் வட அயர்லாந்தை பிரிட்டிஷ் ஆட்சியில் இருந்து விடுவிப்பதாக இருப்பதால் வரப்போகும் சமாதானப் பேச்சுக்கள் எவ்வளவு தூரம் வெற்றி அளிக்கும் என்பது கேள்விக் குறியாகவே இருந்து வருகிறது.

கடந்த காலங்களில் வட அயர்லாந்தில் நடத்தப்பட்ட தாக்குதல்களில் 3 ஆயிரத்துக்கும் அதிகமானோர் கொல்லப்பட்டுள்ளனர்.

பேச்சுக்கள் தோல்வி அடைந்து யுத்த நிறுத்தம் மீண்டும் முறிந்து போகுமானால் வட அயர்லாந்து நிலைமை இன்னும் மோசமடையலாம். ★

## சமாதான முயற்சியை எதிர்க்கும் ஐரிஷ் தேசிய விடுதலை ராணுவம்

வட அயர்லாந்தில் ஐ. ஆர். ஏ. அறிவித்துள்ள யுத்த நிறுத்தத்துக்கு ஐ. ஆர். ஏ. யில் இருந்து பிரிந்து சென்ற போட்டி தீவிரவாத இயக்கமான "ஐரிஷ் தேசிய விடுதலை ராணுவம்" எதிர்ப்புத் தெரிவித்து வருகிறது.

ஐ. ஆர். ஏ. யின் யுத்த நிறுத்த அறிவிப்பை நிராகரித்துள்ள ஐரிஷ் தேசிய விடுதலை ராணுவம் வடஅயர்லாந்தில் தொடர்ந்து தனது தாக்குதலை நடத்தப் போவதாக அறிவித்துள்ள போதிலும் இதன் நடவடிக்கை தற்போதைய சமாதான முயற்சிகளில் பெரிய தாக்கத்தை ஏற்படுத்த மாட்டாது என்று அவதானிகள் தெரிவிக்கின்றனர்.

1994 ஆம் ஆண்டு ஐ. ஆர். ஏ. யுத்த நிறுத்த அறிவிப்பை விடுத்த போது "ஐரிஷ் தேசிய விடுதலை ராணுவம்" அப் பொழுதும் தனது எதிர்ப்பை வெளியிட்டது.

## ஐ. ஆர். ஏயும் ஈ.ரி.ஏயும்

வட அயர்லாந்தில் ஐ. ஆர். ஏ. இருப்பது போன்று ஸ்பெயினில் "ஈ. ரி. ஏ." என்ற இயக்கம் ஸ்பெயினின் பாஸ்க் (Basque) பிராந்தியத்துக்கு தனி நாடு கோரிப் போராடி வருகிறது. சமீபத்தில் இந்த இயக்கம் செல்வாக்கு மிக்க இளம் அரசியல்வாதி ஒருவரைக் கொலை செய்ததன் மூலம் பாஸ்க் தனி நாட்டுப் பிரச்சினை மீண்டும் சர்வதேச கவனத்தை ஈர்த்துள்ளது.

ஈ. ரி. ஏ. யும் கடந்த ஆண்டு யுத்த நிறுத்தம் செய்யச் சம்மதித்தது. ஆனால் இந்த யுத்த நிறுத்தம் ஒரு வாரம் மட்டுமே நீடித்தது.

வட அயர்லாந்தில் ஐ. ஆர். ஏ. போர் நிறுத்தத்துக்கு இணங்கியது போல் ஸ்பெயினின் பாஸ்க் பிராந்தியத்திலும் போர் நிறுத்தத்துக்கு ஈ. ரி. ஏ. இணங்க வேண்டும் என்ற கோரிக்கை தற்பொழுது வலுத்து வருகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புற்றுநோய்க்கு புதிய மருந்து தடிமல் வைரஸ் உதவுகிறது!

புற்றுநோய்க்கு புதிய மருத்துவத் தீர்வு ஒன்றைக் கண்டு பிடிப்பதில் ஓரளவு வெற்றி கண்டிருக்கின்றார்கள். கலிபோர்னிய டாக்டர்கள்.

உடற் கலங்களில் உள்ள 'P53' என்ற பரம்பரை அலகே கட்டுமீறிய கலப் பெருக்கத்துக்கும் அதன் மூலம் புற்று நோய்க்கும் காரணமாகின்றது.

இந்த 'P53' என்ற ஜீனை அல்லது புரதத்தை செயலிழக்கச் செய்வதன் மூலம் புற்று நோய்உடலின் ஏனைய பாகங்களுக்கு பரவுவதைத் தடுக்க முடியும்.

இந்த 'P53'யைச் செயலிழக்கச் செய்வதற்கு—

தடிமலுக்குக் காரணமான Adeno என்ற வைரஸை புற்று நோய்க் கலங்கள் மீது செலுத்தி பயன்பெறலாமா என்று 16 புற்று நோயாளர்கள் மீது சோதனைசெய்யப் பட்டது.

சோதனை ஓரளவு வெற்றியும் அளித்திருக்கின்றது.

Adeno என்ற இந்த வைரஸில் பரம்பரை இயல் தொழில் நுட்பம் மூலம் அதன் ஒரு ஜீனை இழக்கச் செய்தால் அதன் வைரஸ் மனிதரின் புண்களில் மட்டுமே பெருகக்கூடிய தன்மையைப் பெறும்; வேறு சாதாரண உடல்கலங்களில் அவை உயிர் வாழமுடியாத நிலை ஏற்படுகின்றது.

இவ்வாறு பரம்பரை இயல் தொழில் நுட்பத்துக்கு உட்படுத்தப்பட்ட வைரஸை புற்று நோய்க் கலங்களில் செலுத்தும் போது அந்த வைரஸ் புற்று நோய்க் கலங்களில் உள்ள 'P53'யைச் செயலிழக்கச் செய்கின்றது.

இதனால் புற்று நோய் உடலின் ஏனைய பகுதிகளுக்குப் பரவுவது கட்டுப்படுத்தப்படுகின்றது. அத்துடன் ஏற்கனவே பாதிப்புற்ற உடற் கலங்களை அது வேகமாக ஆறவும் வைக்கின்றது.

''இந்த ஆராய்ச்சி முயற்சி குறித்து இப்போதைக்கு மகிழ்ச்சியும் சாதனைப் பெருமிதமும் கொள்ளமுடியாது. அதற்கு இன்னும் காலம் எடுக்கும்.''— என்கிறார் இம் முயற்சியில் ஈடுபட்டுள்ள டாக்டர் றொனால்ட்.

# மாதுளம்பழத்தில் வைரஸ் எதிர்ப்புச் சக்தி!

மாதுளம்பழத்திலிருந்து பிரித்து எடுத்த வைரஸ் எதிர்ப்பு நுண்சத்து, மற்றைய வைரஸ் எதிர்ப்பு நுண்சத்துக்களை விட எட்டு மடங்கு வீரியமுடையதாக உள்ளது.

— இவ்வாறு கூறுகின்றார் பேராசிரியர் ஸ்டீவன் மயிண்ட்.

மாதுளம் பழச்சாறு தொடர்பான ஆய்வை நோர்ட்டிங்ஹாம் பல்கலைக் கழகமும் பிரிட்டன் பல்கலைக்கழகமும் இணைந்து மேற்கொள்கின்றன. நுண்ணுயிர் மற்றும் நோய்த் தடுப்பாற்றல் துறையில் பேராசியரான ஸ்டீவன் மயிண்ட் இந்த ஆய்வின் தலைவராக இருக்கின்றார்.

''மாதுளம்பழத்திலிருந்து பெறப்படும் வைரஸ் எதிர்ப்பு நுண்சத்து ஒரு தடவையில் சுமார் ஒரு கோடி வைரஸ்களை சில நிமிடங்களில் அழிக்கின்றது.

''உடலுக்குக் கேடு செய்யக் கூடிய — எயிட்ஸ் நோய்க்குக் காரணமான கிருமி உட்பட — மற்ற வைரஸ்களையும் இது நிச்சயம் அழிக்கும்.

''இந்த நுண்சத்துப் பற்றிய பரிசோதனைகள் இப்போதுதான் பரிசோதனைக் குழாய்களில் மேற்கொள்ளப் பட்டிருக்கின்றன. மனித உடலில் இனிமேல் தான் ஆய்வு செய்ய வேண்டும்.

''இந்த வைரஸ் எதிர்ப்பு மருந்தை எயிட்ஸ் நோய் பரவாமல் தடுக்கவும் பயன்படுத்தும் ஆலோசனை உள்ளது. மக்கள் பயன்படுத்தும் ஆணுறை மற்றும் ஆஸ்பத்திரிகளில் நோயாளிகள் புழங்கும் பகுதிகளில் இதை "ஸ்பிரே" செய்யலாம் அதனால் எயிட்ஸ், வைரஸ் பரவுவதைக் குறைக்கலாம்'' — என்று கூறுகின்றார் ஸ்டீவன்.

# பக்டீரியா கிருமிகளாலும் இருதய நோய்கள் வரலாம்

இருதய நோய்க்கு காரணங்கள் எவை?

புகை பிடித்தல், அதிக இரத்த அழுத்தம், இரத்தத்தில் கொழுப்பு (கொலஸ்ட்ரோல்) அதிகரித்தல், நீரழிவு, உடல்பருமன், மன இறுக்கம் போன்றவையே இருதய நோய்களுக்குக் காரணம் என இதுவரை நம்பப்பட்டு வந்தது.

பரம்பரையாகவும் இருதய நோய் கடத்தப்படலாம் என்ற ஒரு நம்பிக்கையும் மருத்துவர்கள் மத்தியில் இருந்து வந்திருக்கின்றது.

ஆனால் இருதய நோயால் இறந்த பலரில் மேற் கொள்ளப்பட்ட ஆய்வுகள் இவற்றுக்கு அப்பாலும் இருதயநோய் ஏற்படுவதற்கு வேறு பல காரணங்கள் இருக்கலாம் என்ற சந்தேகத்தைப் பலமாக ஏற்படுத்தியிருக்கின்றன.

இந்த சந்தேகத்தின் அடிப்படையில் மேற் கொள்ளப்பட்ட ஆய்வுகள் —

நிமோனியா (சளிச்சுரம்) நோய்க்குக் காரணமானது என அண்மைக் காலத்தில் கண்டுபிடிக்கப்பட்ட ஒருபக்டீரியா கிருமியும் இரத்த நாடிகளைத் தாக்குவதன் மூலம் இருதய நோய்க்குக் காரணமாக அமைகின்றது என்ற புதிய தகவலை வெளிப்படுத்தியிருக்கின்றன.

முன்னர் குடற்புண் (அல்ஸர்) நோய்க்குஇரப்பை அமிலங்களும், மன அழுத்தமுமே காரணம் என்று கூறப்பட்டு வந்தது.ஆனால் 'ஹெரிக்கோ பக்டர்' என்ற குடல்தொற்று பக்டீரியாவும் குடற்புண் ஏற்படக் காரணம் என்பது தற்போது கண்டுபிடிக்கப் பட்டிருக்கின்றது.

அதேபோன்று பாலியல் தொடர்புகள் மூலம் பரவும் ஒருவகை நோய்க்கிருமியின் இனத்தைச் சேர்ந்த —'சில மோடியா நிமோனியா' என்ற பக்டீரியா இருதய நோயை ஏற்படுத்துகின்றது என்ற பலத்த சந்தேகம் மருத்துவ ஆய்வாளர்களுக்கு ஏற்பட்டிருக்கின்றது.

இதற்காக இந்த வகை பக்டீரியாக்களை எலிகளில் செலுத்தி அவற்றுக்கு இருதய நோய் வருகின்றதா என ஆராயும் புது முயற்சியை மருத்துவ ஆய்வாளர்கள் ஆரம்பித்துள்ளனர்.

இத்தகைய பக்டீரியாவைக் கட்டுப்படுத்துவதற்கான மருந்து ('அன்ரிபயட்டிக்') தயாரிப்பது குறித்தும் முயற்சிக்கப்படுகின்றது.

★

## மருத்துவ உலகில் புதிய கண்டு பிடிப்புகள்

### வைத்திய சஞ்சீவி

தயாரிப்பு: ராம்

# அதிக விற்றமின் A அதிக ஆபத்துத் தரும்

கர்ப்பிணிப் பெண்கள் அளவுக்கு அதிகமாக விற்றமின் — A யை உட்கொள்வது வயிற்றிலிருக்கும் சிசுவைப் பாதிக்கும் என டாக்டர்கள் பலகாலமாக நம்பி வருகின்றார்கள்.

அமெரிக்காவில் அண்மையில் மருத்துவர்கள் மேற்



கொண்ட ஆய்வுகள் இந்த நம்பிக்கையை உறுதிப் படுத்தியிருக்கின்றன.

சுமார் 22 ஆயிரம் கர்ப்பிணிப் பெண்களில் இந்த ஆய்வுகள் மேற்கொள்ளப் பட்டன.

நாளாந்தம் ஐயாயிரம் அல்லது அதற்குக் குறைந்த சர்வதேச அலகு அளவு விற்றமின் — A யை உட்கொண்ட கர்ப்பிணிகளுடன் ஒப்பிடும் போது, நாளாந்தம் பத்தாயிரத்துக்கும் அதிக சர்வதேச அலகு அளவு விற்றமின்களை உட்கொண்ட கர்ப்பிணிகள் ஐந்து தடவைகள் கூடிய அளவு பிரச்சினைகளை எதிர்நோக்க வேண்டி ஏற்பட்டிருக்கின்றது.

அதிக விற்றமின் A உட்கொண்ட கர்ப்பிணிப் பெண்கள் முகம், இருதயம், நரம்புத்தொகுதி ஆகியவை பாதிக்கப்பட்ட குழந்தைகளைப் பெற்றிருக்கின்றனர்.

இத்தகைய குறைபாடு வழக்கமாக இருநூறு குழந்தைகளுக்கு ஒன்று என்ற வீதத்தில் ஏற்படுவதுண்டு. ஆனால் அதிக விற்றமின் A உட்கொண்ட கர்ப்பிணிகள் மத்தியில் மேற்கொள்ளப் பட்ட ஆய்வுகளில் 60 குழந்தைகளில் ஒன்றுக்கு இத்தகைய பாதிப்பு ஏற்பட்டது.

சாதாரணமாக ஒருவர் உட்கொள்ளக்கூடிய அளவு மாட்டு ஈரல் கறியில் முப்பதாயிரம் அலகு விற்றமின் —A இருக்கும். பாலுணவுகள் மற்றும் கோழி முட்டை, கோழி இறைச்சி, மீன்கள் மற்றும் இறைச்சி, ஆகிய உணவுவகைகளும் விற்றமின்—A கொண்டுள்ளன.

# செயற்கையாக மனித இரத்தத்தை தயாரிக்கும் முயற்சி வெற்றியில்?

மருத்துவத்துறையில் மனிதனால் சாதிக்க முடியாதது செயற்கையாக மனித ரத்தத்தைத் தயாரிப்பதுதான் என்று கூறுவார்கள்.

ஆனால் அந்த முயற்சியிலும் மனிதன் விரைவில் முழு வெற்றியடைவான் என்பதற்குக் கட்டியம் கூறுவது போல் மருத்துவ சாதனைகள் அமைந்து வருகின்றன.

பசுக்களின் இரத்தத்தில் உள்ள ஹிமோகுளோபினோடுPolyethylene Glycol (PEG) என்ற இரசாயனப் பொருளைச் சேர்த்தால் மனித ரத்தத்துக்கு மாற்றான ரத்தம் தயார் என்கிறார்கள் ஜேர்மனியிலுள்ள மருத்துவ ஆராய்ச்சியாளர்கள்.

இதில் இன்னொரு சிறப்பும் உண்டு. நமது இரத்தத்தை விட பல நாள்கள் வரை இந்த இரத்தத்தைக் கெடாமல் பாதுகாத்து வைக்க முடியும் என்பது தான் அது.

ஆனால் ஒரு சின்னவிஷயம். இது குறித்து ஆராய்ச்சிகள் இப்போது தொடர்ந்து கொண்டிருப்பதால் மனித இரத்தம் தயாரிக்கும் முயற்சி முழு வெற்றியளிப்பதற்கு இன்னும் ஐந்து ஆண்டுகளாவது பிடிக்கும் எனக் கருதப் படுகின்றது.

# முகத்தைக் கறுப்பாக்கும் சில முகப் பவுடர்கள்

அடிக்கடி முகப்பவுடர் பூசிக்கொள்வோரின் முகம் கறுத்துக் காணப்படும். சில ரெல்கம் பவுடர்களில் கலக்கப்படும் மக்னீசியம் சிலிக்கேற் என்ற இரசாயனப் பொருளே இதற்குக் காரணம் என்று மருத்துவர்கள் கூறுகின்றனர்,

சிலர் மணிக்கு ஒரு தடவை முகப் பவுடரைப் பூசிக் கொள்வர். இவ்வாறு செய்வோருக்குப் பல சரும நோய்கள் ஏற்படவும் வாய்ப்புண்டு.

ரெல்கம் பவுடரில் உள்ள மக்னீசியம் சிலிக்கேற் தான் பலவிதமான சரும நோய்களை உண்டாக்கி விடுகிறது என பம்பாயில் உள்ள இந்திய விஞ்ஞான ஆராய்ச்சிக் குழுவினர் தெரிவித்துள்ளனர்.

★

# புகையால் வரும் நலம்

'புகை பிடிப்பது உடல் நலத்துக்குக் கேடு' என்பது அனைவருக்கும் தெரிந்தது.

ஆனால் புகையிலையில் இருக்கும் நிக்கொட்டின் நஞ்சு, சில வயிற்று நோய்களைக் குணப்படுத்துகின்றது என்று டாக்டர்கள் கூறுகின்றனர்.

நல்லதும் செய்யுமா நிக்கொட்டின்?

# அறுவைக்கத்தியைவிட கூரான பேனா முனை!

'வாள் முனையை விட பேனா முனை கூரானது' — என்று சொல்வார்கள். அது பழைய மொழி.

'சத்திர சிகிச்சைக் கத்தியை விட பேனா முனை கூரானது' — என்று கூறுவதுதான் மருத்துவ உலகின் 'புதுமொழி' போலும்.

உங்கள் உணர்வுகளை, உணர்ச்சிகளை, எண்ணங்களை பேனா மூலம் காகிதத்திலோ, அல்லது 'கீ — போர்ட்'மூலம் கம்பியூட்டர் திரைகளிலோ வடித்து — பதித்து — விடுவீர்களானால் உச்ச குருதி அமுக்கத்தைக் தணிப்பதற்கும் நோய் எதிர்ப்புச் சக்தியை உடலில் அதிகரிப்பதற்கும் அது போன்ற வேறு நல்ல மருந்து இல்லவே இல்லை.

டல்லாஸ் தெற்கு மெதடிஸ் பல்கலைக்கழக உள மருத்துவ பேராசிரியரும், பிரபல உளமருத்துவ சஞ்சிகை எழுத்தாளருமான ஜேம்ஸ் பென்னிபேக்கர் இவ்வாறு கூறுகின்றார்.

தமது உணர்வுகளை வெளிப்படுத்த முடியாமல் திணறும் — குறிப்பாக ஆண்களுக்கு— பேனை — காகிதம் அல்லது கம்பியூட்டர் நல்ல தோழனாக இருந்து, வடிகாலாக அமையக் கூடியது என்கின்றார் அவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இளங்கோவும் சேக்ஷ்பியரும் பாத்திரப் படைப்பில் கையாண்ட இரு வேறு பட்ட உத்தி முறைகள்

**...மரணம் அடையும் போது சுருங் கப்பேசி நிறைய விளங்க வைக்கும் பாத்திரமாகச் சீஸரைப் படைத்து வெற்றி பெற்றார் சேக்ஷ்பியர். ஆனால் இளங்கோ அடிகளோ மரணம் அடையும் நிலையில் இருந்த கோவலனை மௌனம் பேண வைத்தே வெற்றி பெற்றார்...**

உலக நாடகங்களுள் தனித்துவம் மிக்கவையாகவும் ஆங்கில நாடக இலக்கியத்துக்குப் பெருமை சேர்ப்பவையாகவும் இருப்பவை சேக்ஷ்பியரின் நாடகங்கள்.

அவரது ''யூலியஸ் சீஸர்'' என்ற நாடகத்தில் ஒரு காட்சி.

சீஸரைக் கொல்வதற்குச் சதித் திட்டம் தீட்டப் பெற்று அதை நிறைவேற்றும் சமயம் வருகிறது. அப்போது காஸியஸும் ஏனைய சதிக் குழுவினரும் சீஸரைச் சூழ்ந்து கத்தியாற் குத்துவர். கடைசியாக சீஸரின் நண்பரும் கல்விமானுமாகிய புரூட்டஸும் குத்துவார். அந்த நேரத்தில் சீஸர் ''நீயுமா புரூட்டஸ்?'' (Et Tu Brute?) என்று கேட்பார். ''நீயுமா புரூட்டஸ்?'' என்ற தொடரின் சுருக்கத்தையும், அது கொண்டிருக்கும் பொருள் ஆழத்தையும், அதில் நிரம்பி வழியும் நயத்தையும் ஆங்கிலம் வல்லோர் அழகாக எடுத்துக் கூறுவர்.

நீயுமா என்பதற்குப் ''பெருங் கல்வி மானாகிய நீயுமா?, எனது மதிப்புக்குரிய நண்பனாகிய நீயுமா?, செய்வது எது தவிர்வது எது என்று தெரிந்து கொண்ட நீயுமா?, தேசமக்களின் விசுவாசத்துக்கு உரிய நீயுமா?— இப்படி வஞ்சித்துக் கொல்லும் செயலைச் செய்தாய்!'' என்று பலவாறு விளக்கம் கூறி நயம் சொல்வர். ''நீயுமா புரூட்டஸ்?'' என்ற தொடர் நயமும், சுருக்கமும் வாய்ந்தது என அனைவரும் ஒப்புக் கொள்வர்.

ஐம்பெரும் காப்பியங்களுள் ஒன்றான சிலப்பதிகாரம் நாடகப் பண்புகளைத் தன்பாற் கொண்டுள்ளது. இலக்கியச் சுவையில் பாரதியார் கூறுவது போல நெஞ்சை அள்ளும் நயம்மிக்கது.

சேக்ஷ்பியரின் பாத்திரமாகிய சீஸர் தமக்கு மரணம் ஏற்படும் போது சுருங்கப் பேசி நயம் விளைக்கிறார். இளங்கோ அடிகளின் பாத்திரமாகிய கோவலன் தனக்கு மரணம் ஏற்பட இருப்பதை அறிந்தும் ஒரு சொற்கூடப் பேசாது இருக்கிறான். பேசாது இருப்பதும் இலக்கிய நயமாக அமைகிறது. இதோ அந்தக் காட்சி;-

கோவலன் செல்வச் சிறப்பு மிக்க வணிக குடியிற் பிறந்தவன். கல்வியிலும் கலைகளிலும் சிறந்தவன். செல்வச் செழிப்பு மிக்க வணிக குலத்திற் பிறந்த கற்பின் செல்வியாகிய கண்ணகியை மணம் புரிந்தவன். சில ஆண்டுகள் கண்ணகியுடன் வாழ்ந்து பின்பு மாதவியைச் சந்திக்கிறான். குடும்பத்தையே மறந்து மாதவியுடன் வாழ்கிறான். இன்புற்று வாழ்ந்த கோவலனையும், மாதவியையும் ஊழ்வினை உருத்து வந்து கானல்வரி ஊடாகப் பிரித்துவிடுகிறது.

கண்ணகியிடம் திரும்பிய கோவலன் —

''சலம்புணர் கொள்கைச்
சலதியோடாடிக் குலந்
தருவான் பொருட்
குன்றந் தொலைந்த
இலம்பாடு
நாணுத்தரும்''—என்கிறான்

''வஞ்சம் பொருந்திய கொள்கையுடைய பொய்த்தியோடுங் கூடி யொழுகினமையால் நம் குலந்தேடித் தந்த மலை போலும் பெரிய பொருட் செல்வம் எல்லாம் கெட்டதனால் ஆய வறுமை நாணுத்தரும்'' என்று கோவலன் கூறக் கேட்ட கண்ணகி ''ஒரு சோடி சிலம்பு உண்டு. கொள்ளுங்கள்'' என்கிறாள்.

கோவலன் கண்ணகியையும் கூட்டிக்கொண்டு மதுரைக்குச் செல்கிறான். இடைக் குலப் பெண்ணாகிய மாதரியிடம் கண்ணகியை ஒப்படைத்து விட்டுச் சிலம்புடன் செல்கிறான்.

மதுரை நகர வீதியில் நூற்றுவர் பின்வர வந்த பொற்கொல்லனைக் காணுகிறான். பொற்கொல்லனிடம் ''காவலன் தேவிக்கு ஆவதோர் சிலம்புக்கு நீ விலை மதிப்பிடுவாயோ!'' எனக் கேட்டுச் சிலம்பை அவனுக்குக் காட்டுகிறான். பொற்கொல்லன் தான் முன்பு கவர்ந்த தேவியின் சிலம்போடு கோவலன் கொண்டு சென்ற சிலம்பு ஒத்திருப்பதைக் கண்டு கோவலனைத் தன் குடிலில் தங்கச் செய்துவிட்டு பாண்டியனிடம் சென்று தேவியின் சிலம்பு திருடியவன் தன் குடிலில் உள்ளான் என்று கூறினான். வினை விளை காலம் ஆதலின் பாண்டியன்நிதானமாக ஆராயாது தேவியின் சிலம்பு அவன் கையில் இருந்தால் அவனைக் கொன்று சிலம்பைக் கொண்டு வருக என்று காவலர்க்குக் கட்டளையிட்டான்.

இனிவரும் பகுதியில் இளங்கோ அடிகள் கோவலனை ஒரு வார்த்தை கூடப் பேசவைக்காமலேயே உயர் [illegible] தருக்கமாகப் பேச வைத்து இலக்கிய நயம்உண்டு பண்ணினார் சேக்ஷ்பியர். கோவலனைப் பேசவைக்காமலே இலக்கிய நயம் படைக்கிறார் இளங்கோ அடிகள்.

கல்வி கேள்விகளில் வல்லவனும் நுண்மாண் நுழைபுலச் செல்வனுமாகிய கோவலன் குறிப்பறியும் ஆற்றல் அற்றவனா? பொற் கொல்லன் ஊர்காவலருடன் வரும் போதே ஏதோ சூழ்ச்சி நிகழ்ந்து விட்டது என்பதைக் கோவலன் உணர்ந்தான். உணர்ந்து அவன் அதிர்ச்சி அடைந்த வேளையில் பொற்கொல்லன் ''வலம்படுதானை மன்னவன் ஏவச் சிலம்பு காணிய வந்தோர் இவர்'' என்று ஊர்காவலரைக் காட்டுகிறான். ஊர்காவலர் சிலம்பை மதிப்பிடுவாரா? அதுவா அவரது தொழில்? என்பதைப் புரிந்து கொண்ட கோவலனுக்குத் தான் இருந்த நிலையையும் இப்போது இருக்கும் நிலையையும் எண்ணும் போது வாழ்வில் வெறுப்பு ஏற்படுகிறது. அந்த நேரத்தில் பொற்கொல்லனுடன் வந்த காவல்காரன் ''இலக்கண முறைமையின் இருந்தோன் ஈங்கிவன் கொலைப்படு மகனலன்'' என்கிறான். கோவலனின் தோற்றத்தையும் இருக்கின்ற நிலையையும் பார்க்கும் போது கொலைத் தண்டனைக்குரிய கள்வனாகத் தெரியவில்லை என்கிறான். தன்னைக் கள்வனென்று பொற் கொல்லன் சூழ்ச்சிக்குட்படுத்தியதை உணர்ந்தபோது கோவலனுக்குத் தன்னிலேயே வெறுப்புண்டாயிற்று.

'அரசருக்கு நிகரான செல்வம் படைத்த குடும்பத்திற் பிறந்து அச்செல்வத்தையெல்லாம் தொலைத்துவிட்டு ஒரு பொற்கொல்லனாற் கள்வன் என்று குற்றம் சாட்டப் படும் அளவுக்குத் தாழ்ந்து விட்டேனே! என்குலப் பெருமையையும், மானத்தையும் சிறுமையுறச் செய்து விட்டேனே! இனியும் நான் வாழத்தான் வேண்டுமா? நான் குற்றமற்றவனாயினும் வாதாடி வாழ்வதிலும் பார்க்க இறப்பது மேல்' — என்று நினைத்தான். இதனால் இந்த இடத்தில் கோவலன் வாய்திறக்கவில்லை.

பொற்கொல்லனோ விடுவதாக இல்லை. களவு நூலில் உள்ள ஏதுக்கள் பலகாட்டிக் கள்வரின் அதிசய ஆற்றல்களை விளக்கி நீண்ட தொரு பிரசங்கமே செய்கிறான். இத்தனைக்கும் கோவலன் வாய் திறக்கவில்லை. இந்த இடத்தை விமர்சகர்கள் சிலர் சுட்டிக்காட்டி இளங்கோ அடிகள் கோவலனை ஒரு வார்த்தை கூடப் பேசாது இருக்கும்படி செய்தது சரியா? என்று கேட்பர்.

கோவலனின் மென்மை, கருணை, தன்மானம் ஆகிய குணச்சிறப்புகளை காப்பிய ஆரம்பத்தில் இருந்தே சித்திரித்துவரும் இளங்கோ அடிகள் பொய்யாகக் கள்வன் எனக் குற்றஞ்சாட்டப்பட்ட போது தான் குற்றமற்றவன் என்று நிரூபித்துப் பின்உயிர் வாழ்தலைவிடச் செத்தொழிதலே மேலானது எனக் கோவலன்கருதிமரணத்தைவரவேற்றுப் பேசாதிருந்தான் எனக் காட்டி வெற்றி பெற்றார். ★

-புலவர் ம. பார்வதிநாத சிவம்-

## ஜெய்பூர் காலமெல்லாம் வாழி!

காலை இழந்தவன் கண்பார்வையில்
நாளை என்பதே முழுஇருட்டு
சோலை என்பது துன்பத்தின் சுமை
வாழ்வு நெருப்பின் அனல்
வீடு குடியிருக்கும் சிறை
வீதி பாலைவன ஊற்று
கோல நிகழ்வுகள் யுத்த முனை
கோலங்கள் உடற் கீறல்கள்
உண்மை யாவும் இவை
ஜெய்பூர் கால் தந்திட முன்னர்

✶ ✶ ✶

வீட்டினில் முடங்கி வெறும்
ஓட்டையே பார்த்த கண்கள்
உலகெலாம் சுற்றி வரும்
வார்த்தை வேட்டினில் பதைத்த உள்ளம்
காலைப் பெற்றே உதைத்தாடும்
காலை இழந்த கவலை
கரைந்தே களிப்புப் பொங்கி வரும்
ஓட்டமும் நடையும் நம்முரிமை
ஜெய்பூர் தந்திடும் எம் காலை
நாட்டினில் நாமும் முழுமை
நாளைய விடிவில் நம் தலைமை

★ ★ ★

அகவைபத்து கண்டவுன்
சேவை பெற்றே தரணி வாழும்
பகலிரவாய் அழுத உள்ளம் - நின்
பணிபெற்றே உயிர் வாழும்
சோக முச்சு சுடராகும்
சுதந்திரக் காற்றுக் குடிபுகும்
வாடிய மலர்கள் வளம் பெறும்
வண்ண வண்டுகள் வலம் வரும்
காலம் உணர்ந்தே கடமை தரும்
ஜெய்பூர் (ஆல்) காலமெல்லாம் வாழி!

- என். விஜயசுந்தரம் -

(யாழ். ஜெய்பூர் நிறுவனத்தின் 10 வது ஆண்டு நிறைவு தினம் இன்றாகும்.)

## கண்டதும் கேட்டதும்

பாம்புக் கடியினால் பாதிக்கப்பட்ட இளம் பெண் ஒருவர் யாழ்.போதனா வைத்தியசாலையில் சேர்க்கப் பட்டு சுகம் பெற்றுள்ளார். ஆனால் இவர் முதலில் நாடிய நாட்டுவைத்திய முறையால் இவருக்கு ஏற் பட்ட பாதிப்புக்களில் இருந்து இவரால் இன்னும் முற்றாக மீளமுடியவில்லை.

தலையில் ஏற்பட்ட தீக்காயம், வலதுகை வளங்க முடியாத நிலை, வாய்பேசமுடியாத நிலை ஆகிய வற்றுக்காக இவர் வைத்தியசாலையில் பல வாரங்கள் சிகிச்சை பெற வேண்டிய நிலைமை தற்போது ஏற் பட்டுள்ளது.

பொழுதுபட்ட நேரம். வீட்டின் பின்புறத்தில் நின்றபோது இந்த இளம் பெணணை பாம்பு கடித்து விட்டது.வீட்டுக்காரர் உடனடியாக சமீபத்தில் உள்ள விஷகடி வைத்தியர் ஒருவரிடம் அப் பெண்ணைக் கொண்டு சென்றார்.

பாம்புக் கடியினால் ஏற்பட்ட விஷத்தை இறக்க அந்த நாட்டு வைத்தியர் என்ன செய்தார் தெரியுமா?

முதலில் அப் பெண்ணை பார்வை பார்த்து விஷத்தைஇறக்க முயன்றார். விஷம் இறங்கினபாடில்லை. தமது சிகிச்சைமுறையில், விஷத்தை இறக்குவதற்கான கடைசி வைத்தியத்தை அவர் பிரயோகிக்க முடிவு செய்தார்.

புதிய சட்டி ஒன்றை வாங்கினார். அந்தச் சட்டியில் நெருப்பை எரித்து அப் பெண்ணின் உச்சம் தலையில் வைத்தார். விஷத்தை எரித்து விடுவதே அந்த சிகிச்சை முறை என்று தெரிவிக்கப்பட்டது.

நீண்டநேரம் இந்தச் சிகிச்சை இடம் பெற்றது. ஆனால் அதன் பின்பும் விஷம் இறங்கியதாகத் தெரியவில்லை. உச்சம் தலையில் பெரும் தீக்காயமே ஏற்பட்டது.

யாழ். போதனாவைத்தியசாலையில் தற்போது சிகிச்சை பெற்று வரும் இப் பெண்ணின் உச்சம் தலையில் 6 அங்குலம் நீளமும் 2 அங்குலம் அகலமும் கொண்ட தீக்காயம் உள்ளது.

இவரது வலதுகை இயங்க முடியாது இருப்பதற்கும் இவர் வாய்பேச முடியாது இருப்பதற்கும் இவரது உச்சம் தலையில் ஏற்பட்ட தீக்காயமே காரணமாக இருக்கலாம் என்று அஞ்சப்படுகிறது.

உரிய முறையில் மேற்கொள்ளப்படாத நாட்டு வைத்திய முறையால் நோயாளர் உயிரிழப்பையும் சந்திக்கக் கூடிய ஆபத்து ஏற்படுவதாக வைத்திய சாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

-ஜாம்பவான் -

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## சஞ்சீவி சிறுகதை

# தீர்வு

பலாலியின் யாழ். சேவை வானொலியில் இரவுச் செய்திகள் முடிந்த கையோடு பட்டென்று ரேடியோவை மூடிவிட்டாள் நளாயினி.

நாளை கப்பலில் பயணம் செய்ய இருப்பவர்களின் பட்டியல் இலக்கம் சொல்வார்கள்......

சுவர்க்கடிகாரத்தில் நேரத்தைப் பார்த்தாள். எட்டு நாற்பது. வானொலி நேரமோ... ..ஒன்பது பத்து. எப்போதுதான் இந்த நேரக் குழப்பத்துக்கான தீர்வு வருமோ? முன்பு ஒரு மணி நேரமாக இருந்தது. இப்போது அரை மணிதான். இதெல்லாம் பெரிய பிரச்சினை இல்லைத்தான் — சூரியனே உதிக்காமல் விட்டால்தான் பிரச்சினை.

அடுத்த அறையில் ஹர்ஷினியும், வர்ஷினியும் வரப்போகும் ஓ. லெவல் சோதனைக்காகப் படித்துக்கொண்டிருக்கிறார்கள். அவர்கள் படிக்கும் நேரம் ஒரு குண்டூசி விழும் சத்தம் கூடக் கேட்கக் கூடாதாம். ரேடியோவைக் கூட காதுக்குள் வைத்துத்தான் செய்தி கேட்க வேண்டும்.

இனிக் கடிகார நேரம் ஒன்பது பதினைந்துக்கு பி. பி. சி. செய்தி கேட்க வேண்டும். எல்லாச் செய்திகளையும் கேட்டபின்...... அவற்றை மனதுக்குள் எடைபோட்டு... அலசி ஆராய்ந்து......எப்படியும் நித்திரையாகப் பன்னிரண்டு மணியாகிப் போகும்.

இரவின் நிசப்தம் நாய்களின் குரைப்பொலியில் குலைந்து போய்க்கொண்டிருந்தது. ஹர்ஷாவும் வர்ஷாவும் பேய்விழி விழித்துக்கொண்டு இவள் பக்கம் ஒருவராக வந்து நின்று விட்டனர்.

இரவில் வழக்கமாகத் துணைக்கு வந்து படுக்கும் சீனித்தாத்தா கூட இப்போது வருவதில்லை. பெயர்ப் பட்டியலை வெளிச்சுவரில் தொங்க விட்டதால் வந்த கோளாறு. தன் பெயர் பட்டியலில் இல்லாமல் தான் எப்படி அங்கு தங்க முடியும்......என்றொரு தலையாய பிரச்சினை அவருக்கு. இந்த வயதிலும் அந்த அடையாள அட்டை......இந்த அடையாள அட்டை என்று சேர்ட் பொக்கற்றில் அடுக்கிக் கொண்டுதான் தெருவில் இறங்குகிறார்!

நேற்றிரவும் பிள்ளையார் கோயிலடிப்பக்க வீட்டிலிருந்து கத்திக் குழறிச் சத்தம் கேட்டது. விடிந்தும் யாரும் அதுபற்றிப் பேசவில்லை. திருடரின் கைவரிசையாகத்தான் இருக்கும். இப்போதும் நாய் குரைப்பது...

பயத்தில் நடுங்கும் பிள்ளைகளை என்ன சொல்லித் தேற்றுவது?

பேசாமல் இடம் பெயர்ந்த கையோடு எங்காவது போய்ச் சேர்ந்திருக்கலாம். அந்நேரம் கொழும்பில் வந்திருக்கும்படி ஒமானிலிருந்து அவரின் கடிதம் வந்ததுதான். அப்போது பாஸ் கிடைக்கவில்லை. கிடைத்தாலும்...... கொழும்பில் யார் துணையுமில்லாமல்......இந்த இலந்தைப் பழத்துப் புழுப்போலிருக்கும் இரண்டையும் எப்படிக் காப்பாற்றுவதாம்? அவருக்கு அவரது ஒமான் உத்தியோகம்தான் முக்கியம். பிள்ளைகள் பிறந்த கையோடு போனவர் ...... போனவர்தான்!

ஒரு பெண் குழந்தையென்றாலே முகம் சுளிக்கும் காலத்தில், முதல் பேற்றிலேயே இரணைப் பெண் குழந்தைகளாகப் பெற்று விட்டு, ஒரு குற்றவாளியைப்போல நளாயினி தன் கணவனைப் பரிதாபமாகப் பார்த்த போது.....அவன் நல்லவன். பெண் குழந்தைகள் பிறப்பதற்குத் தான்தான் காரணம் என்பது அவனது பார்மஸிப் படிப்புக்குப் புலப்படவே, அவளுக்கு ஆறுதல் சொன்னான்.

பொறுப்புணர்வுடன் தன் வேலையினை ஒமானுக்கு மாற்றிக் கொண்டவன் உழைக்கத் தொடங்கி விட்டான். இப்போதும் உழைத்துக் கொண்டிருக்கும் யந்திரமாகவே மாறி விட்டான்.

வெளியே நாய்க்குரைப்பு அடங்கிப் போயிருந்தது. பிள்ளைகளை ஒருவாறு சமாதானப்படுத்தி சாப்பிட வைத்து ...... அவர்கள் தத்தமது பாய்களை விரித்துப் படுத்து விட்டார்கள். ஆளுக்கொரு கட்டிலும், மெத்தையுமாகப் படுத்துறங்கியவர்கள் ...... இப்போது பனையோலைப் பாயில் ......

சித்திரை மாதம் வடமராட்சியிலிருந்து வீடு திரும்பியபோது, வீடெல்லாம் "ஓ" வென்று திறந்து கிடந்தது. வீட்டிற்குள் குப்பை கூழம் தவிர வேறு பொருள்களோ, தளபாடங்களோ...... ஒன்றுமேயில்லை. எல்லாம் துடைத்து வழித்துப் போய் விட்டிருந்தது. வீடாவது இருந்ததே என்று மகிழ்வதைத் தவிர வேறு வழியிருக்கவில்லை. இன்னும் சிலநாள் தாமதித்திருந்தால் ஓடு, யன்னல், கதவு என்று ஒன்றுமே இருந்திருக்காது.

கணவனின் உழைப்பில் கணிசமான ஒருபகுதி காணாமல் போய்விட்டதை அவனுக்கு கடிதத்தில் எழுதினாள். "போனது போகட்டும்; இனி இப்போதைக்கு எதையும் வாங்க வேண்டாம்; பிள்ளைகளின் படிப்பில் மட்டும் கவனம் செலுத்தவும்." என்று அவனும் பதில் போட்டு விட்டான்.

வங்கியில் இருப்பது வட்டியும், குட்டியுமாகப் பெருகியுள்ளதுதான். ஆனால் இவர்களைக் கரைசேர்க்கும் காலத்தில் அவை எந்த வகையில் உதவும் என்று தெரியவில்லை. இப்போது சாதாரண கிளார்க் உத்தியோகத்துக்கே ரொக்கம் மட்டும் பத்து இலட்சங்களாம்! தான் கேட்ட சீதனம் தரவில்லை என்பதற்காக எழுத்து மேசையில் வைத்துக் குழப்பி மாப்பிள்ளைப் பையனை இழுத்துக்கொண்டு போய் விட்டாராம் ஒரு தகப்பனார்.

காசு சேரச்சேர அதற்குப் பெறுமதியும் குறைந்து கொண்டு போகிறது.

"இனிப்போதும் வாருங்கள்" என்று எழுதினால், "பிரச்சினை தீர்ந்த பின்னால்தான் உவ்விடம் வருவேன்" என்று பதில் வருகிறது. அது எப்போது தீரும்? கடைசியாக தொண்ணூற்றுநாலில் ஒருதடவை வந்துபோனதோடு சரி. முழுதாக மூன்று வருடங்கள் கண்ணால் காணவில்லை. ஆண். பெண் என்னும் உணர்வுகள் கூட அர்த்தமற்றுப் போய்க் கொண்டிருக்கின்றன...... குடும்ப வாழ்வு என்ற அமைப்புக் கூட கலைந்து போய்க் கொண்டிருக்கின்றது ... பிரச்சினைகள் எல்லாம் விஸ்வரூப தரிசனம் காட்டுகின்றன.

பத்துப்பன்னிரெண்டென்று பெற்றுப்போட்டு விட்டு அசையாமல் குடித்தனம் செய்த காலம் போய், ஒன்றும் பாதியுமாய் பெற்றுக் கொண்டு ஓடி ஓடித் திரவியம் தேடி ஓ ... இது என்ன வாழ்வு?

பி.பி.சி செய்திகளும் முடிந்து விட்டன. இதுவரையும் கவனத்திற்கில்லாத ஓசையொன்று, இப்போது "என்னைக்கவனி" என்பது போல இவள் காதுகளை ஊடறுத்து உள்நுழைகின்றது.

பக்கத்து வீட்டில் வீடியோப்படம் பார்க்கின்றார்கள்.

இனி ஜெனரேற்றரின் சத்தம் விடிய விடியக் கேட்டுக் கொண்டிருக்கும். ஊர் உலகம் எக்கேடு கெட்டாலும் பவளம் அக்காவுக்கு கவலையே இல்லை. வீட்டில் நாலுபேரைச் சேர்த்து வைத்துக் கொண்டு படம் பார்த்தாலே போதும். சிவராத்திரிக்கும் சினிமாப்படம் தானாம். இரவும், பகலும் போடப் போகிறாவாம்; சொந்த இடம் விட்டுப் போயிருந்த நேரம் கூட தென்மராட்சியில் வைத்துப் பார்த்த படங்களின் கதைகளை எல்லாம் யாரும் கேட்காமலே சொல்லும் ஆள்.

நேற்றுத்தான் வன்னியிலிருந்து பெரியம்மாவின் கடிதம் வந்திருந்தது. முதலில் கிளிநொச்சியில்தான் தாங்கள் எல்லோரும் போயிருந்தவர்களாம். அங்கு கட்டிய வீடு காயும் முன்பே "சத்ஜெய" இராணுவ நடவடிக்கை தொடங்கி விட்டதாம். அப்போது ஒமந்தையில் போய் இருந்தார்களாம். இப்போது "ஜெயசிக்குறு" தொடங்கிவிடவே மல்லாவியில் போய் இருக்கிறார்களாம். பெரியப்பா, சித்தப்பா, மாமா எல்லோருமே குடும்பம் குடும்பமாய் வன்னிக்கு இடம் மாறிய போது... தானும் அவர்களுடன் போயிருக்கலாம் என்று தோன்றியது. நன்மையோ, தீமையோ உறவினர்களுடன் சேர்ந்திருந்தால் இந்த மன உளைச்சலாவது இல்லாமல் இருந்திருக்கலாம்.

பெரிய மாமாவின் பேரன் தமிழன்பன் மலேரியாக் காய்ச்சல் வந்து செத்துப் போய் விட்டானாம். எட்டுத்தடவை காய்ச்சல் வந்ததாம். பன்னிரண்டு வயதுப் பிள்ளை அவன்...

நளாயினி அழுதாள். தன்னைப் பிரிந்து துயருறுபவருக்காய் அழுதாள்... பாதிக்கப்பட்டுப் பரிதவிக்கும் தமிழினத்துக்காய் அழுதாள். தனக்காகவும் தான் அழுதாள். அழுவதால் ஆகப்போவது ஒன்றுமில்லை என்ற மனத்தெளிவு வரும்வரை அழுது தீர்த்தாள்.

ஏதோ நினைத்துக் கொண்டவளாய் ஓடிக் கொண்டிருந்த சுவர்க்கடிகாரத்தை எடுத்து, அதில் அரை மணி நேரத்தை முன் தள்ளி வைத்தாள். இப்போதுதான் அது உண்மையான இலங்கை நேரம் காட்டியது. எல்லாப் பிரச்சினைகளுக்கும் 'தீர்வு' கண்டு விட்ட திருப்தியோடு தனது ஓலைப்பாயையும் எடுத்து விரித்தாள் நளாயினி.

★

**-சந்திரா தனபாலசிங்கம்-**

---

# பிரிவெனும் பெருந்துயர்

பகுதி II — உளவியல் பார்வையில்

சிறுவர் உளவியலாளர்கள், ஆறு மாதத்திற்கும் மூன்று வருடத்திற்கும் இடைப்பட்ட குழந்தைகளில் ஏற்படுகின்ற பிரிவுத் தாக்கத்தினை அவதானித்து படிமுறைப் படுத்தியுள்ளார்கள். இக்குழந்தைகள் தமது தாயிடமிருந்து பிரிந்து விடுகின்றபோது,முதற்கட்டமாக தீவிர எதிர்ப்புணர்வைக் காட்டி நிற்பர். இதன் பொழுது தொடர் அழுகை; பெற்றோரைத் தேடுதல் போன்ற வெளிப்பாடுகளுடன் வேறு நபர்களால் சாந்தப்படுத்த முடியாதவர் களாகவும் இருப்பர். இதனைத் தொடர்ந்து வருகின்ற இரண்டாவது கட்டத்தில், தாயைத் தேடுதல் முடிவுற்று, குழந்தையானது ஒதுங்கி, உற்சாகம் குன்றி, ஆர்வமிழந்து, அழுதபடி இருக்கும். இறுதிக் கட்டத்தில் தொடர்பறுதல் நிகழும். பெற்றோர் மறக்கப்படுவதுடன் புதிய உறவுகளுக்கு வரவேற்பும் கிடைக்கும்.

முதல் இரண்டு கட்டங்களிலும் தாய், பெற்றோர் மீளக் கிடைக்கும் பொழுது, குழந்தை அவர்களுடன் கோபமாகவும், விலகியும் நடக்க முற்படுவதை, அவர்கள் புரிந்து கொண்டு கையாள்கை செய்ய வேண்டி வரலாம். ஆனால் தொடர்பறுதல் நிலைக்கு உள்ளான குழந்தைக்கு பெற்றோர் மீளக் கிடைக்கும் பொழுது, குழந்தை அவர்களை அந்நியமாகவே பார்க்கத் தொடங்கி புதிதாக உறவுகளை தொடங்கும். பிரிவின் சடுதித் தன்மையும், பின்பு அளிக்கப்படுகின்ற பராமரிப்பும் பிரிவுத் தாக்கங்களின் வடிவங்களில் பாதிப்பை ஏற்படுத்தலாம். ஆயினும், பிரிவு தாக்கமானதும் நீண்ட காலமானதாகவும் இருக்கும் பொழுது, பிள்ளைகளின் எதிர் வினையில் நிரந்தரமான கோபம் வெளிப்படும். இந்தக் கோபமானது, பிடிவாதம், ஒரே செயல்களைத் திரும்பச் செய்தல், அதிக 'குளப்படி', அதிகம் அழுதல், அதிகம் ஒதுங்குதல் போன்ற நடவடிக்கைகளாக வெளிப்படுத்தப் படுவதுடன் சில வளர்ந்த குழந்தைகளில் படுக்கையில் சலம், மலம் போதல்போன்ற நிகழ்வுகளாவும் வெளிப்படலாம். இதனைச் சரியான முறையில் கையாள்வதற்கு ஏற்கனவே பிரிவு சம்பந்தமான குற்ற உணர்வுடன் இருக்கின்ற பெற்றோரால் முடியாமல் போகலாம். சில வேளைகளில், இயலாமையினால், பெற்றோர்கள் தங்கள் எரிச்சலைக் காட்டுவர். இது நிலைமையை மேலும் சிக்கலானதாக்கும்.

தற்காலிகமாகத் தானும் பிரிதல் என்பது அதனுடைய கால, தேச, வர்த்தமான காரணிகளின் அடிப்படை[illegible]களினால், மீளவும் சேர்ந்த பிறகும் புதிய உறவுச்சிக்கல்களை ஏற்படுத்துதல் தெளிவாகின்றது. இடைப்பட்ட காலங்களில் ஒவ்வொருவரினது சுயத்திலும் ஏற்படுகின்ற மாறுதல்களைப் புரிந்து கொண்டு அங்கீகரிக்கவேண்டி வரலாம். 'அந்நியர்' ஒருவரை 'அப்பா' என்றழைக்கப் பிள்ளை பழகிக் கொள்ள காலம் எடுக்கும். உள்ளார்ந்தமான உறவு ஏற்பட மேலும் காலம் தேவைப்படும். "நீங்கள் முந்தின மாதிரி இல்லை" என்ற வாசகங்கள் உபயோகிக்கப்படலாம். உறவுகளைப் புதுப்பிக்க நிறைய 'கவனம்' தேவைப்படுகின்றது. பிரிந்தவர் கூடுதல் இன்பமேயாயினும், வாழ்க்கையில் இன்னுமொரு மீள்சீராக்கல் அவசியமாகின்றது. குடும்ப உறுப்பி[illegible] தைக் கூடாமல் [illegible] கொள்ளுதலும், தொடர்பாடலைச் சிறப்பாக, ஒழுங்காக வைத்துக் கொள்வதும், இப்படியான தாக்கங்கள் ஏற்படுவதைக் குறைக்க வழி சமைக்கும்.

பிரிதல் இயற்கையான ஒரு நிகழ்வுதான். எந்தவொரு இணைவுக்கும் ஒரு பிரிவு நிச்சயமாகவே இருக்கின்றது. வாழ்வின் உறவுகளில் ஏற்படுகின்ற பிரிவுகளும் தவிர்க்க முடியாதவையே. ஆயினும் இப்பிரிவுகளுக்காக வருந்தி, பின் தேறுதல் ஒருவரின் தொடர்ச்சியான வளர்ச்சிக்குத் தேவையான ஒன்றாக அமையும். இந்த நடைமுறைகளில் சிக்கல்கள் ஏற்படுகின்ற போது, பிரிவு ஒரு தொடரான பிரச்சினையாகின்றது.

சிலவேளைகளில் ஒருவரது பிரிவுத்துயரை வெளியே சொல்ல முடியாத நிலைமை ஏற்பட்டு, அவரது பிரிவுத்துயர் அடக்கப்படுகிறது. தனது பிரிவு என்ன என்பதனையும், அதனுடைய முக்கியத்துவம் என்ன என்பது பற்றியும் எவருடனும் பகிர்ந்துகொள்ள முடியாமல் போய்விடுகிறது. உதாரணமாக உள்ளார்த்தமாக அன்பு செலுத்திய ஒருவரின் பிரிவு, இலட்சியமயப் படுத்தப்பட்ட ஒன்றின் பிரிவு போன்றவை பகிர்ந்து கொள்ளப்பட முடியாதவையாகலாம். வேறு சில சந்தர்ப்பங்களில் பிரிவின் பின்னான துயரம் வலிந்து அடக்கப்படுகின்றது. கணவனைப் பிரிந்த மனைவியின் தேவைகள், பிரச்சினைகள், மற்றவர்களுக்காக தான் சந்தோஷமாக வாழ்வதாகப் பாவனை செய்யும் உறவு நிலைகள் போன்றவற்றை வலிந்து சமூக அழுத்தம் காரணமாக அடக்கப்படும் துயர்களுக்கான உதாரணங்களாகக் கொள்ளலாம்.

மேலும் சில பிரிவுத் துயர்கள் தேற முடியாதனவாய், நிறைவு பெற முடியாதவையாக அமைந்து விடுகின்றன. இவை தொடர்ந்து உணர்ந்தனுபவிக்கும் துயர்களாகி வாழ்வின் பாகமாகி விடுகின்றன. பலதாய்மார்கள் தங்களுடைய இளம்பிள்ளைகளின் பிரிவின் பின்னர் இப்படியான ஒரு தொடர் தாக்கத்தைக் காட்டி நிற்பர். இவை அனைத்தும் பிரிவின் பின்பு ஒரு நிரந்தரமான வடுவை, தாக்கத்தை ஏற்

(X ஆம் பக்கம் பார்க்க)

> ... பிரிவின் துயர் தீர வருந்தி அழுது தீர்த்துப் பின்னர் தேறுதல் ஒருவரது தொடர்ச்சியான வளர்ச்சிக்கு நல்லது.
>
> வாழ்வின் புதிய இலக்குகளைத் தேடுதலும் பிரிவின் துயர் தீர்க்கும் இன்னுமொரு மருந்தாக அமையும்...

**-சா.சிவயோகன்-**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாய் வயிற்றிலிருந்து சிறுமி உதடை மீட்டெடுத்து மீண்டும் பொருத்தினர்

சிறுமியின் உதட்டை நாய் கடித்து விழுங்கி விட்டது. அந்த நாயின் வயிற்றில் இருந்து 'ஆபரேஷன்' மூலம் உதட்டை எடுத்து 'பிளாஸ்டிக் சேர்ஜரி' சிகிச்சை மூலம் மீண்டும் சிறுமிக்கு பொருத்தி டாக்டர்கள் சாதனை படைத்துள்ளனர்.

கிழக்கு ஸ்கொட்லாந்தில் அர்ப்ராதீ நகரை சேர்ந்த சிறுமி மெகன் மேக்பார்லேன். மூன்று வயதான இந்த சிறுமி கடந்த 10 ஆம் திகதி ஐஸ்கிரீம் சாப்பிட்டுக் கொண்டிருந்தாள். அப்போது அருகில் நின்ற — 45 கிலோ எடையுள்ள —பிரமாண்ட அளவு நாய் அச்சிறுமி மீது பாய்ந்தது; அவளது உதட்டை கடித்து விழுங்கியது; சிறுமி மயங்கி விழுந்தாள்.

இந்த சம்பவத்தை பார்த்துக் கொண்டிருந்தவர்கள் சிறுமியின் துண்டாகிப்போன உதட்டை தேடினார்கள். கிடைக்கவில்லை. கடைசியில் நாயின் வயிற்றுக்குள்தான் இருக்கும் என்ற முடிவுக்கு வந்தனர். விஷயத்தை கூறியவுடன் நாயின் வயிற்றைக் கிழித்து உதட்டை எடுக்க அனுமதி தந்தார் நாயின் உரிமையாளர். உடனடியாக நாயின் வயிறு கிழிக்கப்பட்டது. சிறுமியின் உதடு தேடிக் கண்டுபிடிக்கப்பட்டது. நாய் உதட்டை கடித்து மென்றிருக்கவில்லை; விழுங்கிவிட்டது. அதனால் சிதைவுறாமல் இருந்தது. மேலும் வயிற்றில் உணவுப் பொருளை கூழாக்கும் அமிலம் சுரக்கும் பகுதி வரை சிறுமியின் உதடு சென்றிருக்க வில்லை. அதனால் அதிருஷ்டவசமாக உதட்டுக்கு சேதம் ஏற்படவில்லை.

மீட்கப்பட்ட உதடு ''சேலைன்'' மற்றும் ஐஸ் கலவையில் வைக்கப்பட்டு 24 கிலோ மீட்டர் தூரத்தில் உள்ள ஒரு மருத்துவ மனைக்குக் கொண்டு செல்லப்பட்டது. சிறுமி வானில் அழைத்துச் செல்லப்பட்டாள். அனஸ் நாசன் என்ற நிபுணர் 'பிளாஸ்டிக் சேர்ஜரி' செய்தார். வெற்றிகரமாக சிறுமியின் உதடு மீண்டும் அதே இடத்தில் பொருத்தப்பட்டது. இதனால் சிறுமியின் பெற்றோருக்கு ஏக சந்தோஷம்.

''மெகனின் முகம் உதடு இல்லாமல்விகாரமாகிப்போய் இருக்கும். அதிசயப்படும் வகையில் அவளது உதடு மீண்டும் பொருத்தப்பட்டுள்ளது. தற்போது சாதாரணமான காயம் போன்றுதான் உள்ளது—''என அவர்கள் தெரிவித்தனர்.

டாக்டர் அனஸ் நாசன் கூறுகையில் ''ஒரு விலங்கின் வயிற்றுக்குள் சென்ற மனித பாகம் மீட்கப்பட்டு மீண்டும் பொருத்தப்பட்ட சம்பவம் உலகில் இதுவாகத்தான் இருக்கும் என நினைக்கிறேன். விஷயத்தை கேள்விப்பட்டதும் நாயின் உரிமையாளர்தான் நாயின் வயிற்றைக் கிழித்து உதட்டை எடுத்து விடலாம் என யோசனை தந்தார். அவருக்குத்தான் நன்றி சொல்ல வேண்டும்'' — என்றார்.

# செவ்வாய்க் கிரகம் சிவப்பாக இருப்பது ஏன்?

செவ்வாய்க் கிரகத்தை செங்கிரகம் என்றும் கூறுவர். அது சிவப்பு நிறமாகக் காட்சி அளிப்பதே இதற்குக் காரணம்.

அந்தக் கிரகத்தின் மண் சிவப்பு நிறமாகக் காணப்படுவதே அக்கிரகம் சிவப்பாகக் தோன்றுவதற்குக் காரணம்.

அந்த மண் ஏன் அந்த நிறத்தில் தோற்றமளிக்கின்றது?

அமெரிக்கா அனுப்பிய 'பாத் பைண்டர்' விண்கலம் செவ்வாயில் தரையிறங்கியதை அடுத்து, இதற்கான காரணம் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றது.

செவ்வாய்க்கிரக மண்ணை 'பாத் பைண்டர்' விண்கலம் நுணுக்கமாக ஆராய்ந்த பின்னர் அனுப்பிய தகவல்களின்படி, அந்த மண்ணில் அதிகம் காணப்படும் 'மாகிமைட்' என்ற கனிமத்தின் சிவப்பு நிறமே கிரகத்தின் நிறத்துக்குக் காரணம் எனத் தெரிய வந்திருக்கின்றது.

இந்தக் கனிமம் பூமியில் மிக அரிதாகவே காணப்படுகிறது.

# எதிர்ப்புத் தெரிவிப்பதற்கு மொட்டை அடித்த அமைச்சர்!

இந்தியாவில் மாநில அரசு ஒன்றின் நடவடிக்கைக்கு ஆட்சேபம் தெரிவிக்கும் வகையில் அந்த மாநில அரசின் அமைச்சர் ஒருவர் மொட்டைஅடித்துக் கொண்டார்.

இந்தச் சம்பவம் ராஜஸ்தான் மாநிலத்தில் இடம் பெற்றிருக்கின்றது.

அந்த மாநிலத்தின் தலைமைச் செயலாளராக இருப்பவர் ஹலால் மேத்தா. அவருக்கும் மாநில நீர்ப்பாசனத் துறை அமைச்சர் தேவிசிங் பாட்டீலுக்கும் இடையே 'லடாய்.'

அமைச்சர் ஊழல் செய்ததாக தலைமைச் செயலாளர் குற்றம் சுமத்தியிருந்ததே மோதலுக்குக் காரணம்.

ஏற்கனவே ஓய்வு பெறும் வயதைத் தாண்டிய பின்னரும் சேவை நீடிப்பில் இருக்கும் தலைமைச் செயலருக்கு மீண்டும் சேவை நீடிப்பை வழங்கக் கூடாது என்று அமைச்சர் பாட்டீல் கோரியிருந்தார்.

ஆனால் அவரது கோரிக்கையை உதாசீனம் செய்து கொண்டு, இரண்டாவது தடவையாக தலைமைச்செயலருக்கு பதவி நீடிப்பு வழங்கியது மாநில அரசு.

அதற்கு எதிர்ப்புத் தெரிவித்தே அமைச்சர் பாட்டீல் மொட்டையடித்துக் கொண்டார்.

# உலகின் அதி உயரமான மனிதர் என்ற பட்டம் இப்போது புதிய நபருக்கு!

உலக சாதனைகளைத் தொகுத்து ஆண்டு தோறும் வெளியிடும் 'கின்னஸ்' புத்தகத்தின் 1997 ஆம் ஆண்டுப் பதிப்பில் உலகில் அதி உயரமான மனிதன் பாகிஸ்தானைச்சேர்ந்த மொஹமட் அலாம் கன்னா எனக் குறிப்பிடப் பட்டுள்ளது.

1956 ஆம் ஆண்டில் பிறந்த கன்னாவின் உயரம் ஏழு அடி ஏழேமுக்கால் அங்குலமாகும்.

ஆனால் இந்த கின்னஸ் சாதனை தற்போது முறியடிக்கப்பட்டுள்ளது.

புதிய சாதனையைப் படைத்துள்ளவர் வடகொரியாவைச் சேர்ந்த ரி மியொன்க் ஹுன் என்பவராவார். இவரின் உயரம் ஏழு அடி ஒன்பது அங்குலமாகும். வயது 27.

கடந்த வருடம் தாய்லாந்தில் நடைபெற்ற 'ஜோன்ஸ் வெற்றிக்கிண்ண' சர்வதேச கூடைப் பந்தாட்டப் போட்டியின் பின்னரே ரி மியொன்கின் பெயர் உலகில் அடிபடத் தொடங்கியது.

வடகொரிய கூடைப்பந்தாட்ட தேசிய குழுவில் அங்கம் வகித்த அவர் அந்தப் போட்டித் தொடரில் மிக உயரமான விளையாட்டு வீரனாக விளங்கினார். இவரது உயரம் காரணமாக ஏனைய குழுக்களில் இடம் பெற்ற வீரர்கள் அச்சமடைந்தனர் எனத் தெரிவிக்கப்படுகிறது. கூடைப் பந்தாட்டத்துக்கு மிகவும் அவசியமான உயரத்தைக் கொண்டிருந்த அவர் சிறந்த வீரனாகவும் திகழ்ந்தார்.

அவரது உயரமும் கூடைப் பந்தாட்டத்தில் அவருக்கு உள்ள திறமையும் அவருக்கு அமெரிக்கா செல்லவாய்ப்பை உருவாக்கிக் கொடுத்துள்ளன. அமெரிக்காவில் நடைபெறும் பிரபல கூடைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியான என். பி. ஏ. (NBA)யில் பங்கு பற்ற வாய்ப்புக் கிடைத்துள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது. அந்த வாய்ப்புக் கிட்டின் என்.பி.ஏ. சுற்றுப் போட்டியில் பங்குபற்றும் முதலாவது ஆசிய வீரனாக அவர் விளங்குவார்.

கம்யூனிஸ நாடான வடகொரியாவைத் தாயகமாகக் கொண்டதால் அவர் அமெரிக்கா செல்வதில் பல தடைகள் ஏற்பட்டன. இருப்பினும் அவரது சட்டத்தரணி பல சட்டச் சிக்கல்களைத் தாண்டி அவரை ஒருவாறு கனடாவுக்கு அனுப்பிவைத்தார்.

கனடாவிலும் என். பி. ஏ. கூடைப்பந்தாட்டக் குழு ஒன்று உள்ளது. அக்குழுவின் அங்கத்தவராக அமெரிக்கா செல்ல ரி மியொன்க்கு வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

கூடைப்பந்தாட்ட வலையின் வளையம் 10 அடி உயரத்தில் பொருத்தப்பட்டுள்ளது. ரி மியொன்க்கினால் நிலத்தில் நின்றவாறே தனது கையினால் அந்த வலையத்தைத் தொடமுடியும்,

## பஞ்சாமிர்தம் பலாசுஅமிர்தம்

# ஜெயலலிதாவுக்கு எதிராக களத்தில் லதா!

எம். ஜி. ஆரோடு பல படங்களில் கதாநாயகியாக நடித்த மற்றொரு சினிமா நடிகை தற்போது புதிதாக ஜெயலலிதாவுக்கு எதிராக அரசியல் களத்தில் குதித்திருக்கின்றார்.

''அரசியலில் இருந்து ஜெயலலிதாவை விரட்டியடிப்பேன்'' — என்று அவர் சூளுரைத்தும் இருக்கின்றார்.

நடிகை லதாதான் அவர்.

அ. தி. மு. கவின் ஆரம்ப காலத்தில் பல நாட்டிய நாடகங்களை நடத்தி கட்சிக்கு நிதி சேர்த்துக் கொடுத்தவர் லதா.

''அப்போதே கட்சியில் எனக்கு முக்கிய பொறுப்புத் தருவதாகப் பல தடவைகள் எம். ஜி. ஆர். கூறினார்; அழைப்பு விடுத்தார். ஆனால் நான் அப்போது சினிமாவில் 'படு பிஸியாக' இருந்ததால் எம். ஜி. ஆரின் வேண்டுகோளை ஏற்க முடியவில்லை'' — என்கிறார் லதா.

இப்போது திருநாவுக்கரசு குழுவினரின் அ. தி. மு. க. பிரிவில் 'படு பிஸியாக' இருக்கின்றார் லதா.

அரசியலில் ஜெயலலிதாவை, எம். ஜி. ஆரின் சொந்த மனைவியான வி. என். ஜானகி மற்றும் வெண்ணிறஆடை நிர்மலா போன்ற நடிகைகளாலேயே எதிர்த்து வெற்றி பெற முடியவில்லை; தோற்று ஓடிப் போய் விட்டார்கள். லதா மட்டும் எம்மாத்திரம்?

காலந்தான் பதில் தர வேண்டும்.

# எந்நேரமும் பிணங்கள் எரியும் காசி சுடு காடு

மணிகர்ணிகா —

இரவு பகல் பாராமல் எப்போதும் பிணம் எரிந்து கொண்டே இருக்கும் இடம், உலகத்திலே இதுவாகத்தான் இருக்கும்.

இந்த இடம் காசியில் இருக்கிறது.

காசியில் இருந்து மட்டுமின்றி உலகம் முழுவதும் இருந்தும் அங்கு பிணங்கள் வருகின்றன.

பிணத்தை அப்படியே தூக்கி கங்கை நதியில் ஒரு முக்கு முக்கி எடுக்கிறார்கள். உடனே பிணத்தை கிடத்தி விறகு கட்டைகளை அடுக்கி தீ வைத்து விடுகிறார்கள்.

கங்கையில் பிணத்தை முக்கினால் அந்த பிணத்துக்குரியவன் செய்த பாவமெல்லாம் போய்விடும் என்று நம்புகிறார்கள். அது மட்டுமின்றி மணிகர்ணிகாவில் பிணத்தை எரித்தால், அந்த ஆள் மோட்சத்துக்கு போய் விடுவான் என்றும் ஒரு நம்பிக்கை.

முன்னைய காலத்தில் நிறைய பேர் தங்கள் கடைசி காலத்தை கழிக்க காசிக்குச் செல்வார்கள். அங்கே இறந்தும் போய் விடுவார்கள். அவர்களின் பிணத்தை எரிக்க மணிகர்ணிகா பகுதியை பயன்படுத்தினார்கள். அது அப்படியே பிரபலமாகி விட்டது.

ஒருபுறம் சிதை எரிந்து கொண்டே இருக்க, அங்கே இன்னோரு புறத்தில் அந்தப் புகையை சுவாசித்தபடி மக்களும் வசிக்கத்தான் செய்கிறார்கள்.

பிணத்தை எரிப்பதற்கு பொறுப்பு ஏற்பவர்கள் இரவு நேரங்களில் பிணம் பாதி எரிந்த நிலையில் இருக்கும் போதே அவசர அவசரமாக அதனை கங்கையில் தள்ளி விட்டு விடுவதும் உண்டாம்.

15 நிமிடத்துக்கு ஒரு பிணம் அங்கு வருவதால், அவற்றை எரிக்க [illegible] விறகு கடைகளும் [illegible]யில் இருக்கின்றன.

# ரஷ்ய இராணுவ வீரர்களின் நிலை

ரஷ்யாவில் ஒவ்வொரு நாளும் சுமார் பத்து இராணுவ வீரர்கள் மற்றும் இராணுவ அதிகாரிகள் தங்களுக்குள் சண்டையிட்டுக் கொண்டோ அல்லது தற்கொலை செய்து கொண்டோ உயிரிழக்கின்றார்கள்.

'செவோன்யா' என்ற பத்திரிகை இத்தகவலை வெளியிட்டிருக்கின்றது.

ரஷ்யா பெரும் பொருளாதார நெருக்கடியில் சிக்குண்டிருக்கின்றது. இதன் காரணமாக 1991 ஆம் ஆண்டு முதல் அவர்களுக்கு ஒழுங்காக சம்பளம் கொடுக்க முடியாத நிலை அரசுக்கு ஏற்பட்டுள்ளது. சம்பளம் ஒழுங்காகக் கிடைக்காததால் மன நிலை பாதிக்கப்பட்டுள்ள இராணுவத்தினரே இப்படி இறக்க நேரிகிறடுதாம்.

அங்கு நோயினாலும், விபத்தினாலும் கூட இராணுவத்தினர் அதிக அளவில் இறந்து போகின்றார்களாம்.

இதை ரஷ்ய இராணுவம் [illegible] பத்திரிகை [illegible] தெரிவித்துள்ளது.

# நாயைக் கொன்றதற்கு நஷ்டஈடு வழங்க உத்தரவு

ரஷ்யாவில் நாயை விஷம் வைத்துக் கொன்ற ஒருவர் அதன் உரிமையாளருக்கு ஆயிரத்து நாற்பது டாலர் இழப்பீடு கொடுக்க வேண்டும் என தீர்ப்பு அளிக்கப் பட்டுள்ளது.

ரஷ்யாவில் வோல்கோகிராட் நகரைச் சேர்ந்தவர் மாஷா மயோரோவா (வயது 20). இப் பெண் வசித்த அடுக்குமாடி வீட்டின் முதல் தளத்தில் விலாடிமிர் இவானோவ் என்பவர் வசித்தார்.

மயோரோவா 'பொக்சர்' என்ற நாயை வளர்த்து வந்தார். இந்த நாயும் மற்றும் அண்டை வீடுகளில் வளர்க்கப்பட்ட வேறு சில நாய்களும் குரைப்பதும் ஆங்காங்கே மலம் கழிப்பதும் இவானோவிற்கு எரிச்சலை ஏற்படுத்தியது. உரிமையாளர்களிடம் முறைப்பாடு செய்தார். அவர்கள் அதை காதில் வாங்கிக் கொள்ளவில்லை.

ஆத்திரமடைந்தார் இவானோவ். மயோரோவாவின் நாயான 'பொக்சரையும்' மற்றும் இரண்டு நாய்களையும் விஷம் வைத்துக் கொன்றார்.

செல்ல நாய் 'பொக்சர்' கொல்லப்பட்டதை அறிந்ததும் கொதித்தெழுந்தார் மயோரோவா. இவானோவிற்கு எதிராக நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்தார். விலங்குகள் பாதுகாப்பு அமைப்பும் அவருக்கு ஆதரவு அளித்தது.

இந்த வழக்கில் கடந்த மாத இறுதியில் தீர்ப்பு வழங்கப்பட்டது, நாயைக் கொன்ற இவனோவ், மயோரோவாவிற்கு ஆயிரத்து நாற்பது டாலர் இழப்பீடு கொடுக்க வேண்டும் என உத்தரவில் தெரிவிக்கப்பட்டது.

இந்த உத்தரவை எதிர்த்து இவானோவ் மேல்முறையீடு செய்துள்ளார். இந்த மேல் முறையீட்டு மனு ஓகஸ்ட் அல்லது செப்டம்பர் மாதத்தில் விசாரணைக்கு வரலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவிதை முற்றம்

## வானத்து சூரியன் வரவெதற்கு?

என் இனிய
நண்பா...
தொலைந்து விட்ட
உன் முகத்தை
தேடுகிறேன்.

உன்னைச்
சுமந்தவேளை
துடித்த வயிறை
தடவிச் சிலிர்த்த
தாய்மை.

படித்து முடித்து
பட்டம் பெறுவான்
பாரம் இறக்குவான் என
பார்த்திருந்த
தந்தை.

சங்கம் அமைத்திருக்கிறோம்
அங்கத்துவம் சேர்க்க
அரச உதவி
அடித்துச் சொன்னார் —
இனி
அற்புதம் நிகழுமென்று.
பிறகேன்
பிடித்துச் சென்றார்
எம் பிள்ளைகளை?

கொடுக்கப் போவதாய்
கொட்டி முழக்கினார்.
பிடித்துச் சென்ற
என்
பிள்ளை எங்கே?
கடிதம் வராதோ
காங்கேசன்துறையில்
அம்மா நான்
காவலில் என்று.

காலைப் பொழுதுகளில்
காத்திருந்தோம்
காலப் போக்கில்
கமிஷன்கள் கூடி
அவர்
''கைவிசிப்புகளில்''
எங்கள் உலகம்
சுருண்டுபோனது.

எம் சூரியன்
நீ
வசமிழந்து
போனபின்
மேலாய்
ஒருநாள்
துயர் சேர்க்கும்
வானத்துச் சூரியன்
வரவெதற்கு?

- கனல் குஞ்சு.

● ● ●

## கவனி...

இதோ...
மீண்டுமொரு
'பாய்ச்சல்'.
மனிதன் பாதம்
நிலவு தொட்டது
பழங் கதையென
ஆனது!

மனித அறிவே
கருவிகளாகி
விண்துளைத்தேகி
செவ்வாயில்
ஊர்ந்து
புதுப்புது உண்மைகளை
பூமிக்குச் சொல்கிறது
இன்று!

கேட்கும் பொழுதே
உனக்கு
நெஞ்சம் சிலிர்க்கவில்லையா?
தோழனே...
புரியவேண்டும்
உனக்கொரு உண்மை.
அந்தக் கருவிகளின்
நுணுக்கத்தில்
புதைந்து கிடப்பது
மனித மூளை!

மேற்கில்—
மனிதஞானம்
தனது உச்சங்களைக்
கண்டறிந்துகொண்டிருக்கிறது.
இங்கே நம்மவரோ
செவ்வாய் தோஷத்துக்குக்
அஞ்சிய படி...!

-ந. சத்தியபாலன்

## நிலமெனும் நல்லாளுக்கு....

பட்டாடை கட்டிப் பழ இதழில் தேன்பூசி
நெற்றித் திலகமிட்டு நெய்தடவி
குழல் வனத்தில்
செவ்வந்தி சூடித் திருத்தாலி நகை மினுக்கி
என்றெழுவாய் எங்கள் 'நிலத்தாயே'?
சொல்!
இன்று —
ஒளியிழந்த கண்ணும்,
பயம் உடுத்த முகம் அதுவும்;
கசங்கியுள்ள கந்தல்... முடிகலைந்த
அமங்கலமும்,
பொட்டழித்து, தாலி'போட்டழுது,'
கைவளையல்
மெட்டியற்ற வேசமொடும்;
பிச்சை எடுப்பவன் போல்
ஒட்டி உலர்ந்துள்ளாய்!
ஊற்றடைத்த கிணறாய் நீ
வற்றி வெடிக்கின்றாய்!
வசந்தத்தைப் பலி கொடுத்துக்
கண்ணீர்க் கடல்மூழ்கிக்
கரையேறத் துடிப்பவளே...
இன்னும் நீ இப்படியாய்
எத்தனை நாள் சீரளிவாய்?
புன்னகையை விற்றுப்
புதிராய்க் கிடப்பவளே...
'முன்னை'ப் பசுமையெல்லாம்
முளைக்க என்று வித்தெறிவாய்?
நீ சிரித்தால் தானெம் நிசவாழ்வில்...
'நிம்மதியாம்'
தேரசையும்!
நீ அழுதால் திசைதிக்குந் தீக்குளிக்கும்!
மைந்தர்நாம்......
''எமக்கு மடிவிரிப்பாய்'' நீ எனத்தான்
நம்பித் துயர்சுமந்தோம்;
நாதசுரம் பொங்க, தவில் முழங்க,
புனித மெழ..., தாலியொடும்
நெற்றித் திலகமொடும்
நீ கண்முன் காட்சிதரும்
அற்புதத்தைக் காண
ஆவலுடன் காத்துள்ளோம்!

- அருணன்

● ● ●

## வெள்ளைப்புறாக்களுக்கு!

வெள்ளைப் புறாக்களாய்...
வெள்ளை உடையுடன்...
ஆஸ்பத்திரி
'வார்டு' களில்
வலம் போய் வருபவர்களே...
சீழும், இரத்தமும்
உங்களை
சினக்கத்தான் செய்யும்!
வியாதிகளின் வேதனை
வெறுப்படையச் செய்யும்!
விபத்துக்களின் கோரங்கள்
உங்களை
வதைக்கத்தான் செய்யும்!
சாவும்—பிணியும்
தினம் உங்களை
சலிப்படையச் செய்யும்!
இறப்பும்—பிறப்பும் கண்டு
உங்களுக்கு
எல்லாமே வெறுக்கும்......!
உண்மைதான் ஆனால்......
சேவை என்பதே
தியாகம் தானே...?
அன்பும்—கருணையும் தானே
உங்கள் வேலையின்
அடிப்படைத் தகுதிகள்...?
பொறுமைதானே
உங்கள்
புனித சேவையின்
மூலதனம்......?
உங்களின்
சின்னச்—சிரிப்பாலே
சில்லறை வியாதிகள்
சில தீர்ந்து போகுமே......?
உங்களின் அன்பு கூட
ஆவிகளை உயிர்ப்பிக்குமே...!
ஆபரேஷன்களை விட
உங்கள் ஆறுதல் தானே
அவசரச் சிகிச்சை?
கடவுளுக்கு அடுத்தபடியாய்
கரம்கூப்புவது
டாக்டர்களையும்
உங்களையும் தானே!
வருபவர்கள்
வசந்தம் அனுபவிக்கவா
வருவார்கள்...?
வியாதிகளின் கைகளில்
விழுந்து கிடப்பவர்கள்
வாட்டுகளுக்கு
விளையாடவா வருவார்கள்?
நீங்கள் ...... சினக்காமல் ... சீறிவிழாமல்
சின்னச் சிரிப்போடு;
அன்போடு......,
ஆறுதல்தரும் ஒரு
வார்த்தையோடு......,
இருந்தால்......
வேம்பாய்க் கசக்கும் வியாதி கூட
வெல்லமாகுமே......!
ஆஸ்பத்திரி நாற்றங்கூட
சொர்க்கமாகுமே......!

-முன்னாள் நோயாளி-

## அதிர்ஷ்டம் எது?

ஓர் ஊரில் ஒரு பணக்காரக் கிழவன் இருந்தான். வசதியான வாழ்க்கைக்குத் தேவையான அனைத்துப் பொருள்களும் அவனிடம் இருந்தன. ஒரே மகன், மற்றும் அவன் சிறந்த பொக்கிஷமாகக் கருதிய ஓர் உயர் ஜாதிக் குதிரையும் அவனிடம் இருந்தது.

ஒரு நாள் இந்தக் குதிரை, லாயத்திலிருந்து தன்னை விடுவித்துக்கொண்டு மலைக்கு மறுபக்கம் ஓடி விட்டது.

இந்தச் செய்தியை அறிந்து அக்கம் பக்க வீட்டார்கள் பணக்கார கிழவனிடம் துக்கம் விசாரிக்க வந்தனர்.

''அடடா, உங்களுக்கு என்ன ஒரு துரதிர்ஷ்டம், பெரியவரே!'' என்றார்கள்.

கிழவன் அவர்களிடம் ''துரதிர்ஷ்டம் என்று எப்படி சொல்கிறீர்கள்?'' என்று வினவினான்.

ஓடிப் போன குதிரை சில நாள்களில் தானாக திரும்பி வந்தது. அது சும்மா வரவில்லை; தன்னுடன் அழகிய பன்னிரண்டு காட்டுக் குதிரைகளையும் கூட்டி வந்திருந்தது!

இந்த முறையும் அண்டை வீட்டார் கூட்டமாக வந்து கிழவனை, '' ஆஹா, என்ன நல்ல அதிர்ஷ்டம்!'' என்று வாழ்த்தினார்கள்.

கிழவன், ''நல்ல அதிர்ஷ்டம் என்று எப்படி சொல்கிறீர்கள்?'' என்று அவர்களைத் திருப்பிக் கேட்டான்.

அடுத்த நாள் கிழவனின் மகன் ஒரு காட்டுக் குதிரை மீது ஏறிச் சவாரி செய்ய முயன்றபோது, அந்தக் குதிரை அவனைக் கீழே தள்ளிவிட்டது. அதனால் மகனின் ஒரு கால் உடைந்தது.

இப்போதும் அக்கம் பக்கத்தில் இருப்பவர்கள் துக்கம் விசாரிக்க வந்தனர். ''அட பாவமே! பெரியவரே, உங்கள் பையனுக்கு இது போதாத நேரம்'' என்றார்கள்.

''போதாத நேரம் என்று எப்படி சொல்கிறீர்கள்?'' என்றான் கிழவன்.

ஆறு மாதங்களில் அண்டை நாட்டு அரசன் ஒருவன் இந்த நாட்டின் மீது போர் தொடுத்தான்.

''நாட்டுக்காகப் போரிட வீட்டுக்கு ஓர் இளைஞன் வேண்டும்'' என்று எல்லா இளைஞர்களையும் அரசனின் ஆள்கள் இழுத்துச் சென்றனர். அப்போது, கால் ஊனம் என்பதால் மேற்படி வாலிபன் போருக்குப் பயன்படமாட்டான் என்று எண்ணி அரசனின் ஆள்கள் அவனை விட்டு விட்டனர்.

சண்டையில் மற்ற இளைஞர்கள் அனைவரும் கொல்லப்பட்டனர்.

ஊரில் இப்போது உயிர் பிழைத்த ஒரே இளைஞன் கிழவனின் நொண்டி மகன் மட்டுமே.

அதனால் எது நல்ல அதிர்ஷ்டம், எது துரதிர்ஷ்டம் என்று யார் சொல்ல முடியும்? வாழ்க்கையில் நடப்பவற்றைத் துணிவோடு ஏற்க வேண்டியதுதான்.




## எங்கள் வீட்டுப் பூனை

சின்னச் சின்னப் பூனை சிறந்த நல்ல பூனை
என்னைப் பார்த்துத் துள்ளும் எங்கள்
வீட்டுப்பூனை!

கட்டையான கால்கள் குட்டையான செவிகள்
மெல்ல மெல்ல நடந்து மெதுமெதுவாய்ப்
போகும்!

சுண்டெலியைக் கண்டால் துரத்திச் சென்று
பிடிக்கும்
வண்டுகளைக் கண்டால் வளைத்து வந்து
கடிக்கும்!

பந்தை உருட்டி ஆடும் பாய்ந்து ஓடி ஏறும்
விந்தை பல செய்து வேடிக்கைகள் காட்டும்!

உண்ணத் தேனும் பாலும் உனக்கு நானுந்
தருவேன்
கண்ணைச் சிமிட்டி ஓடிவா! காலைச் சுற்றி
ஓடிவா!

-ஆ. பிரியந்தினி-

## நொடிப் பொழுது

1. சிவப்பு நிறச் சிங்காரி; தண்ணீர் பட்டால் கறுப்பாயி. அது என்ன?
2. மேடு கண்டால் ஒதுங்குவார்; பள்ளம் கண்டால் பதுங்குவார். அது என்ன?
3. ஆழக்குழி வெட்டி அதிலே ஓர் மூட்டை இட்டு அண்ணார்ந்து பார்த்தால் தொண்ணூறு முட்டை. அது என்ன?
4. அடித்தாலும் அழமாட்டாள்; முறுக்கினால் முணு முணுப்பாள். அது என்ன?
5. நெருப்பில்லாமல் புகையும்; நெருப்பைக் கண்டால் மறையும். அது என்ன?
6; மணி அடித்ததும் மலைப்பாம்பு ஊருது. அது என்ன?

செல்வி கி. தஸ்தனி

1. நெருப்பு. 2. தண்ணீர். 3. தென்னைமரம். 4. வானொலிப்பெட்டி. 5. பனி. 6. புகைவண்டி.

விடை

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## தூறல் வெள்ளம்

இறைவனை ஆராய்ந்து முடிவு கண்டவர் எவரும் இல்லை. தத்தமது இன்ப துன்ப மனநிலைகளுக்கு ஏற்பவே — தமது வாழ்வில் ஏற்படும் நிகழ்வுகளை வைத்தே — அவன் இருக்கிறான் என்றும் இல்லை என்றும் வாதிட்டு நிற்கிறார்கள்.

நீ மிருகம் போல வாழும் போது அவன் இருந்தாலும் ஒன்று தான்; இல்லா விட்டாலும் ஒன்றுதான்; நீ வணங்கினாலும் ஒன்று தான்; விட்டாலும் ஒன்று தான்.

இறைவனை இருக்கிறான் என்றும், இல்லை என்றும் பிதற்றி வாழ்க்கையில் ஆதாயம் தேடியவர்கள் பலர். இக் கொள்கைகள் தமிழ் நாட்டு அரசியலையே ஆட்டிப்படைத்த காலங்கள் உண்டு.

இருந்தால் அவன் குணங்கள் இன்ன இன்ன என்று மட்டும் தெரிந்துவிடு. அக் குணங்களை நீயும் பின் தொடர்ந்து உன் துயர் துடைத்து விடு. அதற்குமேல் ஆராய்தல் அவசியமில்லை.

உள்ளத்திலே ஆசைகள் பலவிதம். தொடத் தொடச் சுகமான பரிசங்கள்; காணக் கண் கொள்ளாக் காட்சிகள்; உண்ண உண்ணத் தெவிட்டாத சுவைகள்; மணந்தே மயங்கும் வாசனைகள்; கேட்கத் தெவிட்டாத — ஏன் கேட்கக் கூடாத — கானங்கள். அனைத்தையும் அனுபவிக்கத் துடிக்கும் மனது. இதற்கு இடம் தராத 'பொக்கற்' பொருளாதாரம்.

மனதுக்குள் ஆசை புகும் ஐந்து வாசல்கள் — மெய், வாய், கண், மூக்கு, செவி — ஊடே புகுந்து ஆட்டிப்படைக்கும் ஆசைகளை அறுத்துவிட்டால், அவித்து விட்டால், அவனே இறைவன். பின்பு அந்த மனதிலே பொய் புகாது.

நீ ஞானி இல்லை என்றால் — ஆசைகளை முற்றிலும் துறக்க வழி தெரியா விட்டால் — சற்று அடக்கி வாழப் பழகு. அது போதும். நிம்மதியாக நீடு வாழப் போவது இறைவன் அல்ல; நீயேதான்.


பொறிவாயில் ஐந்தவித்தான் பொய்தீர் ஒழுக்க
நெறிநின்றார் நீடுவாழ் வார்.

என்றார் வள்ளுவர்.
—0006
(கடவுள் வாழ்த்து)

- அம்பிகைபாகன்

# இந்த வார இராசி பலன்

## (26 - 07 - 1997 முதல் 01 - 08 - 1997 வரை)




மாற்றம்:
ரேவதி - சந்திரன் - மீனத்திலிருந்து மாற்றமடையும்.

**இந்திய அரசியலில் திடீர் மாற்றங்கள், குழப்ப நிலைகள் வர இடம் உண்டு. இலங்கை அரசியலில் வெளிநாடுகளின் (மேற்கு நாடுகள்) தலையீடு ஏற்படும். திடீர் பேச்சுவார்த்தைகள், இறுக்கங்கள் ஏற்பட இடம் உண்டு எனக் கிரக நிலைகள் காட்டுகின்றன.**

**மேடம்:** உங்களுக்கு எதையும் சாதிக்கும் திறன் உண்டு என்ற நம்பிக்கை ஏற்படும். யாருக்கு என்ன உதவி செய்தாலும் நன்மை சொல்ல மாட்டார்கள் என்பதற்காக நீங்கள் சும்மா இருக்கக்கூடாது. ஓடி ஓடி உதவிசெய்து குறை கேட்பீர்கள். உங்கள் புத்தியாலும், புத்திரராலும் சில காரியனுகூலங்கள் ஏற்படச் செய்யும். திடீர் பணவரவு ஏற்படும்; ஆனால் வீடு, மனை, குடும்பச் செலவுகள் மேலிட்டுச் செலவு அதிகரிக்கச்செய்யும். கை, கால், கண் நோய்களுக்கு வைத்தியம் செய்து கொள்ளவும். சகோதரர்களுக்கு நல்லதல்ல. தெய்வ வேண்டுதல் முக்கியமானதாகும்.

**இடபம்:** நீங்கள் ஓடி ஓடி உழைக்கும் உழைப்பாளி எனப் பெயர் எடுத்தவர். ஆனால் அடிக்கடி வரும் கோபத்தால் மற்றவர்களின் வெறுப்பையும் உங்களை அறியாது சம்பாதித்துக் கொள்ளுவீர்கள். தொழில் ஸ்தானத்தில் தொடர்ந்து நன்மையான விஷயங்கள் நடக்கும். புதிய திட்டங்கள், நடைமுறைகளால் நன்மைகள் ஏற்படும். வீட்டில் கலகலப்பு இருக்கும். பொருள்களில் அவதானமாக இருக்கவும். உங்கள் முயற்சிக்குத் தகுந்த இலாபங்கள் கிடைக்கும்.

**மிதுனம்:** நீங்கள் அதிகம் கதைத்துக் கதைத்து காலத்தைக் கழிப்பீர்கள். உடல் நிலையில் அவதானமாக இருக்கவும். வயிற்றில் நோ—கண்ணில் வலி கொடுக்கும். தொழில் ஸ்தானத்தில் பெரியவர்களின் உதவி இருந்தாலும் ஏட்டிக்குப் போட்டியான சம்பவங்கள் நடக்கும். அடிக்கடி பயப்படாதீர்கள். தெய்வ வழிபாட்டைச் செய்து வரவும். அதனால் அமைதியாவீர்கள். நண்பர்கள் வரவால் வீட்டில் கலகலப்பு நிலவும்.

**கடகம்:** உலகிற்கெல்லாம் ஆலோசனை கூறும் நீங்கள் உங்களைப்பற்றி கவனிப்பதில்லை. மற்றவர்கள் எவற்றையாவது சொல்லிக்கொண்டு இருக்கட்டும். அதைப்பற்றிக் கவலைப்படாது உங்கள் திட்டங்களை நடைமுறைப் படுத்துங்கள். பூமியால் இலாபம்—விளைவுப் பொருள்களால் நன்மைகள் ஏற்படும். தொழில் ஸ்தானத்தில் பதற்றம் வந்தாலும் சமாளித்துக் கொள்ளுவீர்கள். குடும்பத்தினர் கலகலப்பாக இருப்பார்கள். நல்லவர்கள், நாலும் தெரிந்தவர்கள் உதவி செய்து முன்னேற உதவுவார்கள்.

## சோதிட சஞ்சீவி

**சிங்கம்:** உழைத்து, உழைத்து முன்னேறி வரும் நீங்கள் தெய்வ பக்தியால் நல்லதை அடைவீர்கள். குடும்பப் பாசத்தால் அலைச்சலும், பொருள் நஷ்டமும் ஏற்படத்தான் செய்யும். அதற்காகக் கவலைப்படாதீர்கள். இலாபமும், நஷ்டமும் மாறி மாறி வரும். இவ்வுலகில் நாம் அதிகம் அலட்டிக் கொள்ளக் கூடாது. தொழில் ஸ்தானத்தில் அவதானமாக இருக்கவும். நீங்கள் எதிர்பார்த்த விஷயங்கள் தாமதமாகலாம். உறவினர் குறைசொல்லுவார்கள். உங்கள் கடமையில் கண்ணாக இருங்கள். காரியங்கள் தானாக நடக்கும்

**கன்னி:** மற்றவர்களுக்கு ஏணிப்படியாக வாழ எண்ணும் உங்களைச் சிலர் ஏமாற்றச் செய்வார்கள். எனவே உங்கள் பொருள்களில் அவதானமாக இருக்கவும். அடிக்கடி வரும் கோபத்தால் வீண்குறை கேட்பீர்கள், புத்திரரால் அதிக செலவுகள் ஏற்படும். தடுமாற்றமும், அலைச்சலும் சர்வசாதாரணம். கைகாலில் காயம் அல்லது உளைவு அடிக்கடிக் கொடுக்கும். மறைமுகச் சத்துராதிகள் உங்களை எதுவும் செய்துவிடமுடியாது. சகோதரர்களுக்கு உதவிகள் செய்வீர்கள். உடல் நிலையில் கவனம் எடுக்கவும்.

**துலாம்:** ஏன் அதிகம் யோசிக்கிறீர்கள்? வீட்டுக் கவலை, நாட்டுப் பிரச்சனை என மாறி மாறி வந்தாலென்ன செய்யும்? எக்காரியத்தையும் துணிந்து செயற்படுத்துங்கள். காரியானுகூலம் ஏற்படும். இன ஜனங்களைப் பற்றியும், எதிர்ப் பாலாரைப்பற்றியும் கவலைப் படாமல் அலுவல்களைச் செய்து வாருங்கள். கைகாலில் காயம் வரலாம், தூரதேசப் பிரயாணங்களைத் தவிர்த்துக் கொள்ளவும். திடீர் பணவரவு வரும். நண்பர்கள் வீண்குற்றம் சுமத்தி கோபித்துக் கொள்ளுவார்கள்.

## மகாதேவா ஜோதிடம்

**விருச்சிகம்:** கலகலப்பாக இருப்பீர்கள். தொழில் பீடத்தில் மாற்றங்கள் ஏற்படும். சகோதரங்களால் அல்லது புத்திரர்களால் அதிக செலவுகள், அலைச்சல்கள் ஏற்படும். குடும்பத்தில் சுபகாரியங்கள் நடக்க இடமுண்டு. எதற்கும் பொருளில் பொறுப்பு நிற்காதீர்கள். அதனால் அவதிகள் ஏற்படச் செய்யும் பிரயாணங்களைத் தவிர்த்துக் கொள்ளுங்கள். எவ்வளவுதான் ஓடியாடித் திரிந்தாலும் அளந்ததுதானே கிடைக்கும்? அதிக யோசனைகளை விடுங்கள். அமைதி ஏற்படும்.

**தனுசு:** நீங்கள் எதிர்ப் பாலாருடன் நிதானமாக நடந்து கொள்ள வேண்டும். இனஜனங்களால் மனக்குமுறல்கள் ஏற்படும். அந்நியர் பல உதவிகளைச் செய்வர். ஆயுத பயம் உண்டு. அவதானமாக இருத்தல் வேண்டும். தொழில் ஸ்தானத்தில் வீண் பகைகள் அல்லது வாக்குவாதங்கள் ஏற்படச்செய்யும். தூரதேசத்துச் செய்திகளால் நற்பலன்கள், மகிழ்ச்சிகள் ஏற்படும். கொடுக்கல், வாங்கல்களில் அவதானமாக இருக்கவும்


**மகரம்:** நீங்கள் மற்றவர்களுக்கெல்லாம் உதவினாலும் உங்களைப் பற்றி யாரும் கவலைப்படமாட்டார்கள். அதனால் உடல் பாதிப்புக்கள் வரத்தான் செய்யும். கொஞ்சம் உடம்பையும் கவனித்துக் கொள்ளுங்கள். திடீர் மாற்றங்கள் வரும். கை கால் உழைவு, வாய்வுத்தொல்லை, விஷபீடைகள் ஏற்பட இடம் உண்டு. வீடு—மனைச் சிறப்புக்கள் ஏற்படும். பிறர் உதவிகள் கிடைக்கும். தொழில் ஸ்தானத்தில் பெரியவர்களின் உதவிகள் கிடைக்கும்.

**கும்பம்:** எல்லோராலும் மதிக்கப்படும் நீங்கள் கௌரவ

(4 ஆம் பக்கம் பார்க்க)

## சொற்சிலம்பம்

### புதிர்ப் போட்டி இல.08




சொற்சிலம்பம் இல. 08
சஞ்சீவி,
361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

பெயர் : ..................................................

விலாசம் : ..................................................

..................................................

—==——— இங்கே வெட்டுக ———·———

### முடிவு திகதி: 01 - 08 - 1997

**இடமிருந்து வலம்**

1. பரிசு. 5. யாகம். 7. யானைக்கு உண்டு. 8. கஞ்சல். 10. பெருக்கல் குறி. 11. தந்தை. 13. மகன். 15. ஒட்ட உதவும். 16. உறுதி. 17. மூன்று. 18. கெண்டைமீன். 20. சாப்பிடும் போது நொருங்கும். 22. போதைதரும். 23. களம். 24. தற்கொலை செய்வோர் நாடுவது.

**மேலிருந்து கீழ்**

1. பாண். 2. பாய். 3. முட்டாள். 4. அதிர்ச்சியால் வருவது. 5. எல்லையில் போடுவது. 6. மகாபாரத பாத்திரம். 9. விசரன். 10. கொள்வனவின் போது இதனைப் பார்ப்பர். 12. ஜீவனாம்சம் கோரும் வழக்கைஇப்படியும் கூறுவர். 14. மேடு. 17. கூட என்பதால் குழம்பியது. 18. புலம். 19. வெள்ளைப்பூடு. 21. ஒன்றல்ல. 22. திருடு.

### சொற்சிலம்பம் இல. 06 - விடைகள்

**இடமிருந்து வலம்**

1. திகைப்பு. 4. தரம். 6. ருது. 7. சங்கம். 8. வீல். 10. புகழ். 12. நல்வழி. 14. தலைச்சன். 16. சிம்மம். 19. பாதி. 20. சாதி. 21. அம்பாரி. 22. மதுரை.

**மேலிருந்து கீழ்**

1. திருப்புதல். 2. கைது. 3. புசல். 4. தகவல் 5. ரம். 8. [வீழ்ச்சி. 9. விழி. 11. கலை. 12. நன்மதி. 13. வடை. 15. சம்பாரி. 17. கதிரை. 18. சாம். 20. சாது.

பல நூற்றுக்கணக்கான வாசக நேயர்கள் இப் போட்டியில் ஆர்வத்துடன் பங்குபற்றி சரியான விடைகளை எழுதி அனுப்பியுள்ளனர். அவர்களில் அதிர்ஷ்டச் சீட்டிழுப்பு மூலம் தெரிவு செய்யப்பட்ட முதல் மூன்று அதிர்ஷ்டசாலிகளின் விவரம் வருமாறு:-

★ முதலாம் பரிசு :- செல்வி. வி. விவேகானந்தன்,
12, குமாரசாமி றோட்,
கந்தர்மடம்.

★ இரண்டாம் பரிசு:- தி. சித்திரவேல்,
15 ஆம் கட்டை, உடுப்பிட்டி தெற்கு,
உடுப்பிட்டி.

★ மூன்றாம் பரிசு:- சி. தியாகேஸ்வரி,
மே/ பா. க. சிதம்பரநாதன்,
''திருத்தணிகை'', டச்சு வீதி,
இருபாலை.

இவர்கள் மூவருக்கும், சரியான விடைகளை எழுதிய ஏனைய சகல வாசக நேயர்களுக்கும் எமது பாராட்டுகள்.

புதிர்ப் போட்டிக்கு விடைகளை அனுப்பும்போது கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் போட்டியின் இலக்கத்தைத் தவறாமல் குறிப்பிடவும்.

சரியான விடைகளை அனுப்பியவர்களில் மூன்று பேர் குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்பட்டு பரிசுகள் வழங்கப்படும். கடிதம் கிடைத்தவுடன் நேரில் வந்து பணத்தைப் பெற்றுக் கொள்ளலாம்.

ஆசிரியரின் தீர்ப்பே முடிவானது. உதயன்/சஞ்சீவி ஊழியர்கள், அவர்களது குடும்ப உறுப்பினர்கள் போட்டியில் கலந்து கொள்ள முடியாது.

| | |
|---|---|
| முதற் பரிசு:- | ரூபா. 150. 00 |
| இரண்டாம் பரிசு:- | ரூபா. 100. 00 |
| மூன்றாம் பரிசு:- | ரூபா. 50. 00 |

★ புதிர்ப்போட்டி இலக்கம். 07 இன் முடிவுகள் அடுத்த வார சஞ்சீவியில் வெளிவரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண்களின் மயிர்ப் பிரச்சினை: அது மயிரளவு பிரச்சினை அல்ல!

**உடலின் தேவையற்ற பகுதிகளில் ரோமம் வளர்வது பெண்களைப் பொறுத்தவரை ஒரு பெரும் பிரச்சினைதான். அந்த விடயத்தை ஆராய்கின்றது இக்கட்டுரை.**

நுண்மைக்குக் குறியீடாக-உதாரணமாக — மயிரைக் கூறுவார்கள்.

ஆனால் அந்த நுண்ணிய மயிரே சில பெண்களுக்குப் பிரச்சினையாகி விடுவதுண்டு.

பெண்களைப் பொறுத்தவரை — குறிப்பாக கீழைத்தேசப் பெண்களைப் பொறுத்தவரை நீண்ட கருங் கூந்தல் — கார் குழல் — சுருண்ட கேசம் — போன்றவை அழகின் மூலகாரணங்களாகக் கருதப்படுகின்றன.

அளவான — அழகான — புருவ மயிர்களும் இப்படி வரவேற்கப்படுகின்றன.

இதற்கப்பால் கையின் கமக்கட்டுகள், பெண் உறுப்பு போன்ற மறைவான இடங்களிலும் ரோமம் வளர்ந்திருக்கும். இதுபொதுவானதே.

ஆனால் இவற்றுக்கு வெளியே நாடி, மார்பு, உதரம், கை — கால்கள் போன்ற அவயவங்களிலும் சில பெண்களுக்கு ரோமங்கள் அளவுக்கு அதிகமாக வளர்ந்து தொல்லை கொடுப்பதுண்டு.

பெண் — பெண்ணாக, பெண்ணியல்பு கொண்டவளாகக் காட்சி தருவதையே ஆண்களும் சரி பெண்களும் சரி விரும்புகின்றார்கள்.

இத்தகைய உலகில் இவ்வாறு மோவாய் — நாடி, மார்புகள், உதரம், கை — கால்கள் போன்றவற்றில் ரோமங்கள் அடர்த்தியாக — வளர்வதை முரட்டுத்தனத்தின் வெளிப்பாடு — ஆண் தன்மை — எனச் சமூகம் கருதுவதால் —

ஏனைய அழகுகள் இருந்தும், இத்தகைய மயிர்ப் பிரச்சினைகளால் தங்களுக்குள் தாங்களே வேதனையால் பொசிந்து போகும் பெண்களும் ஆயிரக் கணக்கில் இருக்கவே செய்கின்றார்கள்.

கொஞ்சம் கறுப்பு நிறமுடைய பெண்களுக்கு இத்தகைய இடங்களில் ரோமம் அளவுக்கு அதிகமாக வளர்ந்திருந்தாலும் அவை வெளித்தோற்றத்துக்கு நன்கு புலப்படுவதில்லை. ஆனால் சிவந்த — சந்தன நிற — அழகுப் பெண்களின் முகத்தில் மீசை, தாடிபோல மயிர் வளர்வதோ, கை — கால்களில் ரோமங்கள் வளர்ந்திருப்பதோ 'பளிச்' என்று உடனே எடுத்துக் காட்டுவதாக இருக்கும். இதனால் அவர்களின் அழகு விரைவாக அடிபட்டுப்போய், சமூகத்தில் அவர்களின் தோற்றம் கேள்விக் குறியாகி விடுகின்றது.

வில்லங்கமான இடங்களில் ரோமம் வளரும் பிரச்சினையால் தங்களுக்குள் தாங்களே மறுகி 'ஹிஸ்ட்ரியா' என்ற மனநோய்க்கு இலக்கான பெண்களின் எண்ணிக்கையும் ஏராளம்.

இவ்வாறு மிதமிஞ்சி ரோமம் வளர்வதை 'ஹேர்சூட்டிஸம்' (Hirsutism) என்று ஆங்கிலத்தில் குறிப்பிடுவார்கள்.

## உடற் குறைபாடு இல்லவே இல்லை

எனினும் இவ்வாறு ரோமங்கள் தேவையற்ற இடங்களில் வளர்வது ஓர் உடற் குறைபாட்டின் விளைவோ அல்லது நோயோ அல்ல என்று அடித்துக் கூறுகின்றார்கள் மருத்துவர்கள்.

ஒருவரின் மூக்கு நீளமானது; மற்றொருவரின் மூக்கு கட்டையானது; மூன்றாம் ஆளின் மூக்கு ஜப்பான்காரனைப் போல சப்பையானது.

— இவ்வாறு பல தோற்றங்களில் பலர் உருவாவது எவ்வாறு இயற்கையின் நியதியோ அதுபோலவே வெவ்வேறு பெண்களுக்கு வெவ்வேறு இடங்களில் உரோமங்கள் அடர்ந்தும் ஐதாகவும் முளைப்பதும் இயற்கையின் ஓர் நியதியே.

கருவாக இருக்கின்ற குழந்தையின் எட்டாவது வாரத்தில் சிறிய ரோமங்கள் உற்பத்தியாகத் தொடங்குகின்றன. அப்போது தொட்டு தனது உயிர் வாழ்க்கை முடிவுற்று அடுத்த சில மணி நேரம்வரை மனிதனின் ரோமம் வளர்ந்து கொண்டுதான் இருக்கின்றது.

உடலில் 'ஆன்ரஜன்' என்ற ஓமோன் அதிகமாக சுரப்பதால்தான் உடல் பகுதியில் அதிகமான ரோமங்கள் வளருகின்றன. ஆண்களுக்கு அதிகமாக 'ஆன்ரஜன்' சுரக்கப்படுவதால்தான் முகம், நெஞ்சுப் பகுதி, கை, கால் போன்ற உடற்பகுதி எங்கும் ரோமங்கள் வளருகின்றன.

இதே போன்று 'ஆன்ரஜன்' அதிகமாகச் சுரக்கப்படும் பெண்களின் உடல்களில் ரோம வளர்ச்சி ஆண்களைப் போன்று அதிகமாகக் காணப்படும்; அல்லது பரவலாக வழமைக்கு மாறான இடங்களில் ரோமங்கள் வளரும்.




இவ்வாறு பரட்டையாக ரோமங்கள் வளரும் உடற்தன்மை பரம்பரைகள் ஊடாக — சந்ததித் தொடராக — கடத்தப்படுவதாகவும் டாக்டர்கள் கருதுகின்றார்கள்.

## மருத்துவ முயற்சி பலன் தரவில்லை

வழமைக்கு மாறான இடங்களில் ரோமங்கள் வளருவதைத் தடை செய்வதற்கான மருந்துகளைக் கண்டு பிடிப்பதில் நீண்டகாலமாக மருத்துவர்கள் முயன்று வந்திருக்கின்றார்கள்.

எனினும் இத்தகைய மருந்துகள் தலை, புருவம், போன்ற வழமையாக மயிர்கள் இருக்கவேண்டிய இடங்களில் உள்ள ரோமங்ககளை அழிக்காமல் இருக்க வேண்டும் என்பதும் அவசியம்.

இத்தகைய முயற்சியிலான ஆய்வுகள் — குறிப்பிடத்தக்க அளவு கூட முன்னேற்றமடையவில்லை என்கிறது பிரபல மருத்துவ ஆய்வு இதழ் ஒன்று.

எனினும் ஓமோன்கள் அல்லது நாளமில் சுரப்பிகள் தொடர்பான மருந்துகள் மூலம் ரோம வளர்ச்சியைக் கட்டுப்படுத்தும் முயற்சிகள் எதிர்காலத்தில் வெற்றி பெறும் என்றும் அந்த இதழ் நம்பிக்கை தெரிவிக்கின்றது.

## முகத்தில் உள்ள மயிர்கள்

மண்டையோட்டின் மேல் பகுதி, புருவங்கள் தவிர்ந்த முகத்தின் மோவாய் பகுதியிலும் தாடி —மீசை முளைக்கும் இடங்களிலும் பெண்களுக்கு ரோமங்கள் வளருவதைத் தடுப்பதற்கு ஒரு முறை உண்டு.

மின்னாள்கை(Electrolysis) மூலம் அல்லது ரேடியோ டிரிக்கோன்சி மூலம் ரோமங்களை வேர்களுடன் பிடுங்கி எடுக்கும் முறையே இது.

அத்தகைய முறையில் மயிர்ப் பைகளிலிருந்து மயிர் முளைகளை அகற்றி விடுவதால் அங்கிருந்து புதிதாக மயிர்கள் முளைப்பதற்கு வாய்ப்புகள் இல்லாமல் போய்விடுகின்றது.

எனினும் இத்தகைய வழியை நாடுவதிலும் இரண்டு சிக்கல்கள் உள்ளன.

ஒன்று — இத்தகைய சிகிச்சை முறையைப் பெறுவதற்கு அதில் நன்கு பயிற்சி பெற்ற நிபுணர்கள் தேவை. போதிய பயிற்சியற்றவர்கள் இத்தகைய சிகிச்சையைச் செய்ய முயற்சித்தால் முகத்தின் மிருதுவான தன்மை கெட்டு, மயிர்ப் பைகள் உள்ள பகுதிகளில் சிறு சிறு தழும்புகள் ஏற்பட்டு, தோல் தடித்து அழகற்றதாகி விடும்.

மற்றையது — முகம் போன்ற ஒரு சிறிய பிரதேசத்தில் வழக்கத்துக்கு மாறாக முளைத்திருக்கும் ரோமங்களைக் கட்டுப்படுத்தவே இந்த முறையை நாட முடியும்.

கை — கால், மார்பு, உதரம் போன்று பல இடங்களிலும் பரவலாக வளர்ந்துள்ள மயிர்களை அகற்றுவதற்கு இந்தச் சிகிச்சை முறையை நாட முடியாது.

ரோமங்களை அடியோடு அகற்றுவதற்கு நாட்டுப்புற சிகிச்சை முறை ஒன்றும் கூறப்படுகின்றது. அது வருமாறு:-

கால் கிலோ சீனி மற்றும் அரைக் கப் எலுமிச்சைச் சாறு, ஆகியவற்றை அடுப்பில் வைத்துப் பாகு போல் காய்ச்ச வேண்டும். பின் அடுப்பில் இருந்து இறக்கி ஒரு மேசைக்கரண்டி கிளிசரினைச் சேர்த்து ஆறியவுடன் ஒரு பாத்திரத்தில் கொட்டி குளிர்சாதனப் பெட்டியில் வைக்கவேண்டும்.

தேவைப்படும்போது வெளியே எடுத்துச் சூடாக்கி சிறிது கையால் எடுத்து ரோமம் இருக்கின்ற இடங்களில் தடவி தடிப்பான துணியை ஒட்டி, ரோமம் வளர்ந்துள்ள திசைக்கு எதிரான திசைக்குத் துணியை இழுத்து விட்டால் ரோமம் அனைத்தும் துணியோடு வந்துவிடும். இத்தகைய எளிய முறையைக் கடைப்பிடித்தால் பெண்களின் முகம் மற்றும் உடல் பகுதியில் ரோமம் வளர்வதைத் தடுக்கலாம்.

— இவ்வாறு இந்தச் சிகிச்சை முறையில் தகவல் தெரிவிக்கப் பட்டிருக்கின்றது.

## மார்பிலும், உதரத்திலும் உள்ள மயிர்கள்

மார்பிலும், உதரத்திலும் மயிர்கள் நெருக்கமாக வளராவிட்டாலும் அங்குரோமங்கள் தடித்து, நீண்டதாக வளரக் கூடும்.

இவற்றை அகற்றுவதற்கும் மின்னாள்கை அல்லது ரேடியோ டிரிக்கோன்சி முறையே சிறந்தது.

பெண்களைப் பொறுத்தவரை இப்பகுதிகளில் காணப்படும் ரோமங்கள் பொதுவாக வெளியாரின் கண்களில் படுவதில்லையாதலால் இந்த ரோமங்கள் குறித்து அதிகம் அலட்டிக்கொள்ளத் தேவையில்லை.

என்றாலும் விரும்பினால் மயிர்களை முற்றாக அகற்றும் 'கிறீம்கள்' மூலமோ அல்லது 'ஷேவிங்' மூலமோ அவ்வப்போது இந்த ரோமங்களை அகற்றலாம்.

ஆனால் 'ஷேவிங்' செய்தால் அந்த இடங்கள் தடித்து ரோமங்கள் வளர்வது தூண்டப்படும் என்பதைக் கவனத்தில் கொள்ளவேண்டும்.

## கால், கைகளில் காணப்படும் மயிர்கள்

பெண்களின் கால், கைகளில் காணப்படும் ரோமங்களை இரண்டு வகைப்படுத்தலாம்.

-கவி-

பொதுவாக எல்லாப்பெண்களினதும் கால், கைகளில் மிருதுவான, மென்மையான, நுண்ணிய மயிர்கள் படர்ந்து காணப்படும். இவை மென்மையான தோலுக்கு அழகு சேர்ப்பவை.

அதேவேளை சில பெண்களுக்கு தடித்த—ஆண்களைப் போன்ற— கறுத்த மயிர்கள் அடர்ந்து — பரட்டையாக— வளர்ந்து விடுவதுண்டு.

இந்த இரண்டாம் வகையினரே கை —கால்களில் உள்ள தங்கள் மயிர்களை அகற்ற விரும்புவார்கள்.

இவற்றை அகற்ற மயிர் நீக்கு மெழுகு வகைகளையோ அல்லது கிறீம் வகைகளையோ பயன்படுத்தலாம்.

ஆனால் அத்தகைய பொருள்கள், வழக்கமாக கை, கால் தோலுக்கு அழகு சேர்க்கும் மிருதுவான மயிர்களையும் சேர்த்து அழித்து விடும் என்பதை நாம் கவனத்தில் கொள்ளவேண்டும்.

## மருந்துகளால் ஏற்படுபவை

பெண்களில் வழக்கத்துக்கு மாறாக சில உடற்பிரதேசங்களில் ரோமங்கள் வளர்வதற்கு வேறு சில காரணங்களும் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றன.

பெண்கள் வேறு சில நோய்களுக்காக எடுக்கும் மருந்துகளும் ஆண் தன்மையை வெளிப்படுத்தும் ஓமோன்களை அவர்களின் உடல்களில் சுரப்பதற்கு தூண்டி விடுவதாக மருத்துவர்கள் கூறுகின்றார்கள்.

இத்தகைய மருந்துகளைப் பயன்படுத்தும் காலங்களில் அப்பெண்களுக்கு வழமைக்கு மாறான இடங்களில் மயிர்கள் முளைக்கத் தொடங்குகின்றன; சில காலத்தில் அதன் வளரும் வேகம் அதிகரிக்கலாம்.

குறிப்பாக கர்ப்பிணிப் பெண்களுக்குக் கொடுக்கும் சில மருந்துகள் இத்தகைய வெளிப்பாடுகளைக் காட்டக் கூடும்.

என்றாலும் தற்காலத்தில் இத்தகைய மருந்துகளை சிபாரிசு செய்வதில் மருத்துவர்கள் ஒன்றுக்குப் பல தடவைகள் எச்சரிக்கையாக இருக்கிறார்கள்.

இத்தகைய மருந்துப் பாவனை நிறுத்தப்பட்டதும், வித்தியாசமான இடங்களில் —வழக்கத்துக்கு மாறாக— ரோமங்கள் முளைப்பது முற்றாக நின்றுவிடுவதும் அவதானிக்கப்பட்டிருக்கின்றது.

குறிப்பாக பெண்களைப் பொறுத்தவரை மிகச் சிறிய வீதத்தினரே இவ்வாறு வழமைக்குமாறான இடங்களில் —உடற்பகுதிகளில் — தேவையற்ற மயிர்கள்—முளைப்பதால் ஏற்படும் பிரச்சினைக்கு ஆளாகின்றார்கள்.

இந்தப் பிரச்சினை—

ஆண்பால் தன்மையை வெளிப்படுத்தும் தடிப்பான குரல், முகப்பருக்கள், முலைகள் பருக்காத நிலை, முஷ்டியானதேக அமைப்பு, தலைமுடி குறைதல் போன்றவற்றுடன் சேர்ந்து சில பெண்களுக்கு ஏற்படுவதும் அவதானிக்கப்பட்டிருக்கின்றது.

---

## ஒவ்வாச் சுழிக்கிடையே!

இன்று பூரணை.
நிலவெழுந்து ஒளிசிந்தி
எனை அழைத்தது.
யன்னலில் முகம் புதைத்து
அழுதேன் நான்.

அழகிய வெண்ணிலவே,
உன்னுடன் கூடிக் களிக்க
ஒரு காலம்
வரய்த்திருந்தது நமக்கு.
ஒளி ஒழுகும் அந்நாளில்
நெடு நேரம் சம்மண
மிட்டிருந்து
பல கதையும் பேசியிருப்போம்.

மிக மகிழ்வோடே
ஆனந்தப் புன லாடியிருப்
போம்.
தெருவழியே
அன்பூறும் பாடலிசைத்து
உலாவியிருப்போம்.

திடீரென
நம்மை உருக்குலைக்கும் ஊழி
பிறந்திட
காலம்
விழுந்திருக்கிறது துன்பச்
சுழிக்குள்.
ஊழியின் சாபத்தில் சிக்கி
நமது பூமி ஒடுங்கியிருக்கிறது
ஒரு நாயைப்போல.
அதன் மூச்செழுந்து
ஆங்காங்கே தீ மூட்டி
யிருக்கிறது.
பச்சை வயல்களின் மீது
உயிர் கருகும் நாற்றம் சுமந்து
காற்றலைகிறது வாசல்
தோறும்.

கணத்துக்குள்
மகிழ்வின் சுவடழிந்து போன,
நீறெழும் சாலைகளில்
துயரத்தின் பாடலே நிறை
கிறது.

புலன் விறைத்துப் போய்
மனிதர்கள் துயின்றிருக்
கிறார்கள்,
பிரமையென,
வாழ்க்கை எதிர் கொள்கிறது
நாள்களை.

நானும் கட்டுண்டிருக்கிறேன்
இந்தச் சுழிக்குள்,
வெளியே வருவதற்கு அனுமதி
யில்லை,
என் செய்வேன் நிலவே!
புலனறுந்து இங்கே
பிணக் குழிக்குள் கிடக்கும்
நான்.

-சு. சங்கிலி குமாரன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முதலாவது அத்தியாயம்

அவன் ஒரு பிரபல பத்திரிகை அலுவலகத்தில் ஆசிரியர் குழுவில் இருந்தான். இரவில் இயந்திரங்கள் பிரதிகளை அடித்துத் தள்ளிக்கொண்டிருக்கும் வேளை அவற்றை வபசித்து ஒப்புதல்அளிப்பது அவன் கடமை.

பத்திரிகைத் துறையில் இருப்பவர்களின் மனம் எதையாவது தேடிக் கொண்டிருக்கும் — சாதிக்கத் துடிக்கும் — கட்டில் அடங்காது. இதற்கு அவன் விதி விலக்கு அல்லன்.

அவன் விரும்புவதெல்லாம் அவசர உலகினில் ஆறுதலான ஒருபடகுப்பயணம். அச்சு இயந்திரங்களின் வேகத்தை விடக் கடுமையாகச் செயற்பட்டுப் பழகிய அவன் வாழ்வில் உல்லாச ஆசைகள் புகுவதில் தவறேது?



இரவு பத்தரை மணியளவில் கரங்களில் தவழத்தொடங்கும் முதல் பிரதிகளின் பக்கங்களில் அவன் கண்கள் எதையோ தேடிக்கொண்டிருக்கும். அன்று அவன் கண்ணில் அந்த விளம்பரம் பட்டுவிட்டது.

வகைப்படுத்தப்பட்ட விளம்பரப் பகுதியில் வெளியாகும் நூற்றுக்கணக்கான சிறிய விளம்பரங்களில் அவன் தேடும் படகு ஒன்று தென்பட்டது. $13\frac{1}{2}$ அடி நீளமான பாய்மரப் படகு அது. சிறிது திருத்த வேலைகளுக்கு இடம் உண்டு. விலை மலிவு என்றது அந்த விளம்பரம். புயல் போலப் புகுந்தது ஆசை மனதிலே.

சுமார் 250 மைல் நீளமான 'ஈரி' (Erie) ஏரித் தென் கரையோரம் அமைந்துள்ள கிளெவ்லான்ட் அவனது நகரம். ஏரிக்கு வடக்கே கனடாவும், தெற்கே ஐக்கிய அமெரிக்காவும் பரந்து கிடக்கின்றன.

இவ்வேரியிலே படகுவிடும் ஆசை எதிலே போய் எப்படி முடியும் என அவன் அறிந்திருந்தானோ? ஆனால் மனம் அவசரப்பட்டது. இந்தப்பத்திரிகை நாளை விடிந்து வாசகர் கரங்களை எட்டினால் படகு பறிபோய் விடலாம். ஏரிக் கரை ஓரம் வாழும் உல்லாச அமெரிக்கர்கள் விட்டுவைப்பார்களா இப் படகை?.

உடனே தொலைபேசியில் தொடர்பு கொண்டான். மறுநாள் காலை பத்திரிகைகள் வீதிக்கு வரும்போது தான் படகைப் பார்த்துவிடும் வகையில் ஒழுங்குகளைச் செய்து விட்டான்.

படகில் பாரிய திருத்த வேலைகளைச் செய்யவேண்டிய நிலைமை. எனினும் அவனுக்கும் மனைவிக்கும் இரண்டு பிள்ளைகளுக்கும் அளவான உல்லாசப் படகு எனக் கனவு கண்டான். 30 வருடங்கள் பழமையான அப் படகு சொந்தக்காரன் வீட்டு முற்றத்தில் குப்புறக் கிடந்தது. 106 அமெரிக்க டொலர்களுக்கு அப்படகை வாங்கத் தீர்மானித்தான்.

> ஒரு சிறிய பாய் மரப்படகில் அமெரிக்காவிலிருந்து அத்திலாந்திக் சமுத்திரத்துக்குக் குறுக்கே 3 ஆயிரத்து 200 மைல் தூரத்தை தனியாக கடக்க முயன்ற ஓர் அதிசய மனிதனின் உண்மைக் கதை இது. அவன் வெற்றி பெற்றானா? உயிர் தப்பினானா?
>
> விறுவிறுப்பான இந்தச் சம்பவத் தொடரின் இறுதியில் அதற்குப் பதில் கிட்டும்.

இரண்டு தினங்கள் கழித்து அவனும் மனைவியும் சென்று படகை வாங்கிவந்தார்கள். இத்தனை காலம் அனுபவித்த சுகத்தை இயலாமை — முதுமை — காரணமாக விற்ற அத் தம்பதியர் கண்ணில் நீர்த்துளிகள் திரண்டன. படகைச் செல்லமாகத் தட்டி விடை கொடுத்தனர் அவர்கள்.

உவகையுடன் வீடு வந்து சேர்ந்த படகு அவனது கராஜ்ஜைத் தனது இடமாகக் கொண்டது. அங்கே அன்று முதல் ஓய்வு கிடைக்கும் போதெல்லாம் தனது 300 டொலர் திருத்த வேலைத் திட்டத்தைச் செயற்படுத்தத் தொடங்கினான் அவன்.

படகில் அவன் கைபடாத ஓர் அங்குலம் கூட இல்லை எனலாம். நுணுக்கமாக ஆராய்ந்து, அறிந்து அதன் பலத்தை — பலவீனங்களை உறுதி செய்துகொண்டான்.

சில மைல்கள் அகலமான கிளாலிக் கடலேரி அனைவரின் மனங்களிலும் இருந்து மறைந்திருக்காது. அதற்குள் இறங்கும் படகொன்றின் அளவே இது இருக்கும். இயந்திரங்கள் ஏதும் இல்லாமல் இதமாகக் காற்றோடு காற்றாக பாய்கட்டிப் பயணம் செய்ய நினைக்கிறான் இவன். அதுவும் பலநூறு மைல்கள்.

பூநகரிப் பாதையில் நெரிசல் நெருக்கடி தாங்காமல் ''கிளாலியில் இருந்து ஞானிமடத்துக்குப் படகு செல்கிறதாம்'' என்று பறந்து வந்தவர்கள், கடலில் இறங்கியதும் இயந்திரப் படகிலேகூட சமாளிக்க மாட்டாமல் கலங்கினார்கள். படகின் ஆட்டம், அலைகளின் அகோரம் எல்லாம் முதன் முதலில் கடலில் இறங்கியவர்களை ஏங்க வைத்திருக்கும். இன்றுதான் இப்பாதையில் கடைசிப் பயணம் என உறுதி பூண்டவர் பலர்.

ஏன்? பூநகரியில் இக்கரையில் புறப்பட்ட பாதை அக்கரை சேரும்வரை அந்தச் சில நிமிடங்கள் நெஞ்சைப் பிடித்தபடி கலங்கி நின்றவர்களே உண்டு. நிலைமைகள் மாறி கிளாலியே பாதை என்று வந்துவிட்டபோது நாம் சந்தித்த பல உல்லாச அனுபவங்களுக்கும் குறைவில்லை; பயங்கரங்களுக்கும் குறைவில்லை.

சிறிய வயதிலே படகிலே செல்ல ஆசை. சந்தர்ப்பம் கிடைப்பது இல்லை. கிடைத்தாலும் நீந்தத் தெரியாத பயம். ஆனால் தவிர்க்க முடியாமல் வந்தது வாய்ப்பு கிளாலியில்.

வயோதிபர் முதல் சிறு குழந்தைகள் வரை கிளாலி அனுபவம் பலரையும் சந்தித்திருக்கிறது. இது வாழ்க்கையில் ஒரு வாய்ப்பு அல்லவோ? படகு புறப்படும்; ஆட்டம் போடும்; தண்ணீர் அடிக்கும்; இயந்திரம் கோளாறு பண்ணும்; காற்று கவிழ்க்கத் துடிக்கும்; இளசுகள் துள்ளும் இனிய கடல் அனுபவம், 3 மணி நேரம் மூச்சைப்பிடித்தால் போதும்.

இவ்வனுபவத்தை அத்திவாரமாக வைத்து அனைவரும் இந்த அமெரிக்கருடன் கடலில் இறங்கினால் நிலைமைகள் தெளிவாகப் புரியும். அவனது படகு அருகேயுள்ள ஏரியில் இறக்கப்பட்டது.

விடுமுறை கிடைக்கும் போதெல்லாம் அவனது குடும்பம் உல்லாசமாக படகில் புறப்படும். படகு சிறிது தூரம் ஏரியில் சென்று திரும்பிவிடும். அனுபவம் அதிகரிக்க, அதிகரிக்க பலமைல் நீண்ட பயணங்கள் என்று அவர்களின் உல்லாசம் விரிவடையத் தொடங்கியது. தேவைக்கு ஏற்ப படகும் படிப்படியாக வடிவமைக்கப்பட்டு வந்தது. 5 ஆண்டுகள் இனிமையுடன் கழிந்தன,

1964 இல் அருமையான அழைப்பொன்று அவனது நண்பனிடம் இருந்து கிடைத்தது. உல்லாசமான ஒரு கடற் பயணம். அதுவும் அந்த நண்பனின் 25 அடி நீளமான உல்லாசப் பாய்மரத் தோணியில்!

அமெரிக்காவில் இருந்து அத்திலாந்திக் சமுத்திரத்துக்கு குறுக்கே சென்று இங்கிலாந்தை அடையும் முயற்சி அது. ஆளுக்கு ஆள் துணையாக 3200 மைல் நீளமான— பல மாதங்கள் பிடிக்கும் ஆழ்கடற் பயணம் அது. என்னதான் வசதிகளும், துணையும் இருப்பினும் இதற்குத் துணிவானா மனிதன்?

## இது ஓர் உண்மைச் சம்பவம்

கனவிலும் நினைக்காத இந்தக் சேள்வி — ஒரு பெரும் கடற்பசியை இவன் மனதிலே தூண்டிவிட்டது. இவன் முயற்சிகள் எதற்கும் குறுக்கே நிற்காது உற்சாகம் கொடுக்கும் மனைவி இதற்கும் ஒப்புதல் அளித்து விட்டாள். பிள்ளைகள் துள்ளிக் குதித்தார்கள். இவனின் இந்தப் பயணம் தங்கள் பத்திரிகைக்குப் பெருமை என்றே அவனது பத்திரிகை நிறுவனமும் நினைத்து விட்டது, மகிழ்ச்சி பிடிபடவில்லை.

1965 இன் நடுப்பகுதியில் நண்பர்கள் இருவரும் புறப்படத் திட்டம் போட்டார்கள். John Masefield என்ற பிரபல ஆங்கிலக் கவிஞரின் Sea Fever என்ற ஆங்கிலக் கவிதை அவனின் மன நிலையினைப் பிரதிபலித்தது. கிளாலியிலும் இக் கவிதையை ரசித்தவர்கள் உண்டு.

''நான் மீண்டும் கடலில் இறங்கிடல் வேண்டும்!
கடலின் — வானத்தின் — தனிமை என்னைத் தாலாட்டும்!
I must down to the seas again —to the lonely sea and the sky,
நான் வேண்டுவதெல்லாம் உயரமான ஒரு படகு — கப்பல்
அதனை வழிகாட்டும் ஒரு வானத்து நட்சத்திரம்.
And all I ask is a tall ship and a star to steer her by,
அலைகளின் உதைப்பும் காற்றின் பாடலும்
வெண்ணிறப் பாயின் ஆட்டமும் குலுக்கலும்!
And the wheel's kick and the wind's song and the white sail's shaking
கடல் முகப்பில் மூடுபனி கண்ணை மறைக்கும்!
இருளின் ஊடே விடியல் மெல்ல தெளியும்!
And a grey mist on the sea's face and a grey dawn breaking.
நான் மீண்டும் கடலில் இறங்கிடல் வேண்டும்!
பொங்கிடும் கடல் இயற்கையின் காலத்து அழைப்பு இது
I must down to the seas again, for the call of the running tide
இது ஒரு தவிர்க்க முடியாத தீவிர அழைப்பு!
இது ஒரு மறுக்க முடியாத தெளிவான அழைப்பு!
Is a wild call and a clear call that may not be denied;
நான் வேண்டுவதெல்லாம் காற்றுவீசும் நாள்கள்!
வெண் பஞ்சுக் குவியல் முகில்கள் மேலே பறக்கும்!
And all I ask is a windy day with the white clouds flying,
விசிறி எறியும் நீர்த்துளிகள்—சொரியும் வெண் நுரைகள்
கடற் பறவையின் கத்தலும் பாட்டும்!
And the flung spray and the blcwn spume and the sea - gulls crying.
நான் மீண்டும் கடலில் இறங்கிடல் வேண்டும்!
அலையும் நாடோடி போல—சுதந்திரம் அலைகளில் மிதக்கும்!

**- மு. சிவநேசன் -**

I must Dcwn to the seas again to the vagrant gipsy life
நான் போகும் வழி—கடற்பறவையின்—திமிங்கிலத்தின் வழி!
அங்கே காற்று வீசிக் கத்திபோலக் கிழிக்கும்!
To the gull's way and the whale's way where the wind's like a whetted knife.
நான் வேண்டுவதெல்லாம் ஓர் இனிய பயணக் கதை!
தொடரும் நண்பன் அதை சிரித்துச் சிரித்துச் சொல்வான்,
And all I ask is a Merry yarn from a laughing fellow—rover.
தூக்கம் என்னைத் தழுவும் — கனவுகள் மனத்தே விரியும்!
நீண்ட பயணமும் ஒரு நாள் முடியும் — மனம் தேடும்!
And quiet sleep and a sweet dream when the long trick's over.

(இது ஆண்டு 11 வகுப்புக்கு ஆங்கில பாடத்தில் இடம் பெறும் கவிதையாகும்.)

சில வாரங்கள் இனிதாக கற்பனையில் கழிந்தன. பாதை கடினமானது என்பதனையும் அவன் உணராமல் இல்லை. சில ஆயத்தங்களை அவன் செய்துகொண்டிருந்த [illegible] செய்தி எட்டியது. இவன் மன [illegible] த்து விட்டான்.

(தொடரும்)

## இந்த வார...

(VIII ஆம் பக்கத் தொடர்)

மாக நடந்து கொள்ளல் வேண்டும். ஏழரைச்சனி நடப்பதனால் கஷ்ட நஷ்டங்கள் வரத்தான் செய்யும். கொஞ்சம் பொறுமையாக இருத்தல் வேண்டும். இராகு, கேது மாற்றங்கள் மனச்சஞ்சலங்களைக் கொடுக்கும். தந்தை வழியினருக்கு நல்லதல்ல. உடல்நிலை பாதிக்கப்படலாம். சனித் தொல்லையால் வைத்தியம் செய்துவர வேண்டும். சொல்வாக்குப் பிழைத்து செல்வாக்குக்கு சற்று மங்கல் ஏற்படும். கலகம் பிறந்து நியாயம் பிறக்கும்.

**மீனம்:** நீங்கள் ஒரு சுமைதாங்கி. அதிக வேலைப்பளு உடைய நீங்கள் சற்று நிதானமாகச் செயற்படவேண்டும், கை, கால்களில் காயங்கள் வரலாம். கொடுக்கல் வாங்கலில் பகைமை ஏற்படலாம். ஏழரைச் சனியன் தாக்கத்தால் அவதிகள் மனக்குமுறல்கள் ஏற்படச்செய்யும். பிரயாணங்களைத் தவிர்த்துக்கொள்ளுங்கள். குடும்பத்தில் அதிக வைத்தியச் செலவுகளும்— திருப்தியின்மையும் ஏற்படும். தெய்வ வழிபாடு முக்கியம்.

## பிரிவெனும்....

(V ஆம் பக்கத் தொடர்)

படுத்த வல்லன.

பிரிவு, மேற்கூறப்பட்டவாறு பிரச்சினையாகும் பொழுது, அது பல்வகைப்பட்ட உளவியல் தாக்கங்களாக, நோய்களாக வெளிப்படுகின்றது. இளம் பராயத்தில் பெற்றோரைப் பிரிந்தவர்களில் ஒரு தொடர்ச்சியான பதகளிப்பு ஆளுமை நிலவுவதை அவதானிக்கலாம். எப்பிராயத்திலும் ஏற்ப்டுகின்ற அன்புக்குரிய, சடுதியான ஒரு இழப்பு மனச்சோர்வை ஏற்படுத்த வல்லது. இப்படியான இழப்புகளின் வருந்துதல்கள் முடிவு பெறாமல் அல்லது மிகைப்படுத்தப்பட்டு, கழிவிரக்க நோயாக வடிவம் பெறுவதும் கவனிக்கத்தக்கது. உடல் உறுப்புக்களின் — தொழிற்பாட்டின் இழப்பும் இவ்வகைப்பட்ட தாக்கங்களை ஏற்படுத்த வல்லது. ஒருவரது பரம்பரையலகுகள் சாதகமாக உள்ளபோது, பிரிவு உண்டாக்குகின்ற சடுதியான நெருக்கீடு உளமாய தாக்கமாக அல்லது உளப்பிளவு நோயாகத் தோற்றம் பெறலாம். அடிமனதில் புதைந்துபோன பிரிவு சம்பந்தமான எண்ணக்கருக்களின் முதிர்வின்மை ஆளுமைக் கோளாறுகளாக வெளிவரலாம்.

அடக்கி ஒடுக்கப்பட்ட, பகிர்ந்து கொள்ள முடியாமல் போன பல, முழுமையடையாத பிரிவுத் துயர்கள் மெய்பாட்டு நோய்களாக வெளிப்படுவதின் முக்கியத்துவம் இப்பொழுது உணர்ந்து கொள்ளப்பட்டுள்ளது. வயதானவர்களில் பிரிவுத் துயரின் தாக்கங்கள் அவர்களின் நோயுறுநிலையைத் துரிதப்படுத்தும். வெறுமையெனும் கூட்டில் தனிமையில் வாழுகின்ற முதியவர்கள், திடீரென்று அதிகரிக்கின்ற அறளை பெயர்வின் குணங்குறிகள் போன்றவை முதியவர்களின் உளவியல் தாக்கங்களாகி கவனம் பெறுகின்றன.

பிரிவின் துயர்தீர வருந்தி, அழுது தீர்த்து, பின்பு தேறுதல் ஒருவரினது தொடர்ச்சியான வளர்ச்சிக்கு நல்லது என்பதைப் பல இடங்களில் பார்த்தோம். வாழ்வின்புதிய இலக்குகளைத் தேடுதலும், பிரிவின் துயர்தீர்க்கும் இன்னுமொரு மருந்தாக அமையும். புதிய வாழ்வு முறை, புதிய சவால்கள், புதிய இலட்சியங்கள், புதியநோக்குகள் எனவாழ்வில் இலக்குகள் விரிவடைந்து—பிரிவின் பலத்தோடு—வளர்ச்சி நடைபெற வேண்டும்.

முற்றும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜெயலலிதாவின் உயிர்த்தோழியான சசிகலா 'நோயாளி' நாடகத்தைக் கைவிட்டது ஏன்?

## உடன் பிறவா சகோதரிக்கு அ.தி.மு.கவில் முக்கிய பதவி?

### நாடகங்கள் பல விதம்

இதுவரை நீதிமன்றங்களுடன் 'நோயாளி' விளையாட்டு விளையாடி வந்த — ஜெயலலிதாவின் உயிர்த் தோழியும் உடன் பிறவா சகோதரியுமான — சசிகலா தமது விளையாட்டை வேறு 'லைனுக்கு' மாற்ற முடிவு செய்து விட்டார்.

விளக்க மறியலில் இருந்து நீதிமன்றங்களுக்கு வரும் போதெல்லாம் (அல்லது கொண்டு வரப்படும் போதெல்லாம்) 'ஸ்ரெட்ச்சரில்' கண்ணைமூடி மயங்கிய நிலையில்( ? ) கிடக்கும் சசிகலா —

நீதிமன்றம் நியமித்த டாக்டர்களிடம் தற்போது உண்மை பேசி, அவர்கள் கேட்கும் கேள்விகளுக்கு எல்லாம் ஒத்துழைப்புடன் பதில் கூறி, நீதிமன்ற விசாரணைக்குத் தயாரான நிலையில் தனது உடல் நிலைமை உள்ளது என்று காட்டிக் கொண்டது அவர் தமது 'லைனை' மாற்ற முடிவு செய்து விட்டார் என்பதைத்தான் காட்டுகின்றது.

1995 முற்பகுதியில் சட்டமன்ற, நாடாளுமன்றத் தேர்தல்களில் ஜெயலலிதாவின் அ. தி. மு. க. படுதோல்வி அடைந்த போது சசிகலாவுடன் ஜெயலலிதா வைத்திருந்த 'பிரிக்க முடியாத' கூட்டே அதற்குக் காரணம் என்று கூறி கட்சியின் சகல மட்டங்களும் கிளர்ந்தெழுந்தன.

இந்த அதிருப்தி நிலையை முறியடித்து கட்சியை தனது முழுக்கட்டுப்பாட்டில் வைத்திருக்க வேண்டுமானால் சசிகலாவுடனான உறவை துண்டிக்க வேண்டியது அவசியம் என்பதை உணர்ந்தார் ஜெயலலிதா.

அதே சமயம் சசிகலாவுடனான உறவை இழக்கவோ, அவருடன் சேர்ந்து தனது ஆட்சிக்காலத்தில் சுருட்டிக் கொண்ட பல நூறு கோடி ரூபா பணம் மற்றும் சொத்துக்களை இழக்கவோ ஜெயலலிதா தயாராக இருக்கவில்லை.

எனவேதான் கட்சிக்குள் தமக்கு இருக்கும் ஆட்சேபப் போக்கு அடங்கும் வரை — சசிகலாவுடன் உறவு துண்டித்தாகி விட்டது என்று உலகுக்குக் காட்டும் நாடகத்தை 'ஜெயலலிதா — சசிகலா அண்ட்கோ' அரங்கேற்றியது.

அதே சமயம் பல்வேறு ஊழல் சங்கதிகளுக்காக ஒரு வருடத்துக்கும் கூடிய காலம் விளக்க மறியலில் சிக்கிக் கொண்ட சசிகலா, முதலில் மறியலில் இருந்து வெளியே வரவேண்டும் என்ற நோக்கத்துக்காக நீதிமன்றங்களில் 'நோயாளி' நாடகத்தைத் தனியாக அரங்கேற்றினார்.

இப்போது காட்சிகள் மாறிவிட்டன; முன்னைய சூழ்நிலைகள் மாறிவிட்டன. எனவே நாடகத்தையும் மாற்றுவதற்கு சகோதரிகள் குழு தயாராகி விட்டது.

'நோயாளி' நாடகத்தால் பிணை அனுமதி கிடைத்ததை அடுத்து உயிர்தோழி விளக்கமறியலில் இருந்து போயஸ் தோட்டத்துக்கு மீண்டு விட்டார். அவ்வப்போது நீதிமன்றத்தில் ஆஜராக வேண்டும் என்பதைத் தவிர, இனி நீண்ட பிரிவு இருக்காது என்ற நம்பிக்கையில் இருக்கின்றார் ஜெயலலிதா.

உயிர்த்தோழியைச் சேர்ப்பது கட்சிக்கு உயிர் போகும் விடயம் என்று அடம் பிடித்த — முன்னாள் மந்தி(ரி)களும் இப்போது கட்சியில் இல்லை; உதறியாகி விட்டது.

இந்த மாஜி மந்திரிகள் கூட்டிய அ.தி.மு.க. பொதுக்குழு செல்லாது என்று உயர் நீதிமன்றமும் அறிவித்திருக்கின்றது.

அத்துடன் தமிழக சட்டமன்ற சபாநாயகர் பி.ரி.ஆர். பழனிவேல்ராஜன் கடந்த வாரம் வழங்கிய தீர்ப்பு ஒன்றும் ஜெயலலிதா அணியையே உண்மையான அ.தி.மு.க. என்று அங்கீகரிப்பது போல அமைந்து விட்டது.

### ஜெயலலிதாவின் நம்பிக்கை

இந்தக் காரணங்களினால்- கட்சியும் தன்னைக் கை நழுவி விட்டுப்போகாது என்றும் —



ஜெயலலிதா

உயிர்த்தோழியை மீண்டும் பகிரங்கமாக அரவணைத்துக் கொள்வதை எதிர்க்கும் அணி கட்சிக்குள் 'அடங்கிப்' போய்விட்டது என்றும் —

ஜெயலலிதா கருதுகின்றார்.

எனவே சசிகலாவுடனான கூட்டுக் கம்பனிக்கு 'புது வாழ்வு' கொடுக்கலாம் எனக் கருதுகின்றார் ஜெயலலிதா.

நீதிமன்றத்தின் பிணை அனுமதி கிடைத்ததும் ஒரு சில நாள்கள் 'நடிப்புக்காக' சசிகலா ஆஸ்பத்திரியில் தங்கியிருந்த போது, ஜெயலலிதாவும் சசிகலாவும் தொலைபேசி மூலமும் நம்பிக்கையான ஆள்கள் மூலமும் தகவல்களைப் பரிமாறி தமது எதிர்காலத் திட்டங்களைத் தயாரித்துக் கொண்டனர்.

### வேதா நிலையம் வேக நிலையமானது

அதனையடுத்தே —

ஒரு வெள்ளிக்கிழமை நாளில் — மதிய வேளையில் — போயஸ் தோட்டத்தில் உள்ள 'வேதா நிலையத்தின்' உள் வாயிலில் வேத மந்திரங்கள் ஒலித்துக்கொண்டிருக்க, ஆனந்தத்தோடு தோழி ஜெயலலிதா ஆரத்தி எடுக்க, மீண்டும் 'கிரகப் பிரவேசம்' செய்தார் சசிகலா.

போயஸ் தோட்ட இல்லத்தில் முன்பு நிழல் முதல்வராகச் செயற்பட்ட சசிகலா, மீண்டும் அங்கு கிரகப் பிரவேசம் செய்ததும் தன் அதிகார மையத்தையும் மீளக் கைப்பற்றி 'சக்தி' மிக்கவரானார்.

சசிகலா நுழைந்த சில நிமிடங்களிலேயே 'வேதா நிலையம்' திரும்பவும் 'வேக நிலையமாக' மாறிவிட்டது.

சசிகலாவின் இப்போதைய திட்டம் என்னவென்பது குறித்துத் தமிழகச் செய்தியாளர்கள் பலரும் தகவல்களை வெளியிடத் தொடங்கியுள்ளனர்.

அவர்கள் யாவரும் கூறுவது சசிகலாவின் இலக்கு கட்சியின் தலைமைப் பதவி தான்; இப்போதைய திட்டம் ஜெயலலிதாவிற்குப் பின்னர் கட்சியின் தலைமைப் பதவியைப் பிடிப்பது தான்.

முன்பு அவரின் நோக்கம் பணம். வேண்டாம் வேண்டாம் என்று கூறுமளவுக்குப் பணம் சேர்த்தாகி விட்டது. அதனை வைத்துக்கொண்டு ஆட்சியைக் கைப்பற்றுவது தான் அடுத்த இலக்கு.

அ. தி. மு. கவின் அடுத்த கட்டத்தில் இருந்த பல முக்கியமானவர்கள் வெளியேறி விட்டார்கள். எஞ்சியிருக்கும் நெடுஞ்செழியன், சேடப்பட்டி முத்தையா போன்றோர் பெரும் தொல்லை தரக் கூடியவர்கள் அல்லர்; அடங்கிப் போகக்கூடிய சாதுக்கள்.

ஆகவே கட்சியின் இரண்டாம் மட்டத்தில் இப்போது ஒரு வெறுமை. அந்த இடத்தில் தங்கள் குடும்பத்தினர் ஆக்கிரமிக்க வேண்டும் என்பதுதான் சசிகலா குழுவின் செயல் திட்டம்.

சசிகலா சந்தித்த பிரச்சினைகள் இன்னொருவருக்கு ஏற்பட்டிருந்தால் சொத்து, சுகம் அனைத்தையும் இழந்தாவது நிம்மதியைத் தேடியிருப்பார். ஆனால் இந்தப் 'பரிதாபத்துக்குரிய தமிழ்ப் பெண்' தனக்கு வந்த சோதனைகளையே சாதனையாக்கிக் கொள்ள முடிவு செய்து விட்டார்.

### சரித்திரம் திரும்புகிறது

எம். ஜி. ஆரின் ஆட்சிக் காலத்தில் இவ்வாறு சர்ச்சைக்குரியவராகத் திகழ்ந்தவர் ஜெயலலிதா. எம். ஜி. ஆரால் சில தடவைகள் ஒதுக்கி வைக்கப்பட்டு பின்னர் சேர்த்துக்கொள்ளப்பட்டார்.

**தொகுப்பு: சிவகாமி**

எம். ஜி. ஆர் மறைவுக்குப் பின்னர் அவரின் அரசியல் வாரிசாகவும் விஸ்வரூபம் எடுத்தார்.

அதேபோல ஜெயலலிதாவின் காலத்தில் சர்ச்சைக்குரியவராகத் திகழ்கின்றார் சசிகலா. ஜெயலலிதாவால் சில காலம் ஒதுக்கியும் (?) வைக்கப்பட்டார்.

எம். ஜி. ஆருக்குப் பின்னர் ஜெயலலிதா போல, ஜெயலலிதாவுக்குப் பின்னர் சசிகலா வருவாரா என்பதற்கு காலம்தான் பதில்கூற வேண்டும்.

எம். ஜி. ஆர் காலத்தில் ஜெயலலிதாவுக்கு கட்சியில் முக்கிய இடம் எம். ஜி.ஆராலேயே வழங்கப்பட்டது. அ. தி. மு. கவின் கொள்கை பரப்புச் செயலாளராக ஜெயலலிதா நியமிக்கப்பட்டார்; இராஜ்ய சபை எம். பியாக்கப்பட்டார்.

அதே போன்று இப்போது தமது தோழிக்கும் கட்சிக்குள் முக்கிய இடமளிக்க ஜெயலலிதா தயாராகிவிட்டார். அனேகமாக சசிகலாவுக்கும் கொள்கை பரப்புச் செயலாளர் பதவி வழங்கப்படும் எனத் தெரிகின்றது.

அவரின் அரசியல் பிரவேசத்துக்கான ஆரம்ப வேலைகள் தொடங்கி விட்டன. அதன் முதல் கட்டமாக கட்சியின் கொள்கை பரப்புச் செயலாளரான செல்வேந்திரன் ஓரம் கட்டப்படுகின்றார்.

இனியும் அரசியலில் நிழலாக இருந்து பயனில்லை; நிஜமாக மாறவேண்டும் என்ற உண்மை சசிகலாவுக்குப் புரிய ஆரம்பித்து விட்டது.

கட்சியில் முக்கிய பொறுப்புக்களை ஏற்று முழு மூச்சுடன் — பகிரங்கமாக செயலாற்றுவதாயின் — அதற்கு நடுவில் நீதிமன்றங்களின் முன்னால் 'நோயாளி' நாடகம் ஆட முடியாது. எனவே நோயாளி வேடத்தைக் கலைக்க முடிவு செய்தார் சசிகலா.



சசிகலா

ஆனால் சசிகலாவுக்கு பெரும் தலையிடி கொடுக்கப் போவது வெளியிலிருந்து வேறு யாருமல்லர். அவரது குடும்பத்தவர்களே என்கிறது ஒரு தகவல்.

சசிகலா மீண்டும் ஜெயலலிதாவுடன் இணைந்து கொண்டாலும் அந்த இணைவில் சசிகலாவின் முக்கிய குடும்பத்தவர்கள் பலர் 'அப்செண்ட்' ஆகியிருப்பது குறிப்பிடத்தக்கது.

சசிகலாவின் சகோதரி வனிதா, முன்னாள் வளர்ப்பு மகன் சுதாகரன், சசிகலாவின் சகோதரர் தினகரன், ஜெ. ஜெ. டி. வியின் பொறுப்பாளர் பாஸ்கரன் ஆகியோர் சசிகலா குழுவில் இப்போது இல்லை,

இவர்களில் சுதாகரனின் போக்குக் குறித்தே பரபரப்பாகப் பேசப்படுகின்றது;

ஜெயலலிதாவின் ஆட்சிக் காலத்தில் 'உள்ளே' நடந்த பல இரகசியங்கள் சுதாகரனுக்கு அங்குலம் அங்குலமாகத் தெரியும்.

ஜெ. ஜெ. டி. விக்காக அந்நிய செலவாணி மோசடி செய்ததற்காக கைது செய்யப்பட்டு தற்போது பிணையில் விடப்பட்டிருக்கின்றார் சுதாகரன்.

சசிகலா மீண்டும் வேதா நிலையத்துக்குள் நுழைந்த பின்னரும் சுதாகரனும் அவரது மனைவி சத்தியலட்சுமியும், சுதாகரனின் தந்தை விவேகானந்தன், தாய் வனிதா ஆகியோரும் அங்கு செல்லவில்லை; சசிகலாவைச் சந்திக்கவுமில்லை.

''இனிமேல் போயஸ் தோட்டம் பக்கம் போக மாட்டீர்களா?'' — என்று அவரது நண்பர்கள் சுதாகரனிடம் கேட்டனர்.

''தோட்டமா அது? சலவைக்கல் சிறைச்சாலை. முருகன் அருளால் நானும் மனைவியும் அங்கிருந்து, மீண்டு வந்துவிட்டோம். மீண்டும் அங்கு போகமாட்டோம்.—'' என்று பதிலளித்தார் சுதாகரன், தெய்வநம்பிக்கை அதிகமுள்ள சுதாகரன், ஜெயலலிதா — சசிகலா அண்ட் கோவின் ஊழல்களை நேரடியாகத் தெரிந்தவர் என்பதால் நீதிமன்றத்தில் பல உண்மைகளைக் கக்கி, அந்தக் கம்பனியை நீதிக்கு முன்னால் மண் கவ்வச் செய்வார் என சில வட்டாரங்கள் நம்பிக்கை தெரிவிக்கின்றன.

## அரும் மருந்தாகும் வேம்பின் பெருமை

வேம்பிலிருந்து உருவாகும் 123 வகைப்பொருள்கள் பூச்சிகளையும் கிருமிகளையும் விரட்டும் மருத்துவப் பயன்கொண்டவை. சேமிக்கப்படும் தானியங்களைத் தாக்கும் பூச்சிகளை அண்டவிடாமல் செய்ய வல்லன இவை.

பெற்றோலியத்திலிருந்து தயாராகும் பூச்சிகொல்லிகள் கண்டுபிடிக்கப்படாத பலநூறு ஆண்டுகளுக்கு முன்பே இந்தியத்துணைக்கண்ட உழவர்கள் இயற்கையான பூச்சி கிருமி விரட்டிகளை வேப்ப மரத்தின் பழங்கள், இலைகள் ஆகியவற்றில் இருந்து உருவாக்கித் தங்கள் பயிர்களை காத்து வந்தனர்.

கம்பளங்களை பூச்சிகள் அரிக்காமல் காக்க இந்தியக் கிராமங்களில் அவற்றின் மடிப்புகளிடையே உலர் வேப்பிலைகளைக் கொத்தாக வைக்கும் வழக்கத்தைப் பின்பற்றி வந்துள்ளனர்.

இலங்கையில், அரிசி பருப்பு என்பவற்றைச் சேமிக்கும் கிடங்குகளில் அவ்வுணவுப்பண்டங்களை பூச்சி தாக்காமல் இருக்ககளஞ்சியங்களில் வேப்பிலையைப் பரவவிட்டனர்.

மூடைகளில் சேகரிக்கப்படும் தானியங்களுடன் வேப்பிலையையும் கலந்து வைக்கும் பழக்கம் பாகிஸ்தான் பகுதியில் இருந்துள்ளது.

வேம்பின் இலை, கனி, பிண்ணாக்கு ஆகியன மட்டுமின்றி வேப்ப எண்ணெயில் இருந்து உருவாக்கக் கூடிய வேதிப்பொருள்களையும் பூச்சிகொல்லிகளாக பயன்படுத்த முடியும் என்று இன்று அறிவியல் உலகம் நம்புகிறது.

தொகுப்பு - க. கனகராசா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பண்டா-செல்வா ஒப்பந்தம்; 40 வருடங்களின் பின்

இலங்கை இனப்பிரச்சினைக்குத் நியாயமான தீர்வு ஒன்று காணப்படுமா? அது சாத்தியமா? இன்றைய அரசியல் பின்னணி அதற்கு உகந்ததாக உள்ளதா? இன்றைய அரசியல் தலைவர்களிடம் அதற்கான விருப்பமும், திறமையும், அரசியல் சாதுரியமும், சாணக்கியமும் உண்டா?

மக்கள் மனங்களில் ஆவலுடன் இன்று எழும் கேள்விகள் இவை.

சரியாக நாற்பது ஆண்டுகளுக்கு முன்னரும் அப்போதைய மக்கள் மனங்களில் இத்தகைய கேள்விகள் எழுந்தன. அன்றைய் தலைவர்களான அப்போதைய பிரதமர் எஸ். டபிள்யூ. ஆர். டி பண்டாரநாயக்கவும் தமிழர் தலைவர் தந்தை எஸ். ஜே. வி. செல்வநாகயமும் இனப்பிரச்சினையைத் தீர்க்க முயன்றனர்; மனம்விட்டுப் பேசினர்; ஒப்பந்தம் ஒன்றில் கைச்சாத்திட்டனர். பண்டாரநாயக்கா — செல்வநாயகம் ஒப்பந்தம் என்ற அந்தப் பிரபல ஒப்பந்தம் 1957 ஜூலை 26 ஆம் திகதி நள்ளிரவு கைச்சாத்திடப்பட்டது.

இனப்பிரச்சினைக்கான அடிப்படைத் தீர்வாக அமையும் என்று கருதப்பட்ட ஒப்பந்தம் பின்னர் நடைமுறைக்கு வரவில்லை; சிங்களத் தீவிரவாத அரசியலாரின் நெருக்குதலின் பேரில் கிழித்தெறியப்பட்டது.

அதிகாரப் பரவலாக்கத்தின் மூலம் தமிழர் பிரச்சினையைத் தீர்க்கப் போவதாக பண்டாரநாயக்காவின் இளைய புத்திரி சந்திரிகா குமாரதுங்கா கூறும் வேளையில், அவரது அதிகாரப் பரவல் திட்டம் குறித்து சாதக பாதகங்கள் ஆராயப்படும் வேளையில், பண்டா — செல்வா ஒப்பந்தத்தினை முழுதாகப் பார்ப்பது நல்லது; பொருத்தமானதும் கூட.

1957 ஜூலை 26 நள்ளிரவில் கைச்சாத்தான ஒப்பந்த வடிவம் இது:

★ தமிழ் மொழி தேசிய சிறுபான்மையினரின் மொழி என்று உத்தேச சட்டத்தின் மூலம் அங்கீகரிக்கப்பட வேண்டும். தமிழ், வடக்கு, — கிழக்கு மாகாணங்களின் நிர்வாக மொழியாக இருக்கும். அங்குள்ள தமிழ் — பேசும் மக்களல்லாத சிறுபான்மையினருக்கு உரிய வசதிகள் செய்யப்படவேண்டும்.

★ வட மாகாணம் ஒருபிராந்திய சபையாக உருவாக்கப்படும். கிழக்கு மாகாணம் இரண்டு பிராந்திய சபைகளாகப் பிரிக்கப்படும்.

★ இரண்டு பிராந்திய சபைகள் விரும்பின் மாகாண எல்லைக்கு அப்பாற்பட்டேனும் ஒன்றிணையவும் ஒரு பிராந்திய சபை விரும்பின் பிரிந்து கொள்ளவும் நாடாளுமன்ற அங்கீகாரத்தைப் பெற்று அவ்வாறு செய்ய சட்டத்தில் வகை செய்வது. இரண்டுக்கு மேற்பட்ட சபைகள் பொது அக்கறையுள்ள ஒரு விடயத்துக்காக கூட்டாக இணைந்து பணியாற்ற வகை செய்வது.

★ பிராந்திய சபைகளுக்கான அதிகாரங்களை நாடாளு மன்றம் சட்ட ரீதியாக வழங்கும். பின்வரும் துறைகள் உட்பட குறிப்பிட்டதுறைகளில் பிராந்திய சபைகளுக்கு அதிகாரங்கள் வழங்கப்பட வேண்டும் என்று இணங்கப்பட்டது.

விவசாயம், கூட்டுறவு, காணியும் காணி அபிவிருத்தியும், குடியேற்றம், கல்வி, சுகாதாரம், கைத்தொழில் மீன்பிடி, வீடமைப்பு, சமூக சேவைகள், மின்சாரம், தண்ணீர் திட்டங்கள், வீதிகள்.

அதிகாரங்கள் பற்றிய வரை விலக்கணம் சட்ட மூலத்தில் சேர்க்கப்படும்.

★ குடியேற்றத் திட்டங்கள் சம்பந்தமான விவகாரத்தில் தனதுஅதிகாரத்துக்குரிய பகுதிகளில் உள்ள காணிகளைப் பெறுவோரைத் தெரிவு செய்யும் அதிகாரமும், அக் குடியேற்றத் திட்டங்களில் பணி புரிவோரைத் தெரிவு செய்யும் அதிகாரமும் பிராந்திய சபைகளுக்கு உரிய அதிகாரங்களில் அடங்க வேண்டும் என்று இணங்கப்பட்டது.

இப்போதுள்ள கல்லோயா சபை நிர்வகிக்கும் பகுதிகளின் நிலை குறித்து பரிசீலனை செய்ய வேண்டும்.

★ பிராந்திய சபைகள் சம்பந்தமாக உள்ளூராட்சி அமைச்சருக்கு (நகல் சட்டத்தில்) வழங்கப்பட்ட அதிகாரங்களை தேவைப்படும் வேளைகளில் நாடாளு மன்றம் கட்டுப்படுத்தும் விதத்தில் திருத்தம் செய்யப்படுதல் வேண்டும்.

★ மத்திய அரசாங்கம் பிராந்திய சபைகளுக்குத் திரட்சியான நிதி நன்கொடைகளை (Grants) வழங்கும். எந்த அடிப்படையில் அந்த நன்கொடைகள் வழங்கப்படும் என்பது ஆராயப்படும். பிராந்திய சபைகளுக்கு வரிவிதிக்கவும் கடன் பெறவும் அதிகாரம் உண்டு.

★ பிராந்தியசபை உறுப்பினர்களை நேரடியாகத் தெரிவு செய்வதற்கு வகை செய்யப்படும். தேர்தல் தொகுதிகளை உருவாக்க எல்லை நிர்ணய சபையை அமைக்க வகை செய்யப்படும். அந்தந்தப் பிராந்தியப் பகுதியில் உள்ள நாடாளுமன்ற உறுப்பினர்களில் ஒருவரை பிராந்திய சபையின் தலைவராகப் பணி புரிவதற்கு உரிமை வழங்குவது குறித்து பரிசீலனை செய்யப்படும். அரசாங்க அதிபர்களை பிராந்திய ஆணையாளர்களாக்குவது குறித்தும் ஆராயப்படும். பெரிய நகரங்கள், கேந்திர நகரங்கள் மாநகரசபைகள் ஆகியவற்றினை மேற்பார்வை செய்யும் பணியினையும் பிராந்திய சபைகளுக்கு ஒதுக்குவதா என்பது குறித்தும் பரிசீலிக்க வேண்டும்.

— இதுவே ஒப்பந்த வடிவம்.

இனப்பிரச்சினைக்கு வித்திட்டது மொழிப் பிரச்சினையே. ஆயினும், மொழி உரிமைக்கு அப்பாலும் சென்று இரு இனங்களுக்கும் இடைப்பட்ட பல்வேறு பிரச்சினைகளையும் முன்வைத்து அலசி ஆராய்ந்து பேச்சுவார்த்தை நடத்தி ஒப்பந்தம் செய்து கொண்டார் தந்தை செல்வா.

பிராந்திய சபைகள் மூலம் அதிகாரப்பரவலாக்கலுக்கும், தமிழ் மொழி வடக்குக் கிழக்கில் நிர்வாக மொழி அந்தஸ்தைப் பெறுவதற்கும் மேற்படி ''பண்டா — செல்வா'' உடன்படிக்கை ஓர் இடைக்காலத் தீர்வுக்கு வழி வகுத்திருந்தது. வட, கிழக்கு மாகாணங்கள் தமிழ் பேசும் மக்களின் மரபுவழித் தாயகமாகவும் ஏற்று அங்கீகரிக்கப்பட்டு இருந்ததுடன் தாயக ஆள்புல ஒருமைப்பாடும், மாண்பும் உறுதி செய்யப்பட்டும் இருந்தது.

ஓர் இறைமை கொண்ட நாட்டின் அரசுக்கான தமது உரிமைக் கோரிக்கையைத் தமிழ் மக்கள் உறுதியாக நிலை நாட்டியிருந்தனராயினும் தேசிய தனித்துவம் மட்டுமே போதுமானதல்ல! ஆள்புலம் இல்லாத ஒரு மக்கள் சிதறிப் பரவிய ஒரு மக்கள் தொகுதியாகவே இருக்கும்.

எனவேதான் தமிழ் மக்களின் ஆள் புலமாக அவர்களது மரபுவழித் தாயகக் கோட்பாட்டினைத் தந்தை செல்வா படிப்படியாக அறிவுறுத்தி வந்துள்ளார். இத்தீவின் மூவேறு பிரதமர்களுடன் அது குறித்துப் பேசி அது குறித்து அவர்களின் இணக்கத்தை பெற்றார்.

1957 ஜூலை 26 நள்ளிரவில் பிராந்திய சபைகளுக்காகச் செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தமே வடக்கு — கிழக்கு மாகாணங்கள் தமிழ் பேசும் மக்களின் மரபுவழித் தாயகமாக இத் தீவின் பிரதமர் ஒருவரால் ஏற்று அங்கீகரிக்கப்பட்ட முதல் ஒப்பந்த ஆவணமாகும்.

மேற்படி வரலாற்று நிகழ்வின் நாற்பதாவது ஆண்டு நிறைவை இன்று தந்தை செல்வா நினைவாலயத்தில் நன்றியுள்ள தமிழீழ மக்கள் மலர் அஞ்சலி செய்து உணர்வு பூர்வமாக நினைவு கூர்வதுடன் தமது மகத்தான அரசியல் சாதனையாக தந்தை செல்வா ஆதாயப்படுத்தித் தந்திருக்கும் மரபுவழித் தாயகத்தின் ஒருமைப்பாட்டுக்கும், அதன் மாண்பிற்கும் ஊறு விளைவிக்க அனுமதிப்பதில்லை என உறுதி எடுத்துக் கொள்வோமாக.

-ஆனந்தன்-

# விண்ணில் சிக்கிய...

(1 ஆம் பக்கத் தொடர்)

சிறகுகளிற்கு போதிய சூரிய ஒளி கிடைக்கவில்லை. இதனால் மின் உற்பத்தி பாதிக்கப்பட்டிருந்தது. பல கருவிகள் இயங்க மறுத்தன. நிலையத்தினுள் வெப்பம் உயர ஆரம்பித்தது. வெப்ப நிலை 80. அளவை எட்டும் அளவுக்கு நிலமைகள் மோசமடைந்தன.

ஒரு புறம் விபத்தால் சேதமுற்று செயலிழந்து வரும் விண் நிலையம். மறு புறம் நிலையத்தில் இருந்த அத்தியாவசியப் பொருள்களின் அழிவும், விநியோகத்துக்கு அனுப்பப்பட்ட அத்தியாவசியப் பொருள்களின் இழப்பும் ஏற்படுத்தியுள்ள பொருள், பிராணவாயு பற்றாக் குறை.

## இயந்திரம் போல் இயங்கும் வீரர்கள்

வாயில் கௌவிய 'ரோச்லைட்' களுடன் இரு கரங்களும் இயந்திரம் போல இயங்கப்பல நாள்கள் திருத்த வேலைகளில் ஈடுபட்ட மூவரும் அவசர செய்திகளைப் பூமிக்கு அனுப்பிய வண்ணம் இருந்தனர்.

நூற்றுக்கணக்கான ரோச் பட்டரிகள், பல்புகள் இதர பல பொருள்களை அனுப்பி வைக்க நடவடிக்கை எடுக்கும்படி அவர்கள் கோருகிறார்கள்.

துல்லியமாகக் கணக்கிட்டு திட்டமிடப்பட்டு அனுப்பப்பட்ட கலம் இறுதி நேரத்தில் சற்றும் எதிர்பாராத விதத்தில் தாக்கிவிட்டுத் தலைமறைவான செயலால் கிடைக்க இருந்த பொருள்கள் கிடைக்காமல் போனதோடு மேலதிக தேவைகளும் ஏற்பட்டுவிட்டன.

பல ரொக்கெட்டுகள் வெடிக்க வைக்கப்பட்டு 'மிர்' கலம் தனது சரியான ஒழுங்கிற்கு திசை திருப்பப்பட்டது. அதன் அவசிய சக்தி விநியோக ஒழுங்குகள் சனிக்கிழமை 5 ஆம் திகதி அளவில் ஏதோ ஓரளவுக்குச் சீராக்கப்பட்டன.

சில திருத்த வேலைகளுக்கான அறிவுரைகளையும் ஆலோசனைகளையும் பூமியில் இருந்தே பெறவேண்டிய இக்கட்டான நிலைமைகளும் ஏற்படாமல் இல்லை. விண்ணில் இருந்தவர்களுக்கோ எல்லாத் தொழில் நுட்பமும் அத்துப்படி என்று கூற இயலாது.

## மாற்று ஏற்பாட்டுக்கும் நிபுணர்கள் முயற்சி

பேரழிவுகளை ஏற்படுத்தி விட்டுத் தொலைந்துவிட்ட 'Progress-m' இதற்குப் பதிலாக உடனடியாக ஒரு கலத்தை உதவிட அனுப்பும் சாத்தியம் பற்றி அமெரிக்காவும் ரஷ்யாவும் அவசர அவசரமாக ஆராயத் தொடங்கின. விபத்து ஏற்பட்ட கணம் முதல் இங்கு இருப்பவர்களும் இமைக்கா விழியுடனே கட்டளைகளைப் பிறப்பித்தபடியும் கருமங்களைக் கவனித்தபடியுமே காலங் கழித்திருக்கின்றார்கள்.

'அட்லான்டிஸ்' என்ற விண்கலம் 'மிர்' உடன் பொருந்தும்படியான கல அமைப்புகளைக் கொண்டிருந்தாலும் இதைச் செப்ரெம்பர் 18 வரையில்தான் அனுப்பக்கூடிய சாத்தியங்கள் தென்படுவதாகவும் அறிவிக்கப்படுகிறது.

கென்னடி உந்து தளத்தில் தயாராக நிற்கும் 'கொலம்பியா' விண் ஓடத்தை அரக்கப் பரக்கத் தயார் செய்து உடனடியாக அனுப்பி வைக்க முடியுமாயினும், அந்த ஓடம் தரையிறங்கும் வசதி கொண்டதே தவிர விண்ணில் மற்றொரு நிலையத்துடன் பொருந்தும் வசதியற்றது.

இந்த விண் ஓடத்தை 'மிர்' நிலையத்துக்கு நெருக்கமாகப் பறக்கவிட்டு 'மிர்' நிலையததில் உள்ள மூன்று வீரர்களையும் மாறி மாறி ஆகாயத்தில் — விண்ணில் — அந்தரத்தில் நடந்து, அசைந்து ஓடம் வரை சென்று அத்தியாவசியப் பொருள்களை 'மிர்' நிலையத்துக்கும் கொண்டு வந்து சேர்க்கலாம் என்றால் அதற்கும் வாய்ப்புகள் இல்லை. ஏனென்றால் இதற்கான நடவடிக்கைகளில் மூன்று வீரர்களும் ஈடுபடுவதற்கான உடனடிப் பயிற்சியோ ஏற்பாட்டுச் சாதனங்களோ 'மிர்' நிலையத்தில் இல்லை.

## வீரரின் நிலை மோசமடைந்தது

இதற்கிடையில் ஓய்வின்றி திருத்த வேலைகளில் ஈடுபட்ட விண்வெளி வீரர்களின் உடல் நிலை மோசமடைந்து வரும் கவலைக்குரிய செய்தியும் வெளிவந்துள்ளது. நிலையத்தின் பொறுப்பாளரான வசிலி சிபிலியெவ் இருதயப் பாதிப்பினால் அவதியுறுகிறார். அவசர திருத்த வேலைகளைச் செப்பனிட்ட பின்னர் ஓய்வு எடுத்துக் கொள்ளும்படி பூமியில் இருந்து வைத்திய ஆலோசனை அவருக்கு வழங்கப்பட்டிருக்கிறது.

கலத்துக்கு வெளியே வந்து விண்வெளியில் உலாவி அதன் வெளிப்புறத் தாக்கங்களைச் சீர்திருத்த வேண்டிய நிலைமையும் உருவாகி வருகிறது. 'சோலார்' சிறகுகளைச் சீர்படுத்தி, மீண்டும் இயங்க வைத்திடல் வேண்டும்.

ரஷ்ய — அமெரிக்க கூட்டு ஆராய்ச்சியான 'மிர்' விண்கலத்தில் ஏற்பட்டுள்ள தாக்கம் — தொழில் நுட்ப குறைபாடுகள் எல்லாம் இவ் விரு நாடுகளும் தமக்குள் பரஸ்பரம் குற்றஞ்சாட்டும் நிலைமைகளைத் தோற்றுவித்துள்ளன எனவும் —

இதனால் அமெரிக்கா இத் திட்டத்தில் இருந்து வாபஸ் பெறவேண்டிய நிலைமை ஏற்பட்டால் மீண்டும் விண்வெளியில் கூட்டு இல்லாத போட்டிகளே எஞ்சும் எனவும் — அஞ்சப்படுகிறது.

## நெருக்கடி முற்றுகிறது

இதற்கிடையில் —

கடந்த 17 ஆம் திகதி மின் விநியோக நடவடிக்கையைச் சீர் செய்து கொண்டிருந்த மூன்று வீரர்களில் ஒருவர் தவறுதலாக முக்கிய 'வயர்' ஒன்றை வெட்டி விட்டார் என்றும் —

இதனால் இதுவரை இருந்து வந்த கொஞ்ச நஞ்ச மின்சார விநியோகமும் துண்டிக்கப்பட்டு விண் நிலைய முழுவதும் இருளில் மூழ்கியதுடன், பூமியுடனான தகவல் தொடர்பும் செயல் இழந்ததாக அறிவிக்கப்படுகின்றது.

இந்த நெருக்கடிகளால் நிலையத்தில் உள்ள மூன்று வீரர்களினதும் உயிருக்கு ஆபத்து ஏற்படும் சூழ்நிலை உருவாகி வருகின்றது.

என்றாலும் இப்பிரச்சினைக்கு மத்தியில் ஆறுதல் தரும் தகவல் ஒன்று உள்ளது.

'மிர்' நிலையத்துடன் இணைக்கப்பட்டுள்ள 'சோயுஸ்' ராக்கெட் இன்னும் செயற்படக்கூடிய நல்ல நிலையிலேயே இருக்கின்றது.

இனியும் சமாளிக்க முடியாது என்ற நிலை வரும் போது விண்வெளி வீரர்கள் மூவரும் 'மிர்' நிலையத்தை விண்ணில் 'கை கழுவிவிட்டு' சோயுஸ் ராக்கெட் மூலம் பூமிக்குத் திருப்பி விட முடியும்.

பிராணவாயுப் பற்றாக் குறை உட்பட பெரும் நெருக்கடியை எதிர்கொண்டிருக்கும் விண்வெளி வீரர்களுக்கு உடனடியாக அவசர விநியோகப் பொருள்கள் கிடைக்காவிட்டால் இப்படித் தப்பி வருவதே ஒரே வழியாக இருக்கும்.

'மிர்' நிலையம் இன்னும் எவ்வளவு காலத்துக்கு பூமியில் உள்ள விண்வெளி நிபுணர்களின் கட்டுப்பாட்டில் இயங்கும்? அதில் உள்ள மூன்று மானிடரும் பத்திரமாக பூமிக்குத் திரும்புவார்களா? — இந்த ஏக்கமான கேள்விகளே இன்று எழுப்பப்பட்டு வருகின்றன. ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org